# கட்டுரைக் கோவை

பண்டித

லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

# கட்டுரைக் கோவை

TAMIL SANGAM

☆

ஆசிரியர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத்
தமிழாசிரியர்
(Senior Pandit in Tamil)

பண்டித, லெ. ப. கரு.
இராமநாதன் செட்டியார்

☆

1942

பதிப்புரிமை ஆசிரியர்க்கே] [விலை ரூ. 1—4—0

முதற் பதிப்பு செப்டம்பர் 1942

சக்தி பிரஸ் லிமிடெட், காரைக்குடி.



உயர்திரு, டாக்டர் ராஜா ஸர்

மு. அண்ணாமலைச் செட்டியார் Kt., LL. D. அவர்கள்

## உரிமை யுரை

என்னருமைக் கட்டுரைக் கோவையெனு மிச்சிறுநூல்
துன்னுபுகழ் முத்தையவேள் தோன்றலாய்ப்—பன்னுதமிழ்க்
கண்ணுய்த் திகழரசெற் காதரவாங் கண்ணுேட்டத்
தண்ணு மலைக்குரிமை யாம்.

வள்ளலிவன் தில்லையரன் நல்லருளால் வாழியவே
உள்ளமுவந் தின்பமெலா முற்று.

# பதிப்புரை

அமிழ்தினு மினிய செழுந்தமிழ் மொழியிற், பற்பல சமயங்களில், யான் எழுதிய, கட்டுரைகள் நான்கும், நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றும் ஆகிய ஐந்தையும் தொகுத்துக், கட்டுரைக் கோவை எனப் பெயரிட்டு, வெளியிடுகின்றேன்.

இவ்வைந்தனுள், உயர்திரு அண்ணுமலை யரசர் என்பது, டாக்டர், செட்டிநாட்டு ராஜா, ஸர் அவர்களின், அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நினைவு மலரிலும், பரிபாடல் என்பது, மகாமகோபாத்யாய, பண்டிதமணி அவர்களின், அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நினைவு மலரிலும், பண்டைத் தமிழரசரும் புலவரும் என்பது, அன்பளிப்பிலும், ஓருஞ் செய்யுள் என்பது, இந்திராவிலும் வெளிவந்தன. குறுந்தொகை-மருதம் என்பது, சென்னையிற், குறுந்தொகை மாநாட்டில் நிகழ்த்தப் பெற்ற சொற்பொழிவாம். இவற்றை வெளியிட்டுக்கொள்ள உடன்பாடளித்த பெரியார்களுக்கு என் நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம் நிறுவிய பெருங்கொடை வள்ளலும், களை களைந்து, தமிழ்ப் பயிரைப் போற்றுகின்ற தமிழ் வேந்தரும் ஆகிய, டாக்டர், செட்டிநாட்டு ராஜா, ஸர் திரு. மு. அண்ணுமலைச் செட்டியாரவர்கள், எனக்குப் பல்லாற்ருனும் நல்லுதவி புரிந்து, என் சிறப்புக்குக் காரணமாய், ஆதரவளித்து வருகின்ற

பெரு நன்றிக்கு அறிகுறியாக, என் முதல் வெளி யீடாகிய இச்சிறு நூலை, அவர்களுக்கு உளமுவந்து உரிமை யாக்கியுள்ளேன்.

நுண்மா ணுழைபுலச் செல்வரும், அவ்வப் போது எனக்கு வேண்டும் நலம் புரிகின்றவர் களும் ஆகிய, திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L. அவர்களும், புலவரெல்லாம் வியந்து வயப்படுமாறு கற்றுத் துறைபோய நற்றவக் குரிசிலும், என் உயர் வைத் தம் உயர்வாகவே கருதி உதவுகின்றவர்களும் ஆகிய மகாமகோபாத்யாய, பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்களும் இந்நூலுக்கு அரிய மதிப்புரை எழுதிச் சிறப்பித்தார்கள். என்பாற் பேரன்பு வைத்துள்ள இவ்விரு பெரியோர்கட்கும் என் உளமார்ந்த நன்றி யறிவைப் புலப்படுத்திக்கொள்ளுகின்றேன்.

சுருங்கிய காலத்துள், இந் நூலின் பதிப்பு வேலையை அழகுற அமைத்துத் தந்த, சக்தி அச்சுக் கூடத்தாரின் திறமை பாராட்டத் தக்கது.

திருச்சிற்றம்பலவன் திருவடி போற்றி.

அண்ணாமலை நகர்,
சித்திரபானு,
ஆவணி, உ௬.

லெ. ப. கரு. இராமநாதன்.

# மதிப்புரை

## அண்ணுமலைப் பல்கலைக் கழகத்
## தமிழ்ப் பேராசிரியர், பல்கலைப் புலவர்,
## திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள்
## M.A., M.L. எழுதியது.

திருவாளர், பண்டித, லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்கள் எழுதிய கட்டுரைகள், இனிய செந்தமிழ் நடையில் அமைந்து பொருள் நுட்பமும் சொற்சுவையும் பொருந்தித் திகழ்கின்றன ; அவற்றின் தொகுதியுள், உயர்திரு, அண்ணுமலையரசர் அவர்களைப் பற்றிய முதற் கட்டுரை, அவர்கள் வாழ்க்கை வரலாற்றின் சிறப்பியல்புகளைத் தொகுத் துரைப்பதுடன் பொருத்தமான சங்கநூல் மேற்கோள்களுடன் மிளிர்கின்றது.

பரிபாடலைப் பற்றிய ஆராய்ச்சியுரை, அந்நூலின் பல பகுதிகளையும் வகுத்து, அவற்றைப் பற்றிய விழுமிய கருத்துக்களைத் திரட்டி யுரைப்பதாகும். அந்நூல் கற்பாருக்கு அது சிறந்த தோற்றுவாயாகும். உரை நுட்பங்கள் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இக் காலத்தில் வடமொழியால் உணர்த்தப்படும் பல கருத்துக்கள், முற்காலத்தில் தமிழ்ச் சொற்களால் இயம்பப்பட்டன வென்பது புலனுகின்றது. களவொழுக்கம் தமிழிற்கே உரிய தென்பது அதன்கண் நாட்டப்பட்டது.

குறுந்தொகையுள் மருதத்தைப் பற்றிக் கூறும் கட்டுரையில், மருதமென்பது, முதல், கரு, உரிப்பொருள் பற்றி அமைந்திருப்பது குறிக்கப்பட்டது. அப்பகுதியுட் பண்டை வழக்கங்களும் வரலாற்றுக் குறிப்புக்களும் இனிது காணப்

படுகின்றன. தொல்காப்பியர் காட்டிய முறைப்படி அகப் பொருட் கூற்றுக்களை வகுத்துக் காட்டினமை பாராட்டத் தக்கது.

பண்டைத் தமிழரசரும் புலவருமென்ற கட்டுரை, பல வரலாற்றுக் கருத்துக்களைச் சுருக்கி யுரைத்தது. புல வரின் ஆற்றலும், பெருமையும் அவர்களை மதித்த அரசரின் சிறப்பும் அதன்கண் நன்கு தொகுக்கப்பட்டன.

சேக்கிழார் கவிநயத்தை ஓர் அருஞ் செய்யுளென்ற கட்டுரை தெற்றெனப் புலப்படுத்துவதாகும். திருமகன், அரும்பசு முதலிய வற்றின் பொருள் நுட்பம் பாராட்டத் தக்கது. இத்தகைய கட்டுரைகள், தமிழ் கற்கும் மாணவருக்கு, மாண்புமிக்க அறிவு விருந்தாகப் பயன்படுதற்குரியன; ஆதலின், அவை, உயர் கலாசாலைப் பாடப் பகுதிகளாக நியமிக்கப்படும் தகுதி வாய்ந்தன.

# மதிப்புரை

மகாமகோபாத்யாய

முதுபெரும் புலவர், பண்டிதமணி

## திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்

(Adviser in Tamil Research, Annamalai University)

எழுதியது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆசிரியர், பண்டிதர். திரு. லெ. ப. கரு. இராமநாதச் செட்டியாரவர்கள் வெளியிட்ட, கட்டுரைக் கோவை என்னும் புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். இதன்கண் ஐந்து கட்டுரைகள் உள்ளன.

முதற் கட்டுரையில், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவிய பெருங்கொடை வள்ளலாகிய செட்டிநாட்டு ராஜா ஸர் அவர்களுடைய, மனை வாழ்க்கையின் மாண்பு, செல்வச் சிறப்பு, கல்வியறிவு, கருதிய செயல்களை முடிக்கும் திறமை, பல்கலைக் கழகங் கண்ட பெருமை, அரசினர் வழங்கிய பட்டப் பேறுகள் முதலிய சிறப்புக்கள் எல்லாம் சுருக்கமும் தெளிவுந் தோன்ற விளக்கப்பட்டுள்ளன; இக் கட்டுரையை முதற்கண் அமைத்தது, ராஜா ஸர் அவர்களிடத்து நூலாசிரியருக்குள்ள பெருமதிப்பையும், நன்றியறிவையும் புலப்படுத்துகின்றது. எல்லா நலங்களும் நிரம்பப் பெற்றுச் சிறந்து விளங்கும் பெரியார் ஒருவர் வாழ்க்கை வரலாறு, உலகத்து மக்களின்

ஒழுகலாற்றுக்குப் பெரிதும் உதவியாகும்; ஆதலின் தொடக்கத்தில் இதனை அமைத்தது பொருத்தமே.

பரிபாடலைப் பற்றிய இரண்டாவது கட்டுரை, மிக விரிவாக ஆராயப்பட்டு இப் புத்தகத்தின் பாதியளவுக்கு மேல் இடம் பெற்றுள்ளது. பரிபாடல் அகமும் புறமுந் தழுவிப் பண்ணுடன் அமைந்த சங்க இலக்கியமாகும்; சொற்பொருள் வளங்களாற் சிறந்து விளங்குவது; இப்பரிபாடற்கண் அமைந்த இயற்கை வனப்புக்களும், தெய்வங்களைப் பற்றிய செய்திகளும் ஆடவர் மகளிர் காதற் குறிப்புக்களும், வாழ்க்கை முறைகளும், பிறவும் மிக நுட்பமாக ஆராய்ந்து விளக்கப் பட்டுள்ளன; இப் பரிபாடலுக்குச் சிறந்த உரையாசிரியரான பரிமேலழகர் வகுத்த, உரை நுட்பங்களை எடுத்துக் காட்டியிருப்பது பாராட்டத் தக்கது; பரிபாடலை முற்றுந் தெளிவாகப் படித்து, முன் பின் ஒற்றுமை காட்டிப், பிற நூற் கருத்துக்களையும் இயைத்துப், பாடற் பகுதியின் பொருள்களை வேண்டுமிடங்களில் உரைநடைப் படுத்தி விளக்கிச் செல்லும் ஆசிரியரின் ஆராய்ச்சி வன்மை போற்றத் தக்கதாகும். இங்ஙனம் ஒரு சிறந்த நூலை முற்றும் ஆராய்ந்து வெளிப்படுத்தும் கட்டுரைகளே, பயில்வார்க்கு மயக்கமின்றிப் பொருளைத் தெளிந்துகொள்ள உதவியாகும்.

குறுந்தொகையில் மருதத்திணைபற்றிய மூன்றாவது கட்டுரையில், சுவை மிக்க செய்திகள் பல காணப்படுகின்றன; சங்க நூல்களில் எடுத்தாளும் உவமங்களின் அழகும், உள்ளுறை யுவமங்களின் அருமையும், வேறிடத்துக் காணப்படாத அகப்பொருளின் நாகரிகங்களும் தெளிவுற விளக்கப்பட்டுள்ளன.

"பண்டைத் தமிழரசரும் புலவரும்" என்னும் நான்காவது கட்டுரையில், புறநானூற்றிற்கண்ட அரிய பல செய்திகளை ஆதாரமாகக் கொண்டு, தமிழ் நாட்டு மன்னர், புலவரைக் கண்ணுகக் கொண்டொழுகிய செய்திகளும், தமிழ்ப் புலவர்களுடைய வீறு சான்ற இயல்புகளும், நடுவுநிலை பிறழாத நன்னெஞ்சமும், அன்புமிக்க அரசர்களுடைய வாழ்விலும் தாழ்விலும் புலவர்க்குள்ள ஈடுபாடும், பிறவும் தெளிவிக்கப் பட்டன.

"ஓரருஞ் செய்யுள்" என்னுந் தலைப்பில் எழுதப் பட்ட ஐந்தாவது கட்டுரை, பெரிய புராணப் பாசுரம் ஒன்றன் நுண் பொருள்களைப் புலப்படுத்தி இன் புறுத்துவதாகும்; சொற்ருேறும் அமைந்த பொருள் நலங் களை மரபு பிறழாது எடுத்துக்காட்டி விளக்கியிருப்பது, கட்டுரை யாசிரியரது நுண்ணறிவின் திறமையைப் புலப்படுத்துவதாகும். இன்ன பல நலங்களால், இக் கட்டுரைக் கோவை, கல்வி நிலயங் களிலே, உரைப் பகுதிக்குப் பாட புத்தகமாக வைத்தற்குத் தகுதியுடையதாகும் என்பது விளங்கும்.

இதன் ஆசிரியராகிய, பண்டிதர் இராமநாதச் செட்டி யார், மிக்க இளம்பருவத்தே சிறந்த தமிழ்க் கல்வி யுடைய ராய்த் தமிழ்ச் சங்கத்துப் பிரவேச பாலபண்டித பண் டித என்னும் முத்திறத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றுச், சங்க இலக்கிய முதலிய பல அரிய நூல்களை ஆராய்ந்து பயின்றவர்; எத்திறத்து மாணவரையும் தம் வயப்படுத்துக் கல்வி பயிற்றும் ஆற்றலுடையவர்; இவர் நூலாராய்ச்சித் திறமைக்கு, இக் கட்டுரைக் கோவையே சான்ருக விளங்கும்.

இதன் ஆசிரியர், தம் முதல் வெளியீடாகவுள்ள இக் கட்டுரைக் கோவையைச், செட்டிநாட்டரசர் அண்ணுமலை வள்ளலவர்களுக்கு, அவர்கள் பெருமைக்கும் நன்றிக்கும் அறிகுறியாக உரிமைப்படுத்தியது பெரிதும் பாராட்டத்தக்கது.

பண்டிதர், இராமநாதன் அவர்கள், இதுபோல் இன்னும் பல தமிழ்ப் பணிகளைச் செய்து, நீடு வாழ்கவெனத், திருவருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | உயர்திரு. அண்ணாமலையரசர் | 1 |
| 2. | பரிபாடல் | 12 |
| 3. | குறுந்தொகை—மருதம் | 79 |
| 4. | பண்டைத் தமிழரசரும் புலவரும் | 106 |
| 5. | ஓரருஞ் செய்யுள் | 114 |


MADURA TAMIL SANGAM

# கட்டுரைக் கோவை

## க. உயர்திரு, அண்ணாமலை யரசர்*

பெருமை தங்கிய டாக்டர் செட்டிநாட்டு ராஜா ஸர் சா. ராம. மு. அ. அண்ணாமலைச் செட்டியார் Kt., LL. D. அவர்கள், இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த கானாடு காத்தான் என்னும் நகரில், தனவணிகர் மரபில், இளையாற்றங்குடிக் கோயிலிற், பட்டினச்சாமி என்ற பிரிவைச் சேர்ந்த முத்தைய செட்டியாரவர்கட்கு மீனாட்சி ஆச்சி அவர்களிடம் விஷு யாண்டு புரட்டாதித் திங்கள் ௰௫ (30-9-1881) ஆம் நாளில் தோன்றிய தவப்புதல்வராவார்கள். நிகழும் விஷு யாண்டு புரட்டாதித் திங்கள் ௰௨ (28-9-1941) ஆம் நாளில் இவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவெய்துகின்றது. இவர்கள்,

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு."

என்பதற்கேற்பத் தம் மனைக்கு விளக்காய் நற்குண அரசியாய்த் திகழும் சீதை ஆச்சி என்னும் நங்கையோடும், அறிவறிந்த மக்கள் எழுவரோடும், அவர்கள் மக்களோடும், மகிழ்ந்து வாழ்கின்றார்கள். சீதை ஆச்சியார், தம் பெயருக்கேற்ப எட்டு இலக்குமிகளாகவே இலங்குகின்றார்கள்.

---

* ராஜா அவர்களின் 60 ஆம் ஆண்டு நிறைவு விழா நினைவு மலரில் வெளிவந்தது.

## குமார ராஜா

இவர்களின் முதற் புதல்வரும், சென்னையிற் கல்வி மந்திரியாயும், இருமுறை மேயராயும், பன்முறை சட்டசபை உறுப்பினராயும், ஜஸ்டிஸ் கட்சித் தலைவராயும், இன்னும் பல கூட்டங்களில் தலைவராயும், உறுப்பினராயும் அமர்ந்து சிறந்த பல செயல்கள் செய்து நாட்டுக்கும் மொழிக்கும் பேருதவி புரிந்து வருபவர்களும், அறிஞரெல்லாம் மதிக்குமாறு, உள்ளத்திற் பதிந்து உணர்ச்சி தரும் பச் சொற்பொழி வியற்றுந் திண்மை, அறிவின் நுண்மை, வண்மை முதலிய உயர் குணங்கட்கு உறைவிடமும் ஆகிய குமார ராஜா ஸர் முத்தைய செட்டியார், B. A. அவர்களை அறியாதார் ஒருவருமிலர்.

> " நீவா ழியர்நின் தந்தை
> தாய்வா ழியர்நிற் பயந்திசி ஞோரே "

என அவர்களை வாழ்த்துவோமாக.

## கல்வியும் நுண்ணறிவும்

அண்ணாமலையரசர், தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி யுடையவர்களாய், மாபெருங் கூட்டங்களில் தலைமை தாங்கிக், கேட்டாரனைவரும் வியப்புற்று வயப்படுமாறு சொற்பொழிவாற்றுதலைக் கண்கூடாகக் காண்கின்றோம். இவர்கள் திறந்து வைத்து அறிவுரை வழங்கிய அறநிலையங்கள் பல. நகரத்தார்களின் தொண்ணூற்ருறார்க் கூட்டத்திலும், பிறகூட்டங்களிலும் யாவரும் உடன்படுமாறு பேசி இவர்கள் செய்த நலங்கள் பல. தம் குல விச்சையாகிய வாணிகத்தொழிலில் நிகரற்ற திறம்

படைத்தவர்கள் என்பதற்கு இவர்களின் பரந்த வாணிகமும் விரிந்த செல்வமுமே சான்றும். தன வணிகருட் பாங்கிவைத்தல் முதலிய முறைகளை முதலில் மேற்கொண்டு நடாத்தி வருகின்ற சிறப்பு இவர்கட்கேயுரியது. இன்கம்டாக்ஸ் கமிஷனில் ஒருறுப்பினராயிருந்து இவர்கள் தம் நுண்ணறிவாற் செய்த நன்மைகள் தனவணிகர்களாலும் மற்றைச் செல்வர்களாலும் என்றும் மறக்கப்படாதன.

லண்டன்மா நகருக்குச் செல்லுங்கால் வங்கத்தில் இவர்களோடு அளவளாவிய ஓராங்கிலேயப் பெரியார், '**இவர்கள் அறிவு இவ்வுலக முழுதையும் ஆளும் ஆழமுடையது**' எனக் கூறியதாக யான் கேள்வியுற்றதுண்டு.

> **" இருவே றுலகத் தியற்கை திருவேறு**
> **தெள்ளிய ராதலும் வேறு "**

எனத் தேவர் கூறிய உலகியல்புக்கு மாறாக, இவர்கள்பாற் செல்வமும் அறிவும் திகழ்தல் பெருந்தவப் பயனேயாம்.

## பிற சிறப்பியல்புகள்

இவர்கள் தில்லைச் சிற்றம்பலவன் திருவடிகளை உள்ளத்துட் பதித்தவர்கள்; "மடியிலான் தாளுளாள் தாமரையினாள்" "முயற்சி திருவினையாக்கும்" என்னும் முதுமொழிகளை நன்குணர்ந்து சோம்பலை வேரறக் களைந்து விடாமுயற்சியை மேற்கொண்டவர்கள்; எச்செயலையும் எண்ணித் துணிந்து எண்ணியாங்குச் செய்து முடிக்குந் திண்மை வாய்க்கப்

பெற்றவர்கள்; இவர்களின் அசைவிலா ஊக்கமே ஆக்கம் அதர்வினய் வருதற்கும் உலகத்துயர்ந்த வள்ளியரென யாவருங் கொள்ளுதற்குங் காரணமா யுள்ளது.

"இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னஃதொப்ப தில்"

என்புழி, வள்ளுவர் பெருமான், வாய்த்தலரிதென்று கூறிய மறவாமைக் குணம் இவர்கள்பால் இனிது நிலைபெற்றுள்ளது.

"சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்"

என்னும் பொய்யா மொழியில் யாவருக்கும் எளிய வெனவும் அரிய வெனவுங் கூறப்பட்ட சொல்லு தலுஞ் செய்தலும் இவர்கட்கு முறையே அரியவாக வும் எளியவாகவும் அமைந்துள்ளன. இஃதொன்றே இவர்கள் வீறுடைமைக்குத் தக்க சான்றாகும்.

தாம் அரசராதற்கியைய ஆட்சி புரியுந்துறையில் ஒப்புயர்வற்றவர்கள்;

"இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்"

என்னும் அறிவுரைக்குப் பல உதாரணங்கள் இவர் கள்பால் நாம் கண்டு வியக்குமாறு உள்ளன.

## அறம்

செல்வரிற் பலர் தம் செல்வத்தைத் தமக்கும் பிறர்க்கும் பயன்படுத்தாது, பற்றுள்ள மென்னும்

இவறன்மையை மேற்கொள்ளுகின்றனர்; இவர்கள் அங்ஙனமின்றிச் "செல்வத்துப் பயனே யீதல்" என உணர்ந்து இயற்றிய அறங்கள் எத்துணையோ பல.

உடற்கு உறுதிபயக்கும் உண்டிச்சாலைகட்கும், மருத்துவச்சாலைகட்கும், உயிர்க்கு உறுதிபயக்குங் கல்வி நிலையங்கட்கும், தெய்வத் திருக்கோயில்கட்கும் பெரும் பொருள் வழங்கியுள்ளார்கள். "மகனறிவு தந்தையறிவு" என்னும் முதுமொழிக்கிணங்க, இவர்கள் தந்தையார், சிற்றம்பலத்திற் பொன்வேய்ந்ததும், தமையனார், தில்லையில் ஒருயர்தரப்பள்ளி நிறுவியதும், உண்ணு நீரளித்ததும் முதலிய முன்னையோர் செய்த அறங்கள் உன்னி மகிழற்பாலன.

ஈத்துவக்கும் இன்பம் அறிந்த அண்ணாமலை வள்ளல்

"எத்துணை யாயினு மீத்த னன்றென
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர், வறுமைநோக் கின்றவன் கைவண் மையே."

என்றாங்கு மறுமை நோக்காது பிறர்வறுமை நோக்கிப் பேரருளாற் செய்த அறங்கள் பலவற்றைப் பலர் வாயிலாகப் பன்முறை கேட்கின்றோம்; இங்ஙனங் கொடுப்பாரைக் காண்டலரிது. வள்ளல்களின் இயல்புகளென நூல்களிற் படித்தறிந்தவற்றை இவர்கள்பால் நேரிற்கண்டு வியக்கின்றோம். இவர்களைப் பாடியும், சிறந்த தமிழ் நூல்களை இவர்கட்கு உரிமையாக்கியும் புலவர் பெருமக்கள் பெற்ற பரிசில்கள் பல. யான் இளமைப்பருவத்துக், கொழும்பில், இவர்

கள் ராஜா என்னும் பட்டமெய்தியதைப் பாராட்டிப் பாடியபோது, என் ஆசிரியருக்குப் பல பவுன்கள் வழங்கிய வள்ளன்மையையும் மறவாது ஈண்டுக் குறிப்பிடுகின்றேன். மூவேந்தருமற்றுச் சங்கமும் போய்ப் பாவேந்தர் காற்றிலிலவம் பஞ்சாகப் பறக்கையில் தேவேந்திர தாருவைப்போல் இவர்கள் தோன்றி ஆதரித்துப், பல்கலைக் கழக வாயிலாகவும், வேறுபல வழிகளிலும் தமிழை வளர்த்து வருவது இவர்கட்கே யுரிய தனிப்பெருஞ் சிறப்பாம். அண்மையில், இவர்கள், தமிழிசை வளர்ச்சி கருதிப் பெரும்பொருள் வழங்கியதும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற் பெரியதொரு தமிழிசை மாநாடு நிகழ்ந்ததும் அறிஞரறிந்தனவே. "அருளினதுறையுள் நல்லறத்தின் வேலி" உள்மருளறு தமிழ்மொழி வளர்க்கு மன்னவர் என்று இவர்களைக் கூறுதல் மிகப் பொருத்தமாம்.

## அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

அறங்களுட் சிறந்தது மக்கள் அகக் கண்ணைத் திறக்கும் கல்வி கற்பித்தலே என நன்குணர்ந்த இப்பெரியார், தம் பெயரால் அண்ணுமலைநகர் என ஒருநகரமைத்து, ஆண்டு அண்ணுமலைப் பல்கலைக் கழகம் என ஒரு கலைக்கழகம் நிறுவிய பெருமை உலகம் அறிந்ததே; அண்ணுமலைநகரின் அமைப்பு, மனத்தைத் தூயதாக்கிக் கல்வியை வளர்க்கு நிலையில் மிளிர்கின்றது; பல்கலைக் கழகம், தகுதிவாய்ந்த அதிகாரிகளையும், கல்வி சான்ற ஆசிரியப் பெரியார்களையும், கலைபயில் விநோதர்களாகிய பன்னூறு மாணவ மாணவிகளையுந் தன்னகத்துக் கொண்டு கலைமகள்

இல்லம்போற்கவினுறுகின்றது; அது, ஏனையிடங்களிற் கற்பிக்கப்படாத தமிழ் ஆனர்ஸ் வகுப்புக் கல்வியும், ஏனையிடங்களில் இல்லாத பண்டிதர் பயிற்சிக் கல்வியும், இன்னும் பல சிறந்த கல்விகளும் மல்கப்பெற்று அறிவின் திருவுருவாய் விளங்குகின்றது; ஆண்டுக் கரும்பயிலக் கூலிகொடுத்தல் போலத் தமிழ், வடமொழி, இசை இவற்றைப் பயிலும் மாணவர்கட்கு இலவசக்கல்வியும், செல்வமும் உதவப்படுகின்றன; ஏனைக்கல்வி பயிலு மாணவரிலும் பலர் இலவசமாகப் பயில்கின்றனர்.

ஆங்கிலேய ராட்சிக்குட்பட்ட இடங்களிற், பிறருதவியின்றி ஒருவரால் நிறுவப்பெற்ற பல்கலைக் கழகம் இஃதொன்றேயெனின், இதனை நிறுவிய இப்பெருந்தகையாளர் புகழ் இவ்வுலகம் உள்ளளவும் நிலைபெறுமென்பது வெள்ளிடைமலையாம்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு,"

என்றவாறு, இவ்வுலகம் இவர்கட்குக் கைம்மாறு புரியும் ஆற்றலில்லாதது; ஆதலாற் பன்முறை பல்லாண்டு கூறுங் கடப்பாடுடையதாம்.

## அரசாங்கம்

இவர்கள் சென்னை அரசாங்க சபையிலும், டில்லி அரசாங்க சபையிலும், இன்னும் பல அரசியற் கழகங்களிலும் உறுப்பினராயமர்ந்து ஆற்றிய நற்செயல்கள் பற்பல; பதவியை விரும்பாமற் செய்த அருஞ் செயல்களும் பல. வைசிராய் அவர்கள்

ஆலோசனைக்காக இவர்களை டில்லிக்கு அழைத்தார்களெனின் இவர்கள் அறிவாற்றல்கள் அளவிட்டுக் கூறுந்தரத்தவோ?

இவர்கள் தகுதியையும் ஆற்றலையும் அறிந்த அரசாங்கத்தார், இவர்கட்கு ராவ்பஹதூர், திவான்பஹதூர், ஸர், ராஜா என்னும் பட்டங்களையும், சென்னைப் பல்கலைக் கழகத்தார் டாக்டர் என்னும் பட்டத்தையும் வழங்கியது போற்றத் தக்கதே; இப் பட்டங்கள் இப்பெரியாரைச் சேர்ந்தமையாற் சிறப்புற்றன என்றே கூறவேண்டும்.

## ராஜா

பிறரெல்லாம் மறத்தினல் அரசரானர்கள்; இவர்கள் அங்ஙனமின்றி அறத்தினல் அரசரானர்கள்; இதனைக் குறித்து யான்

**மறத்தினு லாகிய மன்னரைப் போலா**
**தறத்தினு லாய வரசே**

எனப் பாடியதுண்டு. இவர்கள் பரம்பரையாக ராஜா என்னும் பட்டமெய்தியபோது கோவிலூர், கொழும்பு, சிங்கப்பூர், இரங்கூன் முதலிய இடங்களில் நிகழ்ந்தபாராட்டுச் சிறப்புக்கள் தனிப் புத்தகமாக எழுதத்தக்கன; 19—5—1929-ல் கொழும்பில் நடந்த சிறப்பை, யானும் காணும் பேறு பெற்றதுண்டு. வரவேற்பதற்குப் புகைரத நிலையத்திற் பதினயிரக் கணக்கான மக்கள் திரண்டனர்; புகைரத நிலைய முதற் செட்டியார் தெருவரை எந்திர வூர்திகள் ஓடவியலாமல் நகர்ந்தன; செல்ல வழியின்றி நின்ற ஊர்

திகள் எத்துணையோ பல. பாராட்டுக் கூட்டம் பெரிய தொரு மண்டபத்தில் நிகழ்ந்தது; ஆண்டு ஆயிரக்கணக்கான பெருமை வாய்ந்த மக்கள் குழுமி னர்; சிறந்த கல்வியும், சீர்த்தியும் நிறைந்த ஸர், பொன். இராமநாதன் அவர்கள் தலைமை பூண்டு பாராட்டி வாழ்த்தினர்கள். அந்நாளிற் கொழும்பு நகர் முழுதும் திருவிழா நிகழ்வது போலவே காணப் பட்டது.

தனவணிகரனைவருங் கோவிலூரிற் கூடிப் பாராட்டிய பெருமை ராஜா அவர்கட்கே யுரியது.

## லண்டன் மாநகர்

இவர்கள் பொதுவாகப் பர்மாவிலுள்ள இந்தியர் நலமும், சிறப்பாக ஆண்டுள்ள தனவணிகர் நலமுங் குறித்து லண்டன் மாநகருக்குச் சென்று வேண்டு வன செய்து உதவினர்கள்; இவர்கள் அரசியாருடன் லண்டன் மாநகருக்குச் சென்று, அவண் வீற்றிருந்த அரசர் பெருமானுலும் ஏனை அரசியற் றலைவர்களா லும் போற்றப் பெற்று வந்ததும், அதன் பயனுக இரங்கூன் சட்டசபையில் தனவணிக மக்களுக்கு ஓரிடமும், வேறு சில நன்மைகளும் உண்டானமை யும், அந்நன்றிக் கறிகுறியாகக் கோவிலூரில் தன வணிகர் நடாத்திய பாராட்டுக் கூட்ட நிகழ்ச்சிகளும் இன்றும் நினைவிலுள்ளன; அக் கூட்டத்தில் யானும் பாராட்டி மகிழ்ந்ததுண்டு.

தனவணிகருள் நம் மன்னர் பெருமானைக் கண்டு அளவளாவி மகிழ்ந்த பெரியார் இந்நாள் வரை இவர்

கள் ஒருவரே யாவர். பெண்கள் கடல் கடத்தலாகாது என்று கருதிய வணிகர் குலத்தில் தம் மனைவியாரை நெடுந் தூரத்திலுள்ள லண்டன்மாநகருக்கும், அங்கிருந்து பிரான்சு முதலிய இடங்களுக்கும் இவர்கள் அழைத்துச் சென்று வந்தது போற்றத் தக்கது. இதற்குமுன் ஒரு முறையும் இவர்கள் லண்டனுக்குப் போய் வந்ததுண்டு. தனவணிகர் தொன்று தொட்டுச் செல்வம் உடையராயினும் அரசாங்கத்தாரால் நன்மதிப் பெய்திப் பட்டங்களும் பதவிகளும் பெறுதற்கு ராஜா அவர்களே சிறந்த காரணமாவார்களென்பது மறுக்க வொண்ணாதது. உலகப் பெருமக்கள் சிலருள் இவர்கள் ஒருவரென்பது அறிஞரனைவர்க்கும் ஒப்ப முடிந்ததே. இவர்களை ஒரு முடிசூடா மன்னரென்று கூறின் அது மிகையாகாது.

"வாணன் புகழ்க்கெல்லை வாழ்த்துவோர் நாவெல்லை" என்றாங்கு இவர்கள் பெருமைக்கு எல்லை, என்றும் புகழும் புலவோர் நாவெல்லையேயாம். அதனை "விரிப்பி னகலும் தொகுப்பி னெஞ்சும்."

## வாழ்த்துரை

நாட்டுக்கும் மொழிக்கும் பேருதவிபுரியும் இவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவுத் திருவிழாவைக் கொண்டாடுதல் எல்லோருக்கும் முதற் கடமையாகும். இவர்கள் உருவச்சிலை பெரிய நகரங்களெங்கும் நிறுவப்பெற வேண்டும். இவ்வேந்தர் வரலாறு அறிஞரால் விரிவாக எழுதப்பெற்றுப் பெரியராலும், இனி உலகம் உயர்நிலை யடைதற்குக் காரண

மாகவுள்ள எல்லா மாணவ மாணவியராலும் பயிலப் பெற வேண்டும்.

எல்லாப் பேறுகளும் பெற்றிலங்கும் நம் ராஜா அண்ணாமலை வள்ளல் இன்னும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று இன்புற்றுப், பல்லாண்டு வாழுமாறு திருவருள் புரியக், கருணைக் கடலாகிய சிற்றம்பலவன் திருவடிகளை நீள நினைந்து நித்தலுந் தொழுகின்றேன்.

## உ. பரிபாடல் *

இந்நூல் புலவர் பெருமக்களுடைய அறிவுருவாகிய எட்டுத் தொகையுள் ஒன்றாகும். எட்டுத் தொகையுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்னும் ஐந்தும் அகப்பொருள் பற்றியும், பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள் பற்றியும் வருவனவாம். பரிபாடல் அகப்பொருளும், புறப்பொருளும் பற்றி வருவதாம். இக்கருத்துப் புலனாகவே,

> " நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
> றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
> றித்திறத்த வெட்டுத் தொகை "

என்னும் பாடலில் பரிபாடலைப், புறப்பொருள்பற்றிய பதிற்றுப்பத்துக்கும் அகப்பொருள் பற்றிய கலித்தொகைக்கும் நடுவே ஐந்தாவதாக வைத்தனர் போலும். இப்பாடலில் 'ஓங்கு பரிபாடல்' என்று பாராட்டப்பட்டிருத்தலானும், 'இன்னியன்மாண்டேர்ச்சி † யிசைபரி பாடல்' (11,137) என்று ஆசிரியனல்லந்துவனார் பாராட்டி, இப்பரிபாடல் பெற்றமையை வையைக்குச் சிறப்பாகக் கூறியிருத்தலானும் இதன் பெருமையை உணரலாம்.

---

* பண்டிதமணி அவர்களின் 60 ஆம் ஆண்டு நிறைவு விழா நினைவு மலரில் வெளிவந்தது.

† இசைப் பரிபாடல் எனக்கொள்ளினும் மிக்க பொருத்தமுடையதாகும்.

இந்நூல், பரிபாடல் என்னும் பாவினல் தொகுக்கப்பட்டமையால் இப்பெயர்த்தாயிற்று. பரிபாடல் தெய்வமுங் காமமும் பொருளாக வருமென்பது அறிஞர்கட்கு ஒப்ப முடிந்ததே. பேரின்பமுஞ் சிற்றின்பமுமாகிய இருவகை இன்பப் பகுதிகளையுங் கூறுவதென்பது ஈண்டு உணரத்தக்கதாம். பரிபாடற்பா, பலவகைப்பாவடியும் ஏற்று வருவதாம். இதன் இலக்கணங்களைத் தொல்காப்பியத்துக் காணலாம். இப்பாடல்கள் இசையுடன் பாடப்பட்டன வென்பது, தேவாரங்களிற் போலப் புலவர் பெருமக்களாற் பண் வகுக்கப்பட்டிருத்தலானும், முதற் பாடலீற்றிற் பரிமேலழகர் "பரிபாட்டென்பது இசைப்பாவாதலான்" என்றெழுதி இருத்தலானும், "கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன" என்னும் (தொல், செய், சூ, 242) பேராசிரியர் உரையானும் புலனும். இதனல் தமிழர்களுடைய இசைப்பயிற்சி தொன்றுதொட்டதென்பது தெளிவாம்.

எழுபது பரிபாடல்க ளிருந்தன வென்பது பண்டை யுரைகளா லறியப் படினும் இப்பொழுது காணப்படுவன தொடர்ச்சியாகவுள்ள இருபத்திரண்டு பாடல்களும், பழைய வுரைகளிற் காட்டப்பட்ட இரண்டு முழுப்பாடல்களும் சிலவுறுப்புக்களுமேயாம். தொடர்ச்சியாகவுள்ள இருபத்திரண்டு பாடல்களுள் செவ்வேளுக்கு எட்டுந், திருமாலுக்கு ஆறும், வையைக்கு எட்டும் உள்ளன. ஏனைய திருமாலையும் வையையையும் மதுரையையும் பற்றியன.

இந்நூற்குப் பரிமேலழகருரை அணிகலம்போல் விளங்குகின்றது. அஃதின்றேல் நாம் இதன்கண் உள்ள நுண்பொருள்களைக் கண்டு இன்புறல் இயலாது. இந்நூலில் எனக்குத் தோன்றுவனவற்றைத் தொகுத்துச் சில பகுதிகளாக வகுத்தெழுதுகின்றேன்.

## செவ்வேள்

5, 8, 9, 14, 17, 18, 19, 21-ஆம் பாடல்கள் செவ்வேளுக்குரியன; இவற்றைப் பாடியவர் கடுவனிளவெயினனாரும், ஆசிரியனல்லந்துவனாரும், குன்றம்பூதனாரும், கேசவனாரும், நல்லழிசியாரும், நப்பண்ணனாரும், நல்லச்சுதனாரும் ஆவர். இப்பாடல்களிற் செவ்வேள் பிறப்பு, சூரனைக் கொன்றமை, கௌஞ்சமலையைப் பிளந்தமை முதலிய வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. பிறப்புவரலாறு கந்தபுராணத்திற் கூறப்பட்டதின் வேறாகக் காணப்படுகின்றது.

"மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோள்
ஞாயிற்றேர் நிறத்தகை" (5. 11-12)

"உடையு மொலியலுஞ் செய்யைமற் றாங்கே
படையும் பவழக் கொடிநிறங் கொள்ளும்
உருவு முருவத்தீ யொத்தி முகனும்
விரிகதிர் முற்றா விரிசுட ரொத்தி" (19. 97-100)

"தொட்டதை.........அடையல்" (21. 3-7)

என்னும் பகுதிகளாற் செவ்வேள் அறுமுகமும், பன்னிருகையுஞ் செந்நிறமும் உடையவனைச், செவ்வாடையுடுத்துச், செங்கடப்ப மலர்மாலையணிந்து,

வேல்பிடித்து, அடையற் செருப்புத்தொட்டு, இளைய வீரனைய் நம்முன்னர்த் திகழ்கின்ருன்.

" மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடிப்
பிணிமுக மூர்ந்த வெல்போ ரிறைவ" (17. 48-49)

என்பதனுல் அவன், மயிலுங் * கோழிக்கொடியும், பிணிமுகமென்னும் யானையாகிய ஊர்தியும் உடையான் என்பது புலனும்.

" ஆராவுடம்பின்......ஆறிருகைக்கொண்டு "(5. 55-68)

என்பதனுல் அவன், மறி, மஞ்ஞை, வாரணச்சேவல், சாபம், மான், வாள், ஈட்டி, குடாரி, கணிச்சி, கனலி, மாலே, மணி என்னும் இப்பன்னிரண்டனேயும் பன்னிரு கரங்களிலும் கொண்டுள்ளானென்பதும், அவை, அவன் இந்திரனை வென்றவுடன் இவ்வாற்றலுடைய இவனே நம் சேனைத் தலைவனெனக் கருதித் தேவர்களால் தம் உடலினின்று பிரித்துக் கொடுக்கப்பட்டன வென்பதும், அவற்றுள் கோழி தீக்கடவுளாலும், மயில் இந்திரனுலும், யாடு யமனுலுங் கொடுக்கப்பட்டன வென்பதுந் தெரிகின்றன.

" நீயே வரம்பிற்றிவ் வுலகம் " (5. 17)

" சிறப்பினு ளுயர்பாகலும்
பிறப்பினு ளிழிபாகலும்
ஏனோர்நின் வலத்தினதே " (5. 19-21)

" எருமை யிருந்தோட்டி எள்ளீயுங் காளை "
(8. 86)

* மயில் ஊர்தியாகவும், கொடியாகவும் கூறப்படும்.

என்பனவற்றுற் செவ்வேளின் தலைமையும், ஆற்ற லும் அழகுறக் கூறப்படுகின்றன.

" நின்குண மெதிர்கொண்டோ ரறங்கொண்டோ ரல்லதை
மன்குண முடையோர் மாதவர் வணங்கியோ ரல்லதை
செறுதீ நெஞ்சத்துச் சினநீடி னோரும்
சேரா வறத்துச் சீரி லோரும்
அழிதவப் படிவத் தயரி யோரும்
மறுபிறப் பில்லெனு மடவோருஞ் சேரார்
நின்னிழல் அன்னோ ரல்ல தின்னோர்
சேர்வா ராதலின் யாஅ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பால்
அருளு மன்பும் அறனு மூன்றும்
உருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே" (5. 71-81)

என்புழி, 'யாஅமிரப்பவை பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பால் அருளு மன்பும் அறனு மூன் றும்' என்னும் அடிகட்குப் பரிமேலழகர், "நின்னை யாமிரப்பவை நுகரப்படும் பொருள்களும் அவற்றை உளவாக்கும் பொன்னும் அவ்விரண்டானு நுகரும் நுகர்ச்சியுமல்ல; எமக்கு வீடு பயக்கும் நின்னரு ளும் அதனை உண்டாக்க நின்னிடத்து யாம் செய்யு மன்பும் அவ்விரண்டானும் வரும் அறனுமாகிய இம் மூன்றுமே" என்று அருமையாக வுரை கண்டுள் ளார். ஈண்டுத், திருக்குறளில் (755) அரசன் குடிகள் மாட்டுச் செய்வது அருள், குடிகள் அரசன் மாட்டுச் செய்வது அன்பு என எழுதப்பட்ட வுரை நினைக்கத் தக்கதாம். இங்கே 'ஆதலின்' என, முற்பகுதியைக் காரணமாகக் கூறியது யாங்ஙனம் பொருந்து மெனின், கூறுவேன்:— பொருளும் பொன்னும்

விரும்புவார்க்கு உயிர்களை அழிக்கின்ற தீ நெஞ்சமும், அறத்திற் சேராமையாற் பழியும் உண்டாமாதலானும், போகம் விரும்புவார்க்குக் கூடாவொழுக்கத்தால் தவவிரதம் அழிதலும், இப் பிறப்பின் நுகர்ச்சியே யுள்ளது மறுபிறப்பின்று என்னும் மடமையும் உண்டாமாதலானும் அவற்றைத்தாம் வேண்டாமலும், இறைவன் மாட்டன்பு செலுத்தி அவன் அருளைப் பெற்றார் பெறுவது அவன் குணங்களை அறிந்து மேற்கொண்டு அவனை வழிபடலாகிய அறமே யாதலானும், அத்தகையோரை வீடுபெறு மியல்புடைய மாதவரும் வணங்குவராதலானும் அருளும் அன்பும் அறனுமே தாம்வேண்டியுங் கூறினரெனக் கொள்ளலாம்.

> " பணியொரீஇ நின்புக ழேத்தி
> யணிநெடுங் குன்றம் பாடுதுந் தொழுதும்
> அவை, யாமுமெஞ் சுற்றமும் பரவுது
> மேம வைகல் பெறுகயா மெனவே " (17.50-53)

என்று நல்லழிசியார் கூறுகின்றார். ஈண்டுச் 'சேவலங் கொடியோன் காப்ப, ஏம வைகல் எய்தின்றாலுலகே' என்னுங் குறுந்தொகைக் கடவுள் வாழ்த்தடி நினைவிற்கு வருகின்றது. இதனினுஞ் சிறப்பாக,

> " வாழ்த்தினேம் பரவுதுந் தாழ்த்துத்தலை நினையா
> நயத்தலிற் சிறந்தவெம் மடியுறை
> பயத்தலிற் சிறக்க நாடொறும் பொலிந்தே" (9. 83-85)

> " செருவேற் றானைச் செல்வநின் னடியுறை
> யுரிதினி னுறைபதிச் சேர்ந்தாங்குப்
> பிரியா திருக்கவெஞ் சுற்றமோ டுடனே " (18. 54-56)

" நன்றமர் ராயமோ டொருங்குநின் னடியுறை
யின்றுபோ லியைகெனப் பரவுது
மொன்ருர்த் தேய்த்த செல்வநிற் றொழுதே "
(21. 68-70)

" அன்னை யாகலி னமர்ந்தியா நின்னைத்
துன்னித் துன்னி வழிபடு வதன்பய
மின்னு மின்னுமவை யாகுக
தொன்முதிர் மரபினின் புகழினும் பலவே "
(14. 29-32)

எனச் செவ்வேள் திருவடிக்கணுறைதலையும் அவனை வழிபடுதலையும் வேண்டிக் கூறும் பகுதிகள் 'கூடு மன்பினிற் கும்பிடலே யன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினர்' என்னுந் திருவாக்கை நினைவூட்டுகின்றன. திருமாலிடத்தும்,

" காமரு சுற்றமோ டொருங்குநின் னடியுறை
யாமியைந் தொன்றுபு வைகலும் பொலிகென
வேமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழிப் புலவநின் ருணிழ றொழுதே "
(1. 62-65)

" அன்னையென நினைஇ நின்னடி தொழுதனெம்
பன்மா ணடுக்க விறைஞ்சினேம் வாழ்த்தினேம்
முன்னு முன்னும்யாஞ் செய்தவப் பயத்தா
லின்னு மின்னுமெங் காம மிதுவே " (13. 61-64)

" நல்லடி யேத்திநிற் பரவுது
மெல்லேம் பிரியற்கெஞ் சுற்றமொ
டொருங்கே " (திரட்டு 81-82)

என அவ்விரண்டனையும் வேண்டிக் கூறுதலுங் காண்க. முன்னர்க் காட்டியவற்றுள்ளும்,

" உடங்கமர ராயமோ டேத்தினந் தொழுதே" (19.105)

" கடும்பொடுங் கடும்பொடும் பரவுதும் " (2.75)

" தைய லவரொடுந் தந்தா ரவரொடுங்
கைம்மக வோடுங் காத லவரொடுந்
தெய்வம் பேணித் திசைதொழுதனிர் சென்மின் "
(15.46-48)

என்பவற்றுள்ளும் கடவுளை ஏத்தும் போதும், அவன் அடியுறைவை வேண்டும் போதுஞ் சுற்றத்தாரையுஞ் சேர்த்துக்கூறும் அழகு வேறிடத்திற் காணப் படாத தொன்றும். ஈண்டு,

" காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள " (527)

என்னுந் திருக்குறளும், 'அப்பெற்றித்தாய வியல் பென்றது தாம் நுகர்வனவெல்லாம் அவரும் நுகரு மாறு வைத்தல்' என்னும் உரையுங் காண்க.

" கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும் " (166)

என்பதனால் ஒருவனுக்கு வருந்தீமை அவன் சுற்றத் தைச் சாருமெனவே, நன்மையுஞ் சாருமெனல் கூறா மலே விளங்கும்.

இறைவன் திருவடியையே புலவர்கள் விரும்பு வதற்குக் காரணம், அது வீடளிக்கும் என்னும் உண்மையேயாம். ஈண்டு,

" சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும் "
[திருமுருகாற்றுப்படை (62-63)]

என்புழி நச்சினார்க்கினியர் எழுதிய 'மெய்ஞ்ஞானத் தான் அறிதலைக் கைவிட்டுத் தங்குந்திருவடி; திருவடியே வீடாயிருக்குமென்றார்; அது 'தென்னன் பெருந்துறையான், காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித் தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி' என்பதனானும் பிறரும் திருவடியைக் கூறுமாற்றானுமுணர்க' என்னும் உரையுங் காண்க. 'நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க' என மாணிக்கவாசகப் பெருமான், திருவடியை முதலிற் கூறியதும், அதனை அடைதற்குக் கருவியாகிய ஐந்தெழுத்தை அதனினும் முற்படக் கூறியதும் இக் கருத்துப் பற்றியேயாம்.

> "மறுபிறப் பறுக்கு மாசில் சேவடி" (3.2)
>
> "நின், சேவடி தொழாரு முளரோ" (3.18-19)
>
> "நின்னிற் சிறந்த நின்று ளிணையவை" (4.62)

எனத் திருமால் திருவடியைப் பற்றிவரும் பகுதிகளும், பின்னதற்குள்ள 'வீடளிக்குங்கால் நின்னினுஞ் சிறந்த நின்தாளிணையை உடையை' என்னும் உரைப்பகுதியும் கண்டு மகிழத்தக்கனவாம்.

> "நின்னடி, தலையுற வணங்கினேம் பன்மாண் யாமுங்
> கலியி னெஞ்சினே மேத்தினேம் வாழ்த்தினேங்
> கடும்பொடுங் கடும்பொடும் பரவுதுங்
> கொடும்பா டறியற்க வெம்மறி வெனவே" (2. 72-76)

என்புழி எழுதப்பட்ட 'எம்மறிவு கொடும்பாடறியற்க வென மெய்யுணர் வினையே வேண்டினார் வீடு அதனாலல்ல தெய்தப்படாமையின்' என்னு முறையால் திருவடியை வணங்கினால் மெய்யுணர்வு பிறக்கு

மென்பதும் அதனால் வீடு பெறலாமென்பதுந் தெரி கின்றன.

> " மாசில் வீணையு மாலை மதியமும்
> வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
> மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
> ஈச னெந்தை யிணையடி நீழலே "

என ஈசன் திருவடியைப்பற்றிக் கூறிய, திருநாவுக் கரசர் திருவாக்கும் இங்கே நோக்கத்தக்கது. அவன் திருவடியை அடைதற்கும் அவனருளே வேண்டு மென்பதை

> " ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
> தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்டு
> அன்னிய மின்மையி னரன்கழல் செலுமே " (8)

என்னும் சிவஞான போதச் சூத்திரத்தாலும், 'அவ னரு ளாலே அவன்றாள் வணங்கி' என்னும் சிவபுரா ணப் பகுதியாலும் உணரலாம்.

> " தலையுற வணங்கினேம் பன்மாண் யாமுங்
> கலியி னெஞ்சினே மேத்தினேம் வாழ்த்தினேம் "
> (2. 73-74)

> " அன்னையென நினைஇ நின்னடி தொழுதனெம்
> பன்மா ணடுக்க விறைஞ்சினேம் வாழ்த்தினேம் "
> (13. 61-62)

> " இதுவென வுரைத்தனெம் உள்ளமர்ந் திசைத்திறை
> யிருங்குன்றத் தடியுறை யியைகெனப்
> பெரும்பெய ரிருவரைப் பரவுதுந் தொழுதே "
> (15.64-66)

என்னுமிடங்களில், வணங்கினேம், கலியில் நெஞ்சினேம், ஏத்தினேம் வாழ்த்தினேம்' எனவும், 'நினை இத், தொழுதனெம் இறைஞ்சினேம், வாழ்த்தினேம்' எனவும், 'உள்ளமர்ந்து, உரைத்தனெம், தொழுது பரவுதும்' எனவும் மனம் மொழி மெய்களின் செயல்களைக் கூறியமை நயமுடைத்து. 'தொழுதனெம் இறைஞ்சினேம்' என்பன கையாற் றொழுதலும், தலையால் வணங்குதலுமாகிய மெய்ச் செயல்களைக் குறிப்பனவாம்.

செவ்வேள் வீட்டின்பம் அளித்தலே யன்றி அன்பர்கள் விரும்பும் இம்மைப்பயன்களும் அளிக்குந் திருவருட்டிருவுருவினன் என்பது,

"கனவிற் றொட்டது கைபிழை யாகாது
நனவிற் சேஎப்பநின் னளிபுனல் வையை
வருபுன லணிகென வரங்கொள் வோருங்
கருவயி றுறுகெனக் கடம்படு வோருஞ்
செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரு
மையமர டுகென வருச்சிப் போரும்" (8.103-108)

"கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை
எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே" (14.23-24)

எனக்காதலருங், குழந்தையும், பொருளும், காதலருக்குப் போர் வெற்றியும், பிரிந்த காதலர் வந்து கூடி நீங்காமையும் மகளிர் வேண்டுவதாகக் கூறும் பகுதிகளால் அறியலாம். இவ்வாறு வேண்டும் வழக்கம் மகளிர்க்கு உண்டென்பதை, வையையிடம்,

"கழுத்தமை கைவாங்காக் காதலர்ப் புல்ல
விழுத்தகை பெறுகென வேண்டுது மென்மாரும்
பூவீ பூரியிற் புலம்பப் போகா
தியாம்வீழ்வா ரேம மெய்துக வென்மாருங்
கிழவர் கிழவிய ரென்னுதேழ் காறு
மழவின்று மல்லற்கேண் மன்னுக வென்மாரும்"

(11.116-121)

எனக், காதலர்ப் புல்லுதலும், காதலர் தம்மைப் பிரிந்து பிறர்பாற் செல்லாமையும், இளமையும் வேண்டிக் கூறும் பகுதியாலும் உணரலாம்.

17-ஆம் பாடலால், மகளிர் தம்மைப் பிரிந்த தலைவர் வினைமுடித்துக் கடிதின்வந்து கூடுதற்பொருட்டுப் பரங்குன்றின்கண் விழாச் செய்வரென்பதும், 19-ஆம் பாடலால், மணமான மகளிர் தம் காதலர் அன்பைப் பெறுதற் பொருட்டும், மணமாகாத கன்னியர் குறைவற்ற காதலரைப் பெறுதற் பொருட்டும் பரங்குன்றத்துள்ள முருகன் கொடி ஏற்றப்படும் யானைக்குப் பூசை செய்து அவ் யானையின் கவழமிச்சிலை யுண்ப ரென்பதும் தெரிகின்றன.

முருகன் பூசை, யாழொலிக்கப் புலவர்கள் பாட வேதமிசைப்பச் சுடர், நறும்புகை மலர்களுடன் நிகழ்கின்றது. உலகத்தார் பரங்குன்றிற் பலவிடங்களிலும் முருகனுக்குச் செய்யும் பூசைக்கண் உண்டாம் அகிற்புகை, சூரியனையு மறைத்து இமையோர் கண்களையும் இமைக்கச் செய்கின்றது.

## திருப்பரங்குன்றம்

முருகப் பெருமான் வீற்றிருக்கும் திருப்பரங்குன்றம், அதன் அடி யுறைவார்க்குத் தேவருலக வாழ்வையும் வேண்டா இயல்பை அளித்து விளங்குகின்றது. இதனை "அடியுறை யியைநர், மேலோர் உறையுளும் வேண்டுநர் யாஅர்" (17.7-8) என்பதனுல் உணரலாம். இதனுற்றுன் "குன்றத் தடியுறை யியைகெனப் பரவுதும்" (21.16) என ஒரு புலவர் பெருமான் பாடுவாராயினர். ஆண்டு உரையாசிரியர், குன்றத் தடியிலிருந்தே அஃதியைக வெனப் பரவுதல் சிறப்பின்றெனக் கருதி மறு பிறப்பிலும் இயைகவெனப் பரவுதும் என எழுதியது மிகவுஞ் சுவை தருகின்றது. திருப்பரங்குன்றத்திற்குச் செல்வார்க்கு "அறம்பெரி தாற்றி யதன்பயன் கொண்மார், சிறந்தோர் உலகம் படரு நரை" (19.10-11) உவமை கூறியிருத்தலுங் காண்க. பரங்குன்றம், முருகனைத் தொழுதற்குத் திருமால் முதலிய அமரரும் அவுணரும் முனிவரும் வந்து கூடுதலானும், முருகன் விரும்புதலானும் இமையக் குன்றைப்போல் விளங்குகின்றது. ஆண்டுள்ள சுனை இமையத்துள்ள முருகன் பிறந்த வற்றுப் பொய்கையை ஒத்துளது. ஈண்டு (8.15) 'ஒரு நிலைப் பொய்கை' என்பதற்கு 'வற்றுப் பொய்கை' என உரைகண்ட பரிமேலழகர் அறிவுத் திறம் பாராட்டற் பாலது.

அன்பர்கள், சந்தனம், புகைப்பன, நந்தா விளக்கிற்கு வேண்டுவன, மலர், முழவு, மணி, கயிறு, மயில், குடாரி, பிணிமுகம் முதலியன ஏந்திச் சென்று

முருகனை வழிபட்டு வரம் வேண்டுகின்றனர்; தாளத்தொடு இயங்களார்க்கின்றன; அக்குன்றத்தின் புகழ் திசை எங்கும் பரவியுள்ளது.

அம்மலைக்கண் ஓரோவிய அம்பலந் திகழ்கின்றது; அங்கே, அறிவும் அன்புந்தரும் பல ஓவியங்கள் உள்ளன. இதனை,

"என்றூ ழுறவரு மிருசுடர் நேமி
யொன்றிய சுடர்நிலை யுள்படு வோரும்
இரதி காம னிவளிவ னெனாஅ
விரகியர் வினவ வினாவிறுப் போரு
மிந்திரன் பூசை யிவளக லிகையிவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
வொன்றிய படியிதென் றுரைசெய் வோரு
மின்ன பலபல வெழுத்துநிலை மண்டபம்"

(19.46-53)

என்பதனல் அறியலாம். அவ்வம்பலம், மன்மதனுடைய படைப்பயிற்சி செய்யுமிடத்தைப் போன்றுள்ளது. மலர்மிக்க சோலைகளும், சுனைகளும் அம்மன்மதனுடைய அம்பருத்தூணியை யொத்தும், காந்தட் குலைகள் அவன்போரில் தோற்றுக் கட்டுண்டார் கைகளை யொத்தும் உள்ளன. தும்பிகளால் கட்டவிழ்க்கப்படும், மலராதுங் குவியாதும் இடைப்பட்ட நிலையிலுள்ள காந்தள் முகைகள், யாழ் நரம்புக் கட்டை நெகிழ்ப்பவர் கைகளைப் போன்றுள்ளன. இவ்விடத்துக்,

" கொடியியலார் கைபோற் குவிந்த முகை
அரவுடன் றவைபோல் விரிந்த குலை
குடைவிரிந் தவைபோலக் கோலு மலர் "
(20.98-100)

என்னும் அடிகள் நினைக்கத்தக்கன.

சிகரங்களில், முத்துமாலை போல அருவிகள் ஒலித்து இழிகின்றன. தினைக்கதிர்கள், குருவி யார்ப்ப விளைந்துள்ளன. அரக்கு, இறலி, தேன், மயிற்பீலி, நாவி என்னும் ஐவகை மலைவளமும் பொலிவு பெறுகின்றன. கடப்ப மலர்களில் வண்டு கள் பண்போல் ஒலிக்கின்றன. வேய்கள், ஆடும் மகளிர் தோள் போன்றுள்ளன. மயில்கள், கூடிப் பிரிந்தோரை விரைந்து வாரும் என்பனபோல அகவு கின்றன. அழுகின்ற மகளிர்க்கு அது தீரத் தாயர் புலி, புலி யென்று சொல்லுமாறு பாறைகளில் வேங் கைப்பூக்கள் பரந்திருக்கின்றன. ஆம்பல், காந் தள், எருவை, வேங்கை,தோன்றி, நறவம், கோங்கு, இலவம் என்னும் இவற்றின் மலர்கள், தெற்றின மாலைகள்போல நிறைந்தும், கோத்த மாலைகள் போல நிறம் மாறுபட்டும், தொடுத்த மாலைகள் போல இடையிட்டும், தூக்கிக் கட்டின மாலைகள் போல நெருங்கியும் பூத்தலால் அக்குன்றிடமுழு தும், விடியற்காலத்துப் பல நிறத்து மேகமார்ந்த வானம்போலத் திகழ்கின்றது. காற்று, முருகனுக் குப் பூசைக்கண்ணே காட்டும் நறும்புகையூடும், இளைஞர் பூசிய சந்தனத்தின் கண்ணும், மகளி ருடைய பூந்தாது உதிர்த்த கூந்தலின்கண்ணும் படிந்து நறுமணங் கமழ்கின்றது.

அம்மலைக்கண் ஒருபால் மகளிராட்டம் நிகழ்கின்றது. கள்ளருந்திய ஓரழகி, துடியொலிக்கேற்ப அடிபெயர்த்துச் சிலம்பொலிப்ப ஆடுகின்றாள். அதனைக் காண்பவருள், ஆடுகின்ற மாதின் பேரழகையும் தங் கணவன்மார் மனநிலையையுங் கருதும் மகளிர் மனவியல்பை, நல்லச்சுதனர்,

"அடுநறா மகிழ்தட்ப ஆடுவா டகைமையி
னுணையிலங் கெஃகெனச் சிவந்த நோக்கமொடு
துணையணை கேள்வனைத் துனிப்பவ ணிலையு
நிழல்காண் மண்டில நோக்கி
யழல்புனை யவிரிழை திருத்துவாள் குறிப்பும்
பொதிர்த்த முலையிடைப் பூசிச் சந்தன
முதிர்த்துப் பின்னுற வூட்டுவாள் விருப்பும்
பல்லூழ் இவையிவை நினைப்பின் வல்லோன்
ஓவத் தெழுதெழில் போலும்" (21.20-28)

எனப்பாடியதும், பரிமேலழகர் இங்கே 'இவளழகு எமக்குங்கூட வியப்பாயிற்று, இனி இவற்குச் சொல்லவேண்டுமோவென உட்கொண்டு, கேள்வன் துணையாய் அமரா நிற்கவும் அவனை வெகுளி மிக்க நோக்கமொடு துனிக்கின்றாள்' எனவும், 'இவளினும் எனக்கு அழகுண்டாயவழி இவளை நோக்கானென்று கருதிக், கண்ணாடியை நோக்கித் தன் அணிகளைத் திருத்துகின்றாள்' எனவும், 'மார்பிடத்தே சந்தனத்தைப்பூசி யுதிர்த்து நாற்றம் நிலைபெற்றவழி என்னைத் தழுவுமென்று கருதி, அதனைப் பின்னும் பின்னும் ஊட்டுவாள்' எனவும் எழுதிய வுரையும் மகிழ்வளிக்கின்றன. இப்பகுதியை நோக்கிற், சினந்தவள் பேரழகியாதலால் துனி

யால் வசப்படுத்தக் கருதினள் என்பதும், அணி திருத்தினள் அழகால் இடைப்பட்டவள் ஆதலின் தன் இயற்கை யழகோடு செயற்கை யழகுங்கூடி னல் கணவனைத் தன் வசப்படுத்தலாம் எனக் கருதி னள் என்பதும், நாற்றமூட்டினள் அழகாற் கடைப் பட்டவளாதலின் இருவகை அழகும் கூடாமையால் மணத்தால் வசப்படுத்தக் கருதினள் என்பதும் புலனா கின்றன.

"மணிமரு......போன்ம்" (21. 57-63) என்பத னற் கள்ளருந்திய ஒரு மகள் தன் கணவன் துடி கொட்ட, ஆடையும் அணியும் அசைய ஆடும் பூங்கொம்பு போல ஆடுகின்றாள் எனவும், "ஒரு திறம், பாணர் யாழின் றீங்குரலெழ........மாறட் டான் குன்ற முடைத்து" (17. 9-21) என்பதனால் சில விடங்களில் யாழொலியும், குழலொலியும், முழ வொலியும், விறலியர் ஆட்டமும், பாடினியின் பாட லும் நிகழ்கின்றன; அவற்றிற்கு எதிராகச் சில விடங்களில் முறையே வண்டொலியும், தும்பியொலி யும், அருவியொலியும், கொடியசைவும், மயிலொலி யும் நிகழ்கின்றன வெனவுங் கூறப்பட்டிருத்தலுங் காண்க. "மிசைபடுசாந்தாற்றி.........இரங்கு முரசி னன் குன்று" (21.30-38) என்பதனால் மலருதும் தும்பியொலியும் வண்டொலியும் அருவியொலியும் முறையே குழலொலியும் யாழொலியும் முழவொலி யும் போலத் தோன்ற மயில்கள் ஆடுகின்றனவெனக் கூறப்பட்டிருத்தலும் ஈண்டு நினைக்கத்தக்கதாம்.

"பாடுவார் பாணிச்சீரு மாடுவா ரரங்கத் தாளமும்"
(8.109)

"ஆடனவின்றே ரவர்போர் செறுப்பவும்
பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும்"(9.72-73)

எனவருவனவற்றாலும் ஆடல் பாடல்களும், அவற்றின் போர்களும் ஆண்டு நிகழ்தல் புலனும்.

பாண்டியவரசன், தன் உரிமை மகளிர்களோடும் அமைச்சர்களோடும் நாடும் நகருஞ்சூழ அம்மலையிலுள்ள திருக்கோயிலை வலம் வருங்கால் அத்தோற்றம், விண்மீன் சூழத் திங்கள் மேருமலையை வலம் வருதலை யொத்தது; அப்பொழுது மலையின் கீழிடம் நால்வகைச் சேனையும் நிறைந்திருத்தலால் அவன் பாசறை போலத் தோன்றியது; அவனுடன் மலைக்கு வந்தவர்கள் குரங்குகட்கு அவை யருந்தும் பொருள்களைக் கொடுத்தும், முசுக்கூட்டத்துக்குக் கரும்பு கொடுத்தும், பிரம வீணை வாசித்தும், குழலூதியும், யாழ் எழுப்பியும், முரசடித்தும், பூசையின் அழகைப் புகழ்ந்தும் ஓவிய மண்டபங் கண்டுங் களித்தனர்.

வள்ளி, தேவசேனை இருவரும் முருகன்பால் ஊடிய செயலையும் அதுபற்றிய பிறநிகழ்ச்சிகளையும் குன்றம்பூதனார் அழகுறப் புனைகின்றார்; அவையாவன:—முருகன் தேவசேனையிடம் வந்தான்; தேவசேனை அவனை நோக்கி, வஞ்சகனே! நின்னை அறியாது அகப்பட்ட மகளிர்திறம், மழை பெய்யவேண்டி வருந்துஞ் சோலையையொக்கும்; ஆதலால் நின்னைநம்பிய அவரே தவறுடையராவரல்லது நீ தவறுடையையல்லை; நின்னை அடையும் திருவுடைய மகளிரொடு கூடி அருளுதலும் நின்பாலில்லை; ஆதலால் நின்னொடு யான் கூடேன் என்று கையால் தன்னைச் சுட்டிக்

காட்டிக் கூறி, வள்ளி நாய்ச்சியார் காரணமான புலவியால் நீங்கினள். உடனே செவ்வேள் தன் தலைமாலை அவள் அடியிற்படுமாறு வணங்கினன்; அவள், புலவி நீங்கி, வருந்தாதே என்று கூறி யணைந்தாள்; அதுகண்ட வள்ளி யம்மை இனித் தேவசேனையை அணுகாதே என்று சொல்லிச் செவ்வேள் கையை இறுகக் கட்டித் தன் மாலையே கோலாகக் கொண்டு அடித்தாள்; அதனைக் கண்டு அவ் விருவருடைய மயிலுங் கிளியும் மாறு பட்டன; வள்ளி நாய்ச்சியாருடைய வண்டு தேவ சேனை கொண்டையிலுள்ள வண்டின்மேற்சென்று பாய்ந்தது; அதனைக் கண்டு தேவசேனை பாங்கியர், மாலைகளையும் மார்பில் அணிந்த கச்சையும் பந்தையும் கருவிகளாகக் கொண்டு வள்ளி நாய்ச்சியார் பாங்கிய ரொடு பொருதனர்; அதுகண்ட வள்ளிநாய்ச்சியார் பாங்கியர், மதங்கொண்ட யானைபோற் செருக்குற் றும், குதிரைபோல விரைந்தும், தேரணிபோல வடிக் கயிற்றைத் தெரிந்தெடுத்தும், வில்வளைத்தும், வாள் பிடித்தும், தோள்வளையாகிய சக்கரஞ் சுழற்றியும் போருக்கு வந்தனர்; அதுகண்டு அஞ்சிய தேவ சேனை பாங்கியர், முருகனைச் சூழ்ந்து, பின்னர்ச் சுனையுள் மூழ்கியும், சுனையுள் வண்டாய் ஒலித்தும், மயிலாய் ஆடியும், குயிலாய்க் கூவியுந் துன்புற்றனர் என்பதாம். இங்கே தேவ மாதர்கட்கும் குறத்தியர் கட்கும் ஏற்பப் போர்க்கருவிகள் கூறியது நய முடைத்து. மழைபெய்ய வேண்டி வருந்துஞ் சோலை யை யொக்கும் என்றது, கா, தனக்கு இன்றியமை யாத மழையை வருவித்துக் கொள்ளமாட்டாது, அது

தானே வந்துழிப் பொலிந்து, வாராத வழியும் ஆமள வும் ஆற்றி ஆகாத எல்லைக்கண் இறந்து படுதலெனக் கொள்க.

"கற்பிணை நெறியூ டற்பிணைக் கிழமை
நயத்தகு மரபின் வியத்தகு குமர" (9.81-82)

என்பதனுல் அவ்வூடலை முருகன் விரும்பி மகிழ்கின் ருன் என்பதுங் காண்க.

மகளிரும் மைந்தரும் ஆண்டுள்ள சுனைகளிற் பாய்ந்து ஆடுதலாற் சுனைப்பூக்களில் வண்டுகள் அஞ்சி மொய்த்தில.

ஆங்கு ஓர் இளைஞன், ஆடும் மயில் ஒன்றை நோக்கி அதன் அழகையும் களிப்பையும் தன் உள் ளத்துக் கருதினன். அதனைக் கண்ட அவன் மனைவி, தன் சாயலினும் அதன் சாயல் அழகாக இருப்பதால் தன்னை நோக்காது அதனை நோக்கினனெனக் கருதி, நீ நினைத்தது அறிந்தேன்; உண்மையைச் சொல்; எம்மை நோக்காது இகழ்தலை மறையாதே என ஊடினள். தலைவன், காதலி! கொள்ளுதற்கரிய நின் சாயலைக் களிமகிழாற் களவுகொள்ளக் கருதி அஃதிய லாமல் வருந்தும் இதனைக் கண்டு யான் நின்சாயல் அருமையை நினைக்க, நீ இகழ்ந்ததாகக் கருதுகின் ருய் எனக்கூறி அவள் ஊடலை ஒழித்தான்.

ஒரு பேதை, தன் சுற்றத்தார்களினின்று நீங்கி, அவர்களைக் காண்டற்பொருட்டு அங்குள்ள கற்களின் இடைஇடைப்புக்குத் திகைத்து, வந்த வழியு மறந்

தேன் எனக் கூறி, அச்சுற்றத்தாரை யழைத்தாள்; ஆண்டுள்ள குகைகளும் எதிரொலி செய்தன. அவள் அதனையறியாது தன் சுற்றத்தாரும் தன்னை அழைக்கின்றாரென்று கருதி எதிரொலி உண்டாயவிடத்துச் சென்று, ஆண்டு அவரைக் காணாது பன்முறை கூவி மீண்டனள்.

ஒரு மகள், ஆழ்ந்த சுனை நடுவே மூழ்கி நீர்மேலெழுந்து, கரையில் நிற்கின்ற தன் கணவனை நோக்கி, நீரில் அழுந்துகின்ற தனக்குப் புணையாகிய மூங்கிலைத் தருமாறு வேண்டினாள். அவள் கணவன் அது கொடாது அரக்கு நீர் நிறைந்த வட்டை எறிந்தனன்; ஆதலால் அவள் புணைபெறாது வருந்தினாள். அவ்வமயத்து அவன் மகிழ்ந்து நீருள் மூழ்கி அவளைத் தழுவினான். இங்ஙனம் பலவாறு புலவர்கள் தம் அறிவுத் திறத்துக்கும் இயற்கைக்கும் பொருந்த ஓவியம் வரைந்து பரங்குன்றத்தை நம்முன் நிறுத்துகின்றனர்.

மதுரையிலிருந்து பரங்குன்றிற்குச் செல்லும் இடைவழியும், பல்வகை மலர் மணங்களோடு தென்றலசைகின்றது; மகளிரும் மைந்தரும் நெருங்கி விளையாடுதலால் விரைந்து செல்ல இயலாததாய் மிகச் சேய்த்தாகக் காணப்படுகின்றது; மகளிர் தலையினின்றும் மைந்தர் தலையினின்றும் விழுந்து அவிழ்ந்த மாலைகளால் தடுக்கப்பட்டு நடத்தற்கும் வழியின்றாகின்றது எனப் புகழப்படுகின்றது. திருமான் மருகனையும், திருப்பரங்குன்றையும் பற்றிய செய்திகளை ஒருவாறு முடித்து இனித் திருமாலைப்பற்றிக் கூறுவேன்.

## திருமால்

1, 2, 3, 4, 13, 15-ஆம் பாடல்களும், திரட்டிலொன்றும் திருமாலைப்பற்றியன. முதற்பாடலையும் திரட்டையும் பாடியவர் பெயர் தெரியவில்லை. 3, 4-ஆம் பாடல்களைக் கடுவனிளவெயினனாரும், 2, 13, 15-ஆம் பாடல்களை முறையே கீரந்தையாரும், நல்லெழுநியாரும், இளம்பெருவழுதியாரும் பாடினர். இப்பாடல்களில் வராகம், நரசிங்கம், வாமனன், பலராமன், கண்ணன் என்னும் அவதாரங்களும், கேசியை அழித்தமை, கருடன் செருக்கடக்கினமை, தேவர்களுக்கு அமுதளித்தமை முதலிய வரலாறுகளுங் கூறப்பட்டுள்ளன.

திருமாலுடைய திருவுருவம் பலவாறு புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது. அவன் திருக்கண்களுக்குப் பலவிடங்களில் தாமரை மலர் உவமை கூறப்பட்டிருக்கின்றது.

> " நின்னிற் றோன்றிய நிரையிதழ்த் தாமரை
> யன்ன நாட்டத் தளப்பரியவை " (4.60-61)

> " புவ்வத் தாமரை புரையுங் கண்ணன் " (15.49)

என, அவன் திருவுந்தித் தாமரை உவமிக்கப் பெற்றிருக்கும் பகுதிகள் நினைக்கத்தக்கன.

அவன் கண் இயல்பாகவே சிவந்துளதென்பது 'செயிர்தீர் செங்கண்' எனவும் 'செறுஅச் செங்கண்' எனவும் அழகுறக் கூறப்பட்டுள்ளது.

திருமகள் வீற்றிருக்கும் அவன் திருமார்பு, 'திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை' (1.8) 'திருமறுமார்ப

(1.36) 'செய்யோள் சேர்ந்தநின் மாசி லகலம்' (2.31) 'பொன்னிற் றோன்றிய புனைமறு மார்ப' (4.59) எனப் புகழப்படுகின்றது. ஈண்டு, மறு பொன்னிறத்த தெனக் கூறியது நினைக்கத்தக்கது. இத்திரு மார்பைத் தொழுவார்க்கு வைகுண்டம் உரியதாம் என்பது,

**"நின், திருவரை யகலந் தொழுவோர்க்**
**குரிதமர் துறக்கமு முரிமைநன் குடைத்து" (13.11-13)**

என்பதனாற் புலனும். ஈண்டும் 'திருவரையகலம்' எனத் திருமகளைக் கூறியிருத்தலினின்று அம்மையரு ளால் அப்பனருளைப் பெறவேண்டும் என்னும் மெய்க் கருத்து விளங்கி மகிழ்வளிக்கின்றது. இதனை வைண வர், புருஷகாரம் என்பர்.

**"செய்ய வளைக்குரு வின்னரு ளாற்றிருத் தாள்வணங்கிச்**
**செய்ய வளைக்குலஞ் சூழரங் கேசன் திருவமுது**
**செய்ய வளைக்கும் புவிக்குமங் காந்தசெவ் வாய்முகுந்தன்**
**செய்ய வளைக்கும் சிலம்பணி பாதங்கள் சேர்ந்தனமே"**
**(திருவரங்கத்தந்தாதி)**

என்பதுங் காண்க. 'திருமறு மார்பநீ யருளல் வேண் டும்' (1-36) என்னும் அடிக்கண்ணும் இக்கருத்து அடங்கியுள்ளது.

அவன் திருமேனி நிறத்துக்கு, "கார்மலர்ப் பூவை கடலை யிருண்மணி, அவையைந்து முறழு மணி கிளர் மேனியை" (13.42-43) என்பதனால் கார், பூவை, கடல், இருள், மணி என ஐந்து பொருள்கள் உவமை கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள், நீல மணியைத் திருமாலைப் பாடிய எல்லா ஆசிரியருஞ்

சிறப்பித்து, உவமித்துள்ளனர். அவன் நீலமேனியில் திகழும் பொன்னுடை,

"மால்வரை, யெரிதிரிந் தன்ன பொன்புனை யுடுக்
கையை" (1.9-10)

"மாஅ மெய்யொடு முரணிய வுடுக்கையை" (4.8)

"மன்புன லிளவெயில் வளாவவிருள் வளர்வெனப்
பொன்புனை யுடுக்கையோன்" (15.27-28)

எனக், கருவரையில் நெருப்புப் பரந்தாற் போன்றுள்ள தெனவும், கருமேனியொடு மாறுபட்டு விளங்குகின்றதெனவும், இளவெயில் சூழ அதனிடையே இருள் வளர்வது போன்றுள்ளதெனவும் கூறப்பட்டுளது. "மாஅ மெய்யொடு முரணிய வுடுக்கை" என்புழித் "தன்னுரு வுறழும் பாற்கடல்" (13.26) என்னும் பகுதி நினைக்கத்தக்கது.

"சுனையெலா நீல மலரச் சுனைசூழ்
சினையெலாஞ் செயலை மலரக் காய்கனி
உறழ நனைவேங்கை யொள்ளிணர் மலர
மாயோ னொத்தவின் னிலைத்தே" (15.30-33)

என்பதனால் நீல மலர்ந்த சுனையைச் சூழ்ந்த அசோக மலர், அவன் நீலமேனியைச் சூழ்ந்த பொன்புனை உடுக்கை போலவும், கருமலையில் காய்கனிகளுடன் நிறம் மாறுபட மலர்ந்த வேங்கை, அவன் மணிமுடி போலவும் உள்ளன என அவன் ஆடையும் முடியும் உவமானமாகவும், "மணிவரை யூர்ந்த மங்குன் ஞாயிற், றணிவனப் பமைந்த பூந்துகில் புனைமுடி" (13.1-2) என்பதனால், ஆடை, நீலவரைக்கட் பரந்த

இள ஞாயிறு போலவும், முடி, நீலவரையை யூர்ந்த இள ஞாயிறு போலவும், உள்ளவென அவை உவமேயமாகவுங் கூறப்பட்டிருத்தலுங் காண்க.

திருமாலின் காலங்கடந்த நிலை "முடிந்தது முடிவது முகிழ்ப்பது மவை மூன்றுங், கடந்தவை யமைந்த கழலினிழலவை" (13.46-47) என அவன் தாள்மேல் வைத்துரைக்கப் பெற்றுளது.

"தெருள நின்வர வறிதல்
மருளறு தேர்ச்சி முனைவர்க்கு மரிதே" (1.29-30)

"முதுமைக்கு, ஊழி யாவரு முணரா" (2.17-18)

"முன்னை மரபின் முதுமொழி முதல்வ" (3.47)

"மன்னுயிர் முதல்வனை" (1.53)

"இனைத்தென வெண்வரம் பறியா யாக்கையை" (3.45)

"பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே" (3.72)

"நினக்குவிரிந் தகன்ற கேள்வி யனைத்தினும்
வலியினு மனத்தினு முணர்வினு மெல்லாம்
வனப்புவரம் பறியா மரபி னோயே" (3.48-50)

"அனைத்துநீ அனைத்தினுட் பொருளுநீ" (3.68)

"நினக்கு, மாற்றோ ரும்மிலர் கேளிரு மிலரெனும்
வேற்றுமை யின்றது போற்றுநர்ப் பெறினே"
(4.53-55)

(உயிர்களது இயல்பான் நினக்குப் பகையும் நட்பும் உளபோலத் தோன்றுவதல்லது நின்னியல்பான் அவை உளவல்ல என்றவாறும்.)

"பகைவர் இவரிவர் நட்டோ ரென்னும்
வகையு முண்டோநின் மரபறி வோர்க்கே" (3.57-58)

என்பனவற்றால் திருமாலுடைய வரவு ஒருவராலும் அறிய முடியாத தென்பதும், அவன் முதுமையும், தலைமையும், எங்கும் நிறைவும், பகை நட்பற்ற நிலையும் முதலிய சிறப்பியல்புகள் புலனாகின்றன.

"சாய னினது வானிறை யென்னும்
நாவ லந்தண ரருமறைப் பொருளே" (2.56-57)

"அருள்குடை யாக வறங்கோ லாக
விருநிழல் படாமை மூவே ழுலகமும்
ஒருநிழ லாக்கிய வேமத்தை மாதோ" (3.74-76)

"எவ்வயி னுலகத்துந் தோன்றி யவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்
அன்பது மேஎ யிருங்குன் றத்தான்" (15.51-53)

"ஒருமை வினை மேவு முள்ளத்தினை" (13.49)

"நின் னூர்வலர்,
தொழுதகை யமைநியி னமர்ந்தோயு நீயே
யவரவ ரேவ லாளனு நீயே
யவரவர் செய்பொருட் கரணமு நீயே" (4.70-73)

"மனக்கோ ணினக்கென வடிவுவே றிலையே" (4.56)

"இருமை வினையுமில வேத்துமவை" (13-48)

என்பனவற்றால் திருமால் மேகம்போல் பொழியுந் திருவருளுடையான் என்பதும், எல்லா வுலகத்து முள்ள வுயிர்களையும் காப்போனென்பதும், அவற்றின் பிறவித் துன்பங் களைவோனென்பதும், அன்

பர்கள் பணிவில் அகப்பட்டு அவர்க்கு ஏவலுஞ் செய்வானென்பதும், அவர் மனத்தே நினைக்கும் வடிவையே கொள்வான் என்பதும், அவனை வணங்குவார்க்கு வினை நீங்குமென்பதும் தெரிகின்றன. "மனக்கோள் நினக்கென வடிவுவே றிலையே" (4.56) என்புழித் "தனக்கோர் வடிவும் பெயரு மின்றி அன்பராயினோர் கருதியவடிவே வடிவாகவும் அவர் இட்ட பெயரே பெயராகவுமுடையனாதலின் 'முக்கை முனிவ' என்பது முதலாக 'நூறு யிரங்கை யாறறி கடவுள்' என்பது ஈறாக வடிவுவேற்றுமையும் பெயர் வேற்றுமையுஞ் சொல்லப்பட்டன" (3.36-43) என்னும் உரைப்பகுதி நினைக்கத்தக்கது.

"வலம்புரி வாய்மொழி யதிர்புவான் முழக்குச்செல்
அவைநான்கு முறழு மருள்செறல் வயின்மொழி"
(13.44-45)

என்னும் அடிகள் மிக்க நயமுடையன. "நின் அருள்வயின்மொழி வலம்புரி முழக்கையும் வேத முழக்கையுமொக்கும்; நின்செறல்வயின்மொழி வான்முழக்கையும் உருமேற்றின் முழக்கையுமொக்கும்" என்பது இதன் பொருள். இங்கே, வலம்புரி முழக்கு இனிதாதலும் வேதமுழக்கு அறிவுரையாதலும் போல அருள்மொழி இனிதாய் அறிவுரையாமென்பதும், மேக முழக்கும் இடி முழக்கும் கடியனவாய் வெறுப்பும் அச்சமும் விளைப்பினும் மழை பொழிதற்குக் காரணமாதல் போலச் செறல் மொழியும், வெறுப்பும் அச்சமும் விளைப்பினும் அவன் அருள் பொழிதற்கே காரணமாமென்பதும் நினைந்து மகிழற்பாலன.

"நின்னெக்கும் புகழ்நிழலவை" (1.55) "நின் புகழுருவினகை" (3.32) என உவமேயமாகவும் உவமானமாகவும் கூறியமையால் அவன் புகழ் நிகரற்றதென்பதும் அளவற்றதென்பதும் புலனும்.

**" நின்னை,**
**இன்னனென் றுரைத்த லெமக்கெவ னெளிது "**
**(1.31-32)**

**" மாயோய் நின்வயிற் பரந்தவை யுரைத்தே**
**மாயா வாய்மொழி யுரைதர வலந்து "** **(3.10-11)**

(நித்தமாகிய வேதம், தேவரும் மூவேழுலகுகளும் உயிர்ப்பன்மையும் நின்கட்டோன்றியவாறு அறிந்து கூறும்; சிற்றறிவினேமாகிய யாம் அவற்றுட் சிலவற்றை முறை பிறழக் கூறுவதல்லது அவ்வாறு எல்லாம் கூறுதற்கு உரியமல்லமென்பார் 'வலந்துரைத்தேம்' என்றார்.)

**" ஞாலத் துறையுட் டேவரும் வானத்து**
**நாலெண் டேவரும் நயந்துநிற் பாடுவோர்**
**பாடும் வகையேயெம் பாடருமப்**
**பாடுவார் பாடும் வகை "** **(3.27-30)**

(நின்னை நயந்து பாடுவாராகிய இவர்கள் பாடுவது தமக்கு முன்னோராகிய பாடுவார் பாடும் வகையே; எம்பாடல் தாமும் எமக்கு முன்னோராகிய அப்பாடுவார் பாடும் வகையே: அதனால் நின்தொன்மையும் பெருமையுமறியாமைக்கண் எம்மோடு அவரிடை வேற்றுமையின்று.)

**" நின் னூர்வலர் தொழுதேத்தி,**
**நின்புகழ் விரித்தனர் கிளக்குங்கா லவைநினக்**

கிறும்பூ தன்மைநற் கறிந்தே மாயினும்
நகுதலுந் தகுதியீங் கூங்குநிற் கிளப்ப" (4.2-5)

" நின்னைப்புரை நினைப்பி னீயல துணர்தியோ"(3.46)

" அருமைநற் கறியினு மார்வ நின்வயிற்
பெருமையின் வல்லா யாமிவண் மொழிபவை
மெல்லிய வெனாஅ வெரூஅ தல்லியந்
திருமறு மார்பநீ யருளல் வேண்டும்" (1.33-36)

என்பனவற்றால், அவனியல்பு, அறிந்து கூறவியலாத தென்பதும், கூறுவது, வேதம் கூறிய சிலவற்றை முறைபிறழக் கூறுவதேயா மென்பதும், தேவரும் முனிவரும் பாடுவனவும் அவன் தொன்மையையும் பெருமையையும் முழுதும் அறிந்து பாடுவனவல்ல; முன்னோர் பாடிய முறைப்படி பாடுவனவே யென் பதும், அவன் பெருமைகளைப் பிறழக் கூறுவதனால் அவன் நகைப்பின் அஃதுவே ஒரு தகுதி என்பதும், அவனை உயர்வுகூறக் கருதின் அது அவனாலன்றி அறிய முடியாதென்பதும், இயலாமையறிந்தும் அன் பினாற் கூறுவனவற்றை ஏற்றருள வேண்டுமென் பதும் சிறந்த கருத்துக்களாகக் காணப்படுகின்றன. இங்கே,

" குறப்பிணாக் கொடியைக் கூடியோய் வாழ்த்துச்
சிறப்புணாக் கேட்டி செவி" (19.95-96)

என்னும் அடிகளும், அன்புடைமையாற் குறத்தியாய வள்ளிநாய்ச்சியாரைக் கூடிய நீ அருளுடைமையால் என் ஒவ்வா வாழ்த்தும் கேட்டல் வேண்டும் என் னும் கருத்துப்பட எழுதிய உரையும் நோக்கத் தக்கன.

'தொல்லியற் புலவ, நல்லியாழ்ப் பாண' (3.86) 'இடவலகுடவல' (3.83) என்பனவற்றால் திருமாலின் முத்தமிழ் வன்மையும், 'சலம்புரி தண்டேந்தினவை, வலம்புரி வயநேமியவை, வரிசிலை வயவம்பினவை, .........புகர்வாளவை' (15.58-61) என்பதனால் அவன் ஐம்படைகளுங் கூறப்பட்டுள்ளன.

திரட்டில் உள்ள திருமாலைப்பற்றிய பாடலில் அவன் வையைக்கரைக்கணுள்ள இருந்தையூரில் எழுந்தருளிய செய்தி காணப்படுகின்றது.

## திருமாலும் பலதேவனும்

திருமாலுக்கும் பலதேவனுக்கும் வேறுபாடின்றென்னுங் கருத்தாற் பலதேவனுக்குரிய பனைக் கொடியும், யானைக்கொடியும், கலப்பைக்கொடியும் திருமாலுக்குங் கூறப்படுகின்றன. 'வளைநாஞ்சிலொருகுழை யொருவனை' (1.5) 'வளைவாய் நாஞ்சிலோனும்...........ஆகி' (13.33-36) என்பவற்றால் திருமாலே பலதேவனாயினன் என்பது புலனும்.

**"நீயே, வளையொடு புரையும் வாலி யோற்கவன்**
**இளைய னென்போர்க் கிளையை யாதலும்**
**புதையிரு ளுடுக்கைப் பொலம்பனைக் கொடியோற்கு**
**முதியை யென்போர்க்கு முதுமை தோன்றலும்"**
**(2.20-23)**

என்னும் அடிகளும், 'நீ, வாலியோற்கு அவனிளையனென்று கூறுவோர்க்குப் பிறப்பு முறையால் இளையையாகலும், எல்லாப்பொருள்களையும் மறைக்கும் இருள்போலும் உடுக்கையையுடைய பனைக்

கொடியோற்கு வாசுதேவ மூர்த்தியாகிய நின்கட் சிறப்பு முறையான் முதியை என்போர்க்கு முதுமை தோன்றலும்' என்னும் உரையும் நயமுடையன.

பதினைந்தாம் பாடல் அவ்விருவரையும் பற்றியே கூறுகின்றது.

" கல்லறை கடலுங் கானலும் போலவும்
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்
எல்லாம், வேறுவே றுருவி னொருதொழி லிருவர்த்
தாங்கு நீணிலை யோங்கிருங் குன்றம்" (15.11-14)

என்னும் அடிகளில், கடலும் கானலும் போல வேறு வேருகிய நிறமும், சொல்லும் பொருளும் போல வேறுபடாத தொழிலும் உடையோரென அவ்விரு வரையும் கூறியவழகு நினைக்குந்தோறும் இன்ப மளிக்கின்றது. ஈண்டு 'மாயவனுந் தம்முனும் போலே மறிகடலுங், கானலுஞ்சேர் வெண்மணலுங் காணுயோ' (திணைமாலை 58) 'மணிகிளர் நெடுமுடி வானவனுந் தம்முனும்போன், றணிகிளர் நெடுங்கட லுங் கானலுந் தோன்றுமால், (யா. வி. சூ. 78. மேற் கோள்) என்னும் பகுதிகள் நினைக்கத்தக்கன.

" பொன்புனை யுடுக்கையோன் புணர்ந்தமர் நிலையே
நினைமின் மாந்தீர்" (15.28-29)

" இருங்குன்றத் தடியுறை யியைகெனப்
பெரும்பெய ரிருவரைப் பரவுதுந் தொழுதே"
(15.65-66)

என அவ்விருவரையுமே பரவி வேண்டுதலுங் காண்க. மேற்கூறியவற்ருல் திருமாலிருஞ் சோலை மலையில் திருமாலும் பலதேவனும் சேர்ந்திருந்தாரென்பது தெரிகின்றது.

## திருமாலிருஞ் சோலைமலை

பதினைந்தாம் பாடலில் இம்மலை கூறப்படுகின்றது. உலகத்து மலைகள் பலவுள. அவற்றுட் சிறந்தன, பசியாற்றி நிறைபயன் தருஞ் சில குன்றுகள்; அவற்றுட் சிறந்தன, தெய்வங்கள் விரும்பியுறையுஞ் சில் குன்றுகள்; அவற்றுட் சிறந்தது, திருமாலும் பலதேவனும் வாழும் திருமாலிருஞ் சோலை மலையாம்; அம்மலையில் அருவியார்த்து ஒழுகுதலாற் சிலம்பாறு அழகுசெய்கின்றது; வேங்கைகள் பூத்துள்ளன; சுனையெல்லாம் நீலமலர் பொலிகின்றன; சுனையைச் சூழ்ந்து அசோகுகள் மலர்ந்துள்ளன; முல்லைகள் மகளிர் கற்புத்திறத்தைக் காட்டிக் கவினுறுகின்றன; குட்டியால் தழுவப்பட்ட குரங்குகள் பாய்கின்றன; மயில்கள் அகவுகின்றன; குயில்கள் கூவுகின்றன; இவற்றிற்கு எதிரொலி மலையிலிருந்து உண்டாகின்றன; இத்தோற்றம் முறையே தாளவொலியும் முழவொலியும் போலவும், குழலொலியும் மிடற்றுப் பாடலும் போலவுந் தோன்றுகின்றன.

இக்குன்று பழையது; புகழ் மிக்கது; திருமால் அருளினலல்லது பெறமுடியாத துறக்கத்தைத் தன்னை எத்தினர்க்கு எளிதின் வழங்குவது; கண்ட அளவில் மயக்கத்தை அறுப்பது என்று பாராட்டி,

"சென்றுதொழு கல்லீர் கண்டுபணி மினமே" (15.34)

"தைய லவரொடுந் தந்தா ரவரொடுங்
கைம்மக வோடுங் காத லவரொடுந்
தெய்வம் பேணித் திசைதொழு தனிர் சென்மின்"
(15.46-48)

என்பனவற்ருல் அம்மலைக்கட் சென்று அவனைத் தொழ இயலாதவர்கள் அம்மலையைக்கண்டு பணிமின்; அதுவும் இயலாவிடின் மனைவி, தாய் தந்தையர், குழந்தைகள், சுற்றத்தார் இவர்களோடு திசைநோக்கித் தொழுமின் எனக்கூறுவது, தெய்வ நினைவை யூட்டுஞ் சிறந்தபகுதியாம்.

## வையை

6, 7, 10, 11, 12, 16, 20, 22-ஆம் பாடல்களும் திரட்டில் ஒன்றும் உறுப்பொன்றும் வையையைப் பற்றியனவாம். இவற்றுள் 6, 11, 20-ஆம் பாடல்களை ஆசிரியனல்லந்துவனரும் 7, 10, 12, 16-ஆம் பாடல்களை முறையே மையோடக்கோவனரும், கரும்பிள்ளைப்பூதனரும், நல்வழுதியாரும், நல்லழிசியாரும் பாடியுள்ளார். இப்பாடல்கட்குத் துறைகளுங் கூறப்பட்டுள்ளன. 22-ஆம் பாடலையும், திரட்டையும், உறுப்பையும் பாடியவர் பெயரும் அவற்றின் துறைகளும் தெரியவில்லை.

வையைநதி, சையமலையிற் ரேன்றி, ஆண்டுள்ள மரங்களை வேருடன் அகழ்ந்து, பலவகை மணங்களுடன், வாளைமீன்கள் தாவிப் பாளைகளை யுண்ணுமாறு கமுகு தெங்குகளின் கழுத்தளவு முட்டி, நாற்றங்கால்களை வண்டலிட்டு மேடாக்கி, இள நெல்லின்கண்ணும் அரிகாற் சூட்டின்கண்ணும் பரந்து, மதுரை மதிலைப் பொருது, கரைகாப்பாரை யழைத்தற்பொருட்டும், கரையடைத்தற்கு ஆளழைத்தற்பொருட்டும், பறையொலி யெழுப் பாடுவார் பாக்கத்தைக்கொண்டு, ஆடுவார் சேரியையடைந்து, மகளிர்

மணலிற்புனைந்த பாவைகளைச் சிதைத்துப், பெரு முழக்கத்துடன் சென்று கடலைக் கூடிற்று எனக் கூறப்பட்டுள்ளது.

> " மாசில் பனுவற் புலவர் புகழ்புல
> நாவிற் புனைந்த நன்கவிதை மாறுமை
> மேவிப் பரந்து விரைந்து வினைநந்தத்
> தாயிற்றே தண்ணம் புனல் " (6.7-10)

என்னும் அடிகளாற், புலவர் தம் நற்செய்யுட் கட் பாடிய சிறப்பியல்புகள் பொய்யாகாமல் நாட்ட, விரைந்து எங்கும் பரந்து உழவுமுதற்றொழில்கள் பெருகச் சென்றது எனக் கூறியது புதிய முறையாய் நயமுடைத்து.

வையை பெருகியதெனக் கேட்டு மதுரை நகரத் தார் பெருமகிழ்வுடன் ஆரவாரித்துத், தம்மைப் பல வாறு அலங்கரித்துக்கொண்டு, நீர் விளையாட்டுக் குரிய புழுகுநெய்விட்ட துருத்தி, பனி நீர்க்கொம்பு, வெண்கிடை மிதவை, நன்கிடைத்தேர் இவற்றுடன், யானை, குதிரை, குதிரை பூண்ட சகடம், எருது பூண்ட வண்டி, கோவேறு கழுதை, சிவிகை இவற்றி லேறியும் நடந்தும் வையைக்குச் சென்றனர். வன்மை மென்மை இடைமையாகிய பண்பு வேறு பாடுடையவர்க ளெல்லோரும் நெருக்கத்தால் மென் னடையராய்ச் செல்லுதலுக்கு இயங்கள் ஒன்றற் கொன்று வேறுபாடுடையவேனும் விளம்பித நடையையுடைய தாளகதியால் எல்லாம் மென்ன டையவாய்ச்சேறல் உவமை கூறப்பட்டுள்ளது.

வையை பெருகிய மகிழ்ச்சியால் சிலர் தம் நிலை மறந்த செய்தி,

"திண்டேர்ப் புரவி வங்கம் பூட்டவும்
வங்கப் பாண்டியிற் றிண்டே ரூரவும்
வயமாப் பண்ணுந மதமாப் பண்ணவுங்
கயமாப் பேணிக் கலவா தூரவு
மகளிர் கோதை மைந்தர் புனையவு
மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்
முந்துறல் விருப்பொடு முறைமறந் தணிந்தவர்"
(20.16-22)

என்ற அடிகளால் அழகுறக் கூறப்பட்டுள்ளது.

வையைக்குச் செல்லுதற்பொருட்டுச் சிலர் ஊடலைத் தீர்த்தாரெனவும், ஒரு மகள் தன் கணவன் பரத்தையிற் சேறல் காரணமாக இருந்த ஊடலையும் மறந்து அவனுடன் பெண்யானைமேலேறினளென வுங் கூறிய செய்திகள் மகிழ்வூட்டுகின்றன. வையை வெள்ளம் மகளிர்க்கழகோ மகளிர் வையைக்கு அழகோ என்று ஒரு புலவர் பெருமான் கூறுகின் றனர்.

வையைக்குச் சென்றவர்கள் திருமருதமுன் றுறைக்கண் யாழும், வாய்ப்பாட்டும், குழலும், முழவும் ஆர்ப்பத், தலைக்கோல் மகளிரும் பாணரும் ஆட நீராடினர்.

கணவன் மனைவியர் நீராடுங்கால் நெட்டி முத லியவற்றாற் செய்யப்பட்ட வாளைச் சுழற்றியும், அவற்றாற் செய்யப்பட்ட குந்தமேந்தியும், தேரேறி யும், யானை குதிரைகளை வெள்ளத்துட் செலுத்தி யும், மூங்கிற் கழியால் நீரை வீசுவோரை அரக்கு நீர்வட்டால் எறிந்தும், மாலையைச் சுழற்றி எறிவார்

மேற் கொம்பினீரை வீசியும் விளையாடினர். இத் தோற்றத்தை நோக்குங்கால் வையைநதி போர்க் களம்போலக் காணப்பட்டது.

மைந்தர், வாழைத்தண்டாலே நீரில் தாவிச் செல்வோரும், தாழை மலர்த் தாதைத் திரையிலும் நுரையிலும் தூவுவோரும், ஓடத்திலேறி அதனை நீர்போகுந் திசையில் விரைவாகச் செலுத்துவோரும் நீர் செல்லுந் திசைக்கு எதிராக ஆடி உண்டான இளைப்பால் மெல்ல விளையாடுவோரும், மகளிர் இழைத்த சிற்றிலில் அவர் அட்ட சிறுசோற்றை யிட உண்டற்கு ஏற்பாரும், முன் இட்டுப் பின் மறுக்கும் மகளிருடைய பல பந்துகளையுங் கழங்குகளையுங் களவிற் கொண்டோடி அவர் அறிந்து வாங்கச் சென்றுழி எட்டாமல் நீருட் பாய்வாரும் ஆயினர். ஆதலால் வையைப் புனல், மைந்தர் வேலாலும் வாளாலும் போர்செய்யக் களிறுகள் தம்முட் பொருதலுற்ற களம்போலத் தெளிவின்றாயிற்று.

நீர்விளையாட்டால் மெலிந்த மகளிர் புணைகளை விட்டுக் கரையேறிச் சோலையில் எழுந்த அகிற் புகையால் ஈரம்புலர்த்தித் திசையெங்கும் மணங் கமழக் கலவைக் குழம்பு பூசினர். சில மகளிர் வெண்மையான கள்ளைக் குடித்தனர்; அம் மகளிரால் உறையினின்றும் எடுக்கப்பட்ட கள்விடும் வள்ளத்துக்கு மேகத்தினின்றுங் கழிக்கப்பட்ட மதியும், அவ் வள்ளத்தைத் தம் கையில் தாங்கியதற்கு முழுமதியைப் பாம்பு பற்றியதும், அவ்வள்ளத்துக்கள்ளை உண்பதற்குத் தேவமகள் மதியின் கலையை உண்ணுவதும்

உவமையாகக் கூறப்பட்டுள்ளன. சில மகளிர் தம்மீது வெண்டுகிலைப் போர்த்தனர்; சிலர் வெண்டுகிலைக் கூந்தலிற் சுற்றி முறுக்கி ஈரம் புலர்த்தினர்; சிலர் அகிற் சாந்து கருப்பூரம் இவற்றைச் செந்நிறம்பெற அம்மிக்கண் அரைத்தனர்; சிலர் பொன்னாற் செய்த சங்கு, நண்டு, இறுமீன், வாளைமீன் இவற்றை நீரிலிட்டு, விளைக பொலிக என்றனர். இவ்வாறு நீரிற் பொன் மீன் முதலியன விடும் வழக்கமுண்மையை "அவியா ராதனை அழல்பல வேந்தி" (6, 11) என்பதனுரையாலும் அறியலாம்; சிலர் இல்லது நோக்கி இளி வரவு கூறுமுன் நல்லது வெஃகி வினைசெய்தார்; ஈண்டு 'இலனென்னு மெவ்வ முரையாமை யீதல் குலனுடையான் கண்ணே யுள' (223) என்னுங் குறள் நினைக்கற்பாலது. இங்கே "ஈயென விரத்த லிழிந்தன்று" (204) என்னும் புறநானூற்றடியை நினைத்து இளிவரவு என்பதற்கு ஈயென்று சொல்லுதல் என உரை எழுதப்பட்டுள்ளது. சிலர் தம் கூந்தலிற் பத்துத் துவரையும் ஊட்டி நீராடினர். சிலர் எண்ணெய் போக இழைபொடியையிட்டுப் பிசைந்தனர். சிலர் நீர் தமக்கு இன்பளித்து உதவியதற்குக் கைம்மாறாக அந்நீருக்கு அழகாக மாலையும் சந்தனமும் கத்தூரியும் அணிகளும் இட்டனர். சிலர் மதுவூட்டினர். சில கன்னியர், முதுபார்ப்பனிமார் முறைமைகாட்டத் தம் தாயரொடு தைம்மாதத்தில் விடியற்காலத்து நீராடி, நீர்க்கண்ணே குளிர்வாடை வீசலால், கரைக்கண் உறையும் அந்தணர் வளர்த்த அழலைப்பேணி அதன் கண் தம் ஈரவணியைப் புலர்த்தினர். கன்னியர்

தைம்மாதத்தில் தம் தாயரொடு நீராடலால் அவ்வாடற்கு அம்பாவாடல் என்று பெயராமென்பதும், (அம்பா - தாய்) "தாயருகா நின்று தவத்தைந்நீ ராடுதல்" (11,91) என்னும் பகுதியும் ஈண்டு அறியத் தக்கன.

ஒருவன் வாழைத்தண்டைத் தழுவி விளையாடும் போது ஒருத்தியைக் கண்டான்; உடனே அவன் மனத்தை அவள் இழுத்தாள்; கையை, நீர் இழுத்தது; கண்கள் அவளிடம் நின்றன; நீர் அவனை அவளிடம் கொண்டு செல்லாது தன்செலவின் வழியே நெடுந் தூரம் இழுத்துச் சென்றது; அதனை அறிந்த அவள் தன் ஆயத்தைவிட்டு அவனைப் பின்தொடர்ந்தாள்; அவள் தாய் அவள் அன்புடைமையை யறியாது தனியே செல்லாதே ஆயத்திற்கூடு என்று அவளை விலக்கினாள்; அதனால் தலைவன்பாற் சேறலியலாமை யால் அம்மகள் அரற்றினாள் என்ற பகுதி நய முடைத்து.

நீராடச் சென்றவர்களுள் இளமகளிர், முகை போலும் பருவத்தார், புதுமலர் அவிழ்ந்தன்ன பருவத் தார் எனப்பிரிக்கப்பட்டுள்ளனர். அவருள் அலர்வா யவிழ்ந்தன்ன பருவமகளிரிற் சிலர், நீரழகைக்கண்டு நின்றனர்; சிலர் நீரணி மாடத்தை யூர்ந்து சென் றனர்; சிலர் மைந்தரொடு பொரும் விளையாடற் போருக்கு வரிசையாய் நின்றனர்; சிலர் முற்படை யினராய்ச் சென்று தாக்கினர்; சிலர் யாற்றிடைக் குறையை யடைந்து ஆண்டுள்ள தம் காதலரைத் தழுவினர்; சிலர் தழுவாது, யாமத்து எஞ்சியதும் கூடல் விருப்பத்தைத் தருவதுமாகிய ஊடலை மேற்

கொண்டனர்; சிலர் ஆசை மிகுதியால் ஊடலைவிட்டு அமளி சேர்ந்தனர்; இப்பருவத்துப் பரத்தையர் மேற்கூறியவற்றோடு யானை குதிரைகளை நடத்தியும் விளையாடினர்.

முகைப்பருவத்து மகளிர், பூவின் மேம்பாட்டை நாடி வந்துற்ற வண்டுபோலத் தாம் விரும்புங் காதற் கணவர் தம்மை விரும்பி வந்து எதிர்ப்பட்டுக் கூடுதற் பொருட்டு நீராடல் குறித்துத், தமக்குக் காவலாகிய பாட்டியரைத் தப்பி, அவர் தடுத்தலையும் கடந்து போய் வையைப்புனலை எதிர்கொண்டனர். அவர் மிக்கவிருப்புடன் வையை நீரை எதிர்கொண்டமைக்கு ஒருவர், தாம் நினைத்த பட்டினத்தைச் சேர்ந்து ஏற்றி விட்ட பண்டங்களை இறக்கி ஆண்டுள்ளனகொண்டு இடையூறின்றி வரும் நாவாய் வரவை மிக்க விருப் புடன் எதிர் கொள்ளுதல் உவமை கூறப்பட்டுள்ளது.

ஒரு களிறு, தனக்குப் பாங்காகிய பிடியைக் கண்டு மாலுற்று மேலிருக்கும் மைந்தர் நடத்த நடவாது ஒரு புலிமுக மாடத்தருகில் நின்றது; அப் பிடியும் மாலுற்றுத், தன்மேலிருந்த மகளிரொடு மெல்ல நடந்து சென்று, அப்புலிமுக மாடத்துச் செய்துவைத்த புலியைக்கண்டு அதனை மெய்ப்புலி என்றும், அது யானையைப் பாயுமென்றும் நினைத்துப் பாகரைக் கடந்து, மகளிர் நடுங்குமாறு தன் நிலை கெட்டது; அதனைக் கண்ட களிறு பிளிறி அங்குசத் துக்கு அடங்காமற் சிதைந்தது; உடனே களிற்றின் மேலிருந்த மைந்தர் அக்களிற்றைப் புலிமுகமாடத்தி னின்றும் நீக்கிப் பிடிசிதையாமல் அணைவித்து அதன் மேலிருந்த மகளிர் நடுக்கத்தைக் களைந்தனர்; இச்

செயல், பாயும், கயிறும், பொருத்தும் கெடச் சிதையு நிலையிலுள்ள மரக்கலத்தைப் பயினுல் திருத்தி அதனகத்தார் நடுக்கங் களையும் நீகான் செயலோடொக்கும். ஈண்டு "வையை நீர் விழவின் கண் மைந்தரும் மகளிருமே யன்றி விலங்குகளும் ஒத்த அன்பினவாயின அது நின்மாட்டு இல்லையாயிற்று என்பது கூறியவாறு" எனத் துறைக்கேற்ப உரை வரையப் பெற்றிருத்தல் கண்டு இன்புறத்தக்கது.

ஊடலையுடைய சில ஆடவரும் மகளிரும் தம் ஊடலின் திண்மை, யாழொலி மிடற்றுப்பாடல் ஆடல் என்பனவற்ருல் அழியக், கூடவேண்டுமென்ற எண்ணமுடையராயினர்; ஆயினும் ஒருவரையொருவர் வெற்றிகொள்ள வேண்டுமென்ற கருத்தால் முற்படுதற்கு நாணிக் கூடாது மெலிவுற்றனர். இந்நிலை தம்முட் போர்செய்து நொந்த மன்னர் சேனை இரண்டும் நட்பாதற்கு மனமியைந்தும் முன்னுகை உடன்பட்ட தென்னும் வார்த்தை பிறக்குமென்று நாணி அதற்கஞ்சிப் பின்னும் நோவொடு நின்றதை யொக்கும் எனக் கூறியது மிகவுஞ் சுவைதருகின்றது.

ஒருத்தி தன் கணவனை ஓரழகி பார்ப்ப, உடனே சினந்து தன் மாலை கோலாக அவனைப் புடைத்துத், தன் மார்பின் வடத்தால் அவன் முன் கையை இறுகக் கட்டி நீ பிழையுடையை என்று கூறப், பிழையற்ற அத்தூயவன் அவளை வணங்கி என்பிழை யாது? என்று கேட்டான். இதனைக் காண்மின் என ஒருவரொருவருக்குக் காட்டினர். இப்பகுதி அன்புரிமையை அறிவிக்கின்றது.

"நீரணி வெறிசெறி மலருறு கமழ்தண்
தார்வரை யகலத்தவ் வேரணி நேரிழை
ஒளிதிகழ்தகை வகைசெறி பொறி
புனைவினைப்பொலங் கோதையவரொடு
பாக ரிறைவழை மது நுகர்பு களிபரந்து
நாகரினல் வளவினை வயவேற நளிபுணர்மார்
காரிகைமது வொருவரினொருவர் கண்ணிற் கவர்புறச்
சீரமை பாடற் பயத்தாற் கிளர்செவிதெவி"

(11.62-69)

வையைக்கண் மைந்தரும் மகளிரும், நாகரைப்போல இடைவிடாது கூடற்கு, மது நுகர்ந்து களிமிக்கு இனியபாடலைக் கேட்டு ஒருவரையொருவர் கண்டு மகிழ்ந்தனர் என்பது இதன் கருத்தாம். ஈண்டு, 'ஐம்புலன்களாலும் இன்பம் நுகர்தற்கு இடனுயிற்று' என எழுதப்பட்டுள்ளது. ஐம்புலவின்பம் யாங்ஙனங் கிடைத்தவெனின் 'நளிபுணர்மார்' என்பதனுல் மெய்யின்பமும், 'மதுநுகர்பு' என்பதனுல் வாயின்பமும், 'காரிகைமது ஒருவரினொருவர் கண்ணிற் கவர்புற' என்பதனுற் கண்ணின்பமும், 'வெறி செறிமலர்' என்பதனுல் மூக்கின்பமும், 'பாடற்பயத்தாற் கிளர்செவிதெவி' என்பதனுற் செவியின்பமுங் கிடைத்தனவெனக் கொள்க.

மகளிர் ஒருவர் மேலொருவர் நீரை அள்ளிவீசி விளையாடினர்; அவ்வமயம், ஒருத்தி, நீர் தன் கண்ணிற் படுவதைப் பொறுக்கவியலாமற் கண்ணைக் கையாற் புதைத்தாள்; உடனே அவள்மேல் நீர் வீசியவள் தான் வெற்றி கொண்டமையால் தோற்ற அவள் தோள்களைத் தன் கழுத்திலணிந்த பொன்னுணுல் இறுகக் கட்டிச் சிறையாகப் பிடித்தாள்;

அவளுடைய கட்டை நீக்கும்பொருட்டு ஒருத்தி நீரிற் பாய்ந்தாள்; அப்போது அவள் கண்ணொளி பட்டமையால் வையைப் புதுப் புனலின் செந்நிறம் மாறிக் கருநிறமாயிற்று என்னும் விளையாட்டு, மகிழ் வளிக்கின்றது.

இங்ஙனம் பற்பல செய்திகள் சுருக்கமாகவும், விரிவாகவுங் கூறப்பட்டுள்ளன. விரிந்த பகுதியில் ஒன்றை ஈண்டுத் தருகின்றேன்.

இற்பரத்தையுடன் நீராடிய தலைமகன், காதற் பரத்தையிடம் வந்து வையை நீர் விழவு கூறி அவ ளுக்குத் தான் கொணர்ந்த தளிராகிய கையுறையைக் காட்டினன். அவன் கூறியவற்றை யுட்கொண்டு புலந்த காதற்பரத்தை, இத்தளிர், பழையவளாதலால் உன்னால் இகழப்படுகின்ற எனக்குக் கொய்யப்பட்ட தன்று; எப்பொழுதும் புதியராக உன்னால் விரும்பப் படும் மகளிர்க்குக் கொய்யப்பட்டது என்று கூறி னள். தலைவன், நீ அறிந்தாய்; இவை அவர்களுக்குக் கொய்யப்பட்டனவே உண்மை என்றான் (நீ அறி யாய் அவர்களுக்குக் கொய்யப்பட்டனவல்ல என் பது குறிப்பு) காதற் பரத்தை, பணிந்தாலும் அன் பின்றிக் கெட்ட பண்பினையுடையாய்! நின் களவு வெளிப்படுகின்றது; முன் எனக்காகக் கொய்துழி யெல்லாம் நீ விரைந்து வருவாயாதலால் அத்தளிர் துவண்டதுண்டோ? இஃது அவளுக்காகக் கொய் யப்பட்டு அவளால் மறுக்கப்பட்டமையால் என்பாற் கொண்டுவரப் பட்டது; ஆதலிற் காலந் தாழ்த்தமை யால் துவண்டிருத்தலைப் பார், அவள் நின் மார்பின் மாலை வாட நீ நின்று கொய்ததற்கும் இத்தழையைக்

கையிற்கொண்டு நீ செய்த தாழ்வுக்கும் உடன்பட்டி வளோ? சொல், என்றனள். தலைவன், அங்ஙன மன்று; வையைநீர் பெருகியது ஆதலாற் புணையேறி இவண் வரத் தாழ்த்தது; அதனால் தளிர் துவண்டது முருகன் குன்றத்து ஆணை; 'காமர் பெருக்கன்றோ வையை வரவு' என்றான். காதற்பரத்தை, இற் பரத்தை காமப்பெருக்கம் வையை வரவையொக்கும் என்று கூறினான் எனக்கருதி ஆம் ஆம் நீ சொல்லு கின்றது பொருத்தமே; காதற் காமம் எப்பொழுதும் ஒரு தன்மையிலே நிற்குமோ சிலர்பால் விரைவிற் சுருங்குதலாலும் சிலர்பால் விரைவிற்பெருகுதலாலும் வேனிற்காலத்துச் சுருங்கியும் கார்காலத்துப் பெருகி யும் வரும் வையைப் பெருக்கேயாம். நீ வேண்டாது சூளுற்றுப் பிழையுடையை யானுப் இனிச் சூளுறல், யாற்றிற் புனலோடும் வழியே செல்லும் மரம்போல வெளவுதல்வல்ல மகளிர் வயப்பட்டுப் புனலாடற்கண் அவர்க்குப் புணையாகிய மார்பினையுடையையாய்ச், சிறிதும் அஞ்சாது இரவெல்லாம் அவளோடு தங்கினை; வையைக்கண் உடைந்தமடையை யடைத்த விடத் தும் பின்னும் ஒழுகும் ஊற்றுநீர் போல முன்வருத் திய துன்பங்கெட நீ சேர்ந்தவிடத்தும் பில்கிப் பனி வாருங் கண்களையுடைய மகளிர் நெஞ்சத்தை இன் னுங் கனற்றி இவண் வருதலை ஒழி; என்றாள். தலைவன், ஒருத்தி யான் குளித்த குளக்கரையில் நின்றாள்; அவள் பேதைமையாற் குளத்துட்புக்கு அலையில் அழுந்திப் பின் அதனை நீங்கி எழுந்து என்மேல் மயங்கி விழுந்தாள்; அவளைக் குளித்த யான் எழுந்து அணுகி எடுப்பதன்முன் என்னை எதிர்

பாராமல் அவளே எழுந்தாள் ; அதனால் அவள் காம நுகர்ச்சியறியும் பருவத்தளல்லள் ; அவள் ஒழியக் கோதைபோல என் மார்பினுள் அழுத்தப்பட்டவள் யாவளோ ? அவளோடு யான் ஆடிய யாறு யாது ?' என்றான். காதற்பரத்தை, "தேறித் தெளிய வுணர் நீ பிறிதுமோர் யாறுண்டோ இவ்வையை யாறு" என்றாள். தலைவன், நான் தடத்துக் குளிக்க நீ இவ் வையை யாறென்ற மாறுபாடென்னை முன்புபோற் சொல்லளவிலன்றிப் பரங்குன்றின் தலையைக் கையால் தொட்டேன் என்று பின்னுஞ் சூளுற்றான். உடனே காதற்பரத்தையின் இல்லத்து முது பெண்டிர், அவனைநோக்கி உன் சினத்துக்கு அஞ்சும் அவனோடு ஊடல் நீங்கி விளையாடலைத் தொடங்கு ; துனி யின்கண் மிகுவாயானால் அவன் இன்பங்கெடும் ; உன் சினத்துக்குக் காரணமாகிய மகள், அவன் சொல்லிய பேதைப் பருவத்தாள் ; நீ சினமிக்கு இருட்பொழுதில் அவனை நீங்கின், இடனறிந்தாடி இனிதின் உணரும் ஒழுக்கத்துக்குப் பிழையாம் எனப் பலவாறு கழறவும், ஊடல் நீக்கவல்ல வாயில்கள் இரந்தும் பரந்தும் வருந்தி நீக்கவும் ஊடல் நீங்கினாள். பின் அவ்விருவரும் கள் அருந்தியும் நீராடியுங் கூடியும் ஊடியும் விளையாடியும் மகிழ்ந்தனர். (பாடல், 6)

சூளுறுஞ் செய்தி இப்பகுதிக் கண்ணேயன்றிப் பிறபாடற் பகுதிகளிலுங் கூறப்பட்டுளது. தலையிலடித்துச் சூளுறுதல் இக்காலத்துச் சிறப்பாகக் கருதப்படுதல் போல முற்காலத்துங் கருதப்பட்டதென்பது, இரண்டாமுறை 'தலைதொட்டேன் தண்பரங்குன்று' எனக் கூறிய குறிப்பாற்புலனாம்.

கோதைபோல என் மார்பினுள் அழுத்தப்பட்டவள் யாவளோ? என்புழிக் கோதை என்பதை முன்னிலைப் புறமொழியாகக் கொள்ளுதல் சிறப்பாம். நின்னைப்போல என் மார்பில் அழுத்தப்பட்டவள் யாவளோ? என்பதாம்.

பாண்டியனும் கூடல் நகரத்தாரும் நீராடியமைக்கு ஆகாயத்தின் வானாற்றில் இந்திரன் தேவர்களோடு ஆடியமை உவமை கூறப்பட்டுளது. இதனால் வையை நீராடற் சிறப்புப் புலனும்.

வையை நீராடல் தவப்பயனும் ஈகைப் பயனுமாகக் கருதப்பட்டதென்பது,

**"முன்முறை செய்தவத்தி னிம்முறை யியைந்தேம்
மறுமுறை யமையத்து மியைக
நறுநீர் வையை நயத்தகு நிறையே" (11.138-140)**

**"கண்ணியர் தாரர் கமழ்நறுங் கோதையர்
பண்ணிய வீகைப் பயன்கொள்வா னுடலால்"
(16.50-51)**

என்னும் பகுதிகளாற் புலனும்.

வையை காதலரைக் கூட்டி அவர்க்கு மகிழ் வளித்தலால்,

"தாமமர் காதலரொ டாடப் புணர்வித்தல்
பூமலி வையைக் கியல்பு" (20.110-111)

எனப் புகழப்பட்டுளது.

இறுதியில்,

"இலம்படு புலவ ரேற்றகை நெமரப்
பொலஞ்சொரி வழுதியிற் புனலிறை பரப்பிச்
செய்யிற் பொலம்பரப்புஞ் செய்வினை யோயற்க"
(10.126-128)

என்னும் பகுதியைக்கூறி வாழ்த்துகின்றேன்.

## கூடல்

கூடலின் பெருமை சில பாடல்களிலும் உறுப்புக் களிலுங் கூறப்படுகின்றது.

கூடல், மதிலாலும் நீண்ட மாடங்களாலும் பொலிந்து விளங்குகின்றது; பாடல் சான்று பல் புகழ் நிறையப்பெற்றுள்ளது; ஆண்டு மன்றல் கலந்த மணிமுரசின் ஆர்ப்பு எழுகின்றது; ஆண்டுள் ளார் வருந்தாது வருபுனல் விருந் தயர்கின்றனர்; அறிவிலும் வீரத்திலும் பிறரைப் போர் வெல்லுகின் றனர். என்பன பாடற் பகுதிகளாற் புலனாகின்றன.

உறுப்புக்களுள்,

**"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்**
**பூவொடு புரையுஞ் சீரூர் பூவி**
**னிதழகத் தனைய தெருவ மிதழகத்**
**தரும்பொகுட் டனைத்தே யண்ணல் கோயில்**
**தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்**
**தாதுண், பறவை யனையர் பரிசில் வாழ்நர்**
**பூவினுட் பிறந்தோ னாவினுட் பிறந்த**
**நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப**
**வேம வின்றுயி லெழுத லல்லதை**
**வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்**
**கோழியின் எழாதெம் பேரூர் துயிலே"**

என்பது மிகச்சிறந்ததாம். மதுரை நகர், திருமால் திருவுந்தித் தாமரைபோலும்; தெருக்கள், அத்தாமரை இதழ்களை நிகர்க்கும்; சிவன்கோயில், அத்தாமரைப் பொகுட்டை யொக்கும்; தமிழ்க் குடிகள், அதன் தாதைமானுவர்; பரிசிலர், அத்தாதை யுண்ணும்

அறுகாற் பறவைகளைப் புரைவர்; காலையில் வேத ஒலியைக் கேட்டே அந்நகரத்தார் துயிலெழுவர்; கோழி கூவும் ஒலியால் துயிலெழார். என்பது இதன் கருத்தாம். இங்கே

"கோதி லாதசெஞ் சூட்டுடை வாரணங் கூவ
ஓத ஞாலத்து மற்றைய தலத்துளார் விழிப்பர்
ஈத லேற்றலோ டறுதொழி லிருபிறப் பாளர்
வேத நாதத்தின் விழிப்பதவ் வியனகர் மாக்கள்"

என்னுந் திருவாப்பனூர்ப் புராணங் காண்க.

"ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்குஞ்
சேய்மாடக் கூடலுஞ் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வா ரெனப்படுவார் மற்றையார்
போவாரார் புத்தே ளுலகு"

என்னும் பகுதி நயமுடைத்து. ஈண்டு

"ஈத்துவக்கு மின்ப மறியார்கொ லுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்" (228)

என்னுந் திருக்குறளும்,

"அறம்பெரி தாற்றி யதன்பயன் கொண்மார்
சிறந்தோ ருலகம் படருநர் போல" (19.10-11)

என்னும் பகுதியும்,

"பொலம்பூங் காவி னன்னாட் டோரும்
செய்வினை மருங்கி னெய்த லல்லதை
உடையோ ரீதலு மில்லோ ரிரத்தலுங்
கடவ தன்மையிற் கையற வுடைத்து" (38)

என்னும் புறநானூற்றடிகளுங் காண்க.

இங்கே 'இரவலர் வாராவிடினும் அவரைத் தேடித் தேரிலழைத்து வந்து அவருக்கு உணவளிப்பான்' என்னும், பிறநூலிற் காண்டற்கரிய உயர்ந்த கருத்தமைந்த "வாரா ராயினு மிரவலர் வேண்டித், தேரிற் றந்தவர்க் கார்பத னல்கும், நசைசால் வாய்மொழி யிசைசா லேறுண்றல்" (55) என்னும் பதிற்றுப் பத்தடிகள் நினைவில் வருகின்றன.

## களவொழுக்கம் தமிழுக்கே உரியது

களவொழுக்கம் தமிழ் மொழிக்கே உரியதாய்க் கற்பினும் சிறந்ததென்பது அறிஞர் அனைவரும் அறிந்ததே. இதனை 'இன்றமி ழியற்கை இன்பம்' என்னும் சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியரெழுதிய 'இனிய தமிழ்கூறிய இயற்கைப் புணர்ச்சியாகிய இன்பம்' என்னும் உரையானும், ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்தக் கருதிய கபிலர் களவுப் புணர்ச்சியைக்கூறும் குறிஞ்சிப்பாட்டைப் பாடியதனும், சிவஞான சுவாமிகள் தொல்காப்பியப் பாயிர விருத்தியுள், 'ஈண்டுக் கூறும் பொருட் பாகுபாடுகள் பொதுவாகாது தமிழிற்கே சிறந்து வேறெனன்றாற் பெறப் படாமையின் இப்பொருள்பற்றிவரும் பரிபாடல்.........பதிற்றுப் பத்து முதலிய செய்யுளாராயப் புகுந்தார்க்கு' எனவும், முதற் சூத்திர விருத்தியுள், 'கந்தருவ வழக்கிற் கற்பினும் களவு சிறந்ததாக லானும்' எனவும் எழுதிய வாற்றானும், 'சிறப்பினாற் பெயர்பெற்றது களவியல் என்பது; என்னை? களவு கற்பென்னுங் கைகோளிரண்டனுட் களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன்

(சூ. 1. உரை) என்னும் இறையனாரகப்பொருளுரை யானும் அறியலாம்.

இச்செய்தியைக் குன்றம்பூதனர், கரணமொடு புணரும் கற்பிற் கூட்டம் சிறந்ததெனக் கொள்ளும் நான்மறைப் புலவரை விளித்துக் கூறுகின்றார்.

“காதற் காமங் காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலிற் சிறந்தது கற்பே யதுதா
னிரத்தலு மீதலும் இவையுள் ளீடாப்
பரத்தையுள் ளதுவே பண்புறு கழற
ரேள்புதி துண்ட பரத்தையிற் சிவப்புற
நாளணிந் துவக்குஞ் சுணங்கறை யதுவே
கேளணங் குறமனைக் கிளந்துள சுணங்கறை
சுணங்கறைப் பயனு மூடலுள் ளதுவே, அதனல்
அகற லறியா வணியிழை நல்லா
ரிகறலைக் கொண்டு துனிக்குந் தவறிலரித்
தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்” (9.14-26)

இவ்வடிகளால், மெய்யுற்றறியாதார் இருவர் அன்பொத்து ஊழ் வகையால் தாமே மெய்யுற்றுக் கூடும் கூட்டமாகிய, காதலையுடைய களவுக் காமமே காமத்துச் சிறந்தது; அன்பொவ்வாத கற்பு, தலைவன் பரத்தைபாற் சேறலான் வரும் ஊடலாற் சிறந்தது; அது, பரத்தை யில்லத்துக்கு நாட் காலையிற் செவ்வணியணிந்து ஒருத்தியையுய்த்துத் தலைமகள் பூப்பை அறிவிப்பத் தலைவன் வந்து மகிழுங் கூட்டத்தை யுடையது; அக்கூட்டங்கள் தலைமகளுக்குப் பாங்காயினர் கேட்டு வருத்தமுறப் பரத்தையால் தன்

மனைக்கண் அலர் தூற்றப்பட்டுள ; அக்கூடலின்பம் களவிற்போல இயல்பானன்றி ஊடலானுயது ; அதனுல் இக்கற்பிற்போலத் தலைவர் பிரிதலறியாத களவிற் கூட்டத்தையுடைய மகளிர் தலைவரோடு மாறு கொண்டு ஊடும் குற்றமுடையரல்லர் ; இப் புணர்ச்சியை வேண்டுகின்ற பொருளிலக்கணத்தை யுடைய தமிழை ஆராயாத தலைவரே களவொழுக்கத்தைக் கைக்கொள்ள மாட்டார் என்னுங் கருத்துக்கள் புலனுகின்றன.

ஈண்டுப் பரிமேலழகர் "அக்களவிற் புணர்ச்சியை யுடைமையான் வள்ளி சிறந்தவாறும், அத் தமிழை ஆய்ந்தமையான் முருகன் சிறந்த வாறுங் கூறுகின்முர்" என்றெழுதியிருத்தலுங் காண்க.

**"ஆராக் காம மார்பொழிற் பாயல்**
**வரையகத் தியைக்கும் வரையா நுகர்ச்சி**
**முடியா நுகர்ச்சி முற்ருக் காதல்"** (8.40-42)

என்னும் அடிகளாற், களவுப் புணர்ச்சியை வரையாத நுகர்ச்சி, முடிவு பெருத இன்பம், நிறையாத காதல் எனவும்,

**"மாமயில் அன்னுர் மறையிற் புணர்மைந்தர்**
**காமங் களவிட்டுக் கைகொள்கற் புற்றென**
**மல்லற் புனல்வையை மாமலை விட்டிருத்த**
**லில்லத்து நீதனிச் சேற லிளிவரல்"** (11.41-44)

என்னுமடிகளால், வையை பிறந்தவிடமாகிய மலையை விட்டுக் கடலாகிய தலைவன் இல்லத்துச் சேறல், மைந்தரும் மகளிரும் காமஞ்சிறப்புடைய களவொழுக்கத்தை விட்டு இளிவந்த கற்பொழுக்கத்தை

யுற்றுற்போலும் எனவும் ஆசிரியனல்லந்துவனர் கூறியதனாலும் இதன் சிறப்பை அறியலாம்.

ஈண்டு, உவமேயமாகிய யாறு மலையை விட்டுக் கடலை யடைதல்

"இருங்கடற்கூங்கிவரும் யாறெனத் தங்கான்"
(16.27)

எனத், தலைவன் விரைந்து இல்லஞ் சேறற்கு உவமான மாதலும் நினைக்கத்தக்கதாம்.

"பண்புறு கழற, ருேள்புதி துண்ட பரத்தையிற் சிவப்புற
நாளணிந் துவக்குஞ் சுணங்கறை யதுவே" (9.18-20)

என்னும் அடிகளாற் பரத்தையிற் பிரிந்த தலைவனுக்குத் தலைமகள், பூப்பைச் செவ்வணி யணிந்து ஒருத்தியை யுய்த்தல் வாயிலாக அறிவிக்கும் வழக்கம் முற்காலத்து உண்மை புலனும்.

அங்ஙன மறிவித்தலைக் கழற லென்றது,

"பூப்பின் புறப்பா டீராறு நாளும்
நீத்தகன் றுறைதல் அறத்தா றன்றே"
(இறை, சூ. 43)

என்பது போன்ற ஆன்றோர் வாக்கைக் கருதியாம். மகப்பேற்றை வெள்ளணி வாயிலாக அறிவித்தல் உண்டென்பதும் உணர்க.

சுணங்கறை என்பதற்குக் கூட்டம் என்பது பொருளாம். கூட்டம், பிரிவினல் வரும் சுணங்கை (தேமலை) அறுப்பதாற் சுணங்கறை எனப் பட்டது. கூட்டம் சுணங்கை அறுக்கும் என்பதை,

"ஊருண் கேணி யுண்டுறைத் தொக்க
பாசி யற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே." (399)

என்னுங் குறுந்தொகைப் பாடலாலும் உணரலாம்.

## அணிகள்

### உவமை

மேற் பலவிடங்களிற் சிறந்த பல உவமைகள் காட்டப்பட்டன. ஆண்டுக் காட்டப்படாதவற்றுட் சிலவற்றை ஈண்டுத் தருகின்றேன்.

ஏழாம் பாடலிலும், பதினொன்றும் பாடலிலும் வையையின் இயல்புக்குப் பல உவமைகள் காணப் படுகின்றன.

ஏழாம் பாடலில், வையை பெருகி அரிய பல விடங்களிலுஞ் சென்றமைக்குப், பகை நிலத்தைக் கொள்ளக் கருதிய பாண்டியன் சேனை கிளர்ந்து எங்குஞ் செல்லுதலும், தான்வேண்டிய இடங்களிற் சென்றமைக்கு, ஆடலியல்பறியாதவள் தான்வேண் டியவாறு நடப்பதும், அணைகளை முறித்துப் போத லுக்கு, ஊடலியல்பு அறியாத ஊடல் உவகையள் கணவனைக் கடந்து நீங்குதலும், நறியன பல கூடிய மணத்தையுள்ளே யடக்கிப் புதுமணங் கமழ்தலுக்கு, நூன் முறைப்படி ஆக்கப்பட்ட கலவையது நாற்ற மும், அதன் விரைவுக்கு, ஊடலைத் தான் தீர்க்கவும் தீராத தலைவியைக் கூடுதற்கு முயலும் தலைவனுடைய

ஆசைப் பெருக்கத்தின் விரைவும், தன்னிடத்து நீராடுவாருடைய கண்ணி கைவளை முதலியவற்றை அது கவர்ந்தமைக்குப், பாண்டியன் தன் பகை நிலத்திடைப் புக்கபோது ஆண்டுள்ளனவெல்லாங் கவருதலும் உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன.

பதினொன்றும் பாடலில், சந்திரன் நாடொறும் வளர்ந்து நிலவைப் பரப்பி உலகிற்குப் பயன்படுதல் போல வையை நதி பெருகி நீரைப் பரப்பி உலகிற்குப் பயன்படுகின்றதெனவும், நிறைமதித் தேய்வு போல நீர் குறையினும் எட்டாநாட் சந்திரனைப் போல ஒருபகுதி குறைவதன்றி அமாவாசை போல முழுதுங் குறையாதெனவும் தலைமகன் தலைமகளையுடன்கொண்டு செல்லும்போது அவள் சுற்றத்தார் சுரத்திடைச் சென்று தடுத்தல்போல மதுரையார் நீராடுதற் பொருட்டு வையைச் செலவினிடையே புகுந்து தடுத்தனர் எனவுங் கூறப்பட்டுள்ளன.

பிற உவமைகளுட் சில வருமாறு :—காமம் மிக்கெழ அதனால் உண்டாகிய கண்ணின் களிப்புப் புலப்படவும் அதனை ஊரிலுள்ளார்க்கு அஞ்சி மறைப்பவர் நிலைமை, கள் உண்டமையால் மயக்கம் எழ அதனால் உண்டான மதர்ப்பு அவர் நிலையை வெளிப்பட அறிவிக்கவும் ஊராருடைய பழிக்கு அஞ்சி அதனை மறைப்பவர் நிலையைப் போன்றது. (10.63-68)

கருநரைக்குக் கடல் நிரைதிரையும், தூநரைக்குச் சுடர்மதிக் கதிரும் உவமையாம். (திரட்டு. 1.41-42) ஈண்டு "விரவு நரை யோரும் வெறுநரை யோரும்" (10,22) என்னும் அடி நினைக்கத்தக்கது.

மேகங்கள், பாண்டியன் போர்க்கு நிறுத்தப் பட்ட யானைகள் போல நிறைந்து, போர்க்களத்து அவன் முரசு முழங்குவது போல இடித்து, அவன் சேனைகள் வில்லினின்றும் விரைவாகவிட்ட அம்புகள் போல நீர்த்துளிகளைச் சிதறி, அவன் வேல்போல மின்னி, அவன் கொடைபோல நீர் பொழிந்தன. ஈண்டு,

"வண்மைபோல் வானம் பொழிந்த நீர்" (22-8)

என்றதனாலும்,

"கரையே கைவண் டோன்ற லீகை போன்ம்" (16-1)

என்றதனாலும்

"இலம்படு புலவ ரேற்றகை ஞெமரப்,
பொலஞ்சொரி வழுதி" (10-126-127)

என்றதனாலும் பணிவி லுயர்சிறப்பிற் பஞ்சவன் கொடைப் பெருமையும், ஈண்டும் வேறுசில இடங் களிலுங் கூறிய உவமைகளால் அவ் வெருவரு கொல்யானை வீங்குதோண் மாறன் வீரமும் புலனும். காதலரோடு விளையாட் டயர்ந்திருக்கவும் பின்னும் புனலின்மேற் செல்லுகின்ற மகளிர் கண்கள், மன்மத னுடைய மணஞ்சிறந்த அம்பினது, அரத்தாற் கூர்மையிடப்பட்ட வாய்போலும். என்பது இல் பொருளுவமையாம். (10.94-99)

"இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்" (குறள், 946)

என்புழிப்போல முக்கியப் பொருளையே உவமான மாகவும் உவமேயமாகவுங் கூறும் அழகு இந்நூலிற் பலவிடத்துக் காணப்படுகின்றது ; அவை,

" வாயடை யமிர்தநின் மனத்தகத் தடைத்தர
மூவா மரபு மோவா நோன்மையுஞ்
சாவா மரபி னமரர்க்காச் சென்ற " (2.69-71)
" நின் புகழுரு வினகை" (3.32)

முதலியனவாம். இங்ஙனம் கூறுதற்கு இலக்கணம்,

" முக்கியப் பொருட்கு முக்கியப் பொருளுவமை
புணர்ப்பது முதன்மைப் புலனெறி வழக்கே"
(சூ. 109)

என மாறனலங்காரத் துண்மை காண்க.

## வஞ்சப் புகழ்ச்சியணி

" நகையச் சாக நல்லமிர்து கலந்த
நடுவுநிலை திறம்பிய நயமி லொருகை" (3.33-34)

தேவர்க்கே அமுதளித்தமையால் திருமால் கை நடுவு நிலைதிறம்பிய நயமிலொருகை எனப்பட்டது.

" காரொவ்வா வேனில் கலங்கித் தெளிவரல்
நீரொவ்வா வையை நினக்கு" (11.72-73)

கார்காலத்துக் கலங்கி வேனிற்காலத்துத் தெளிதலால் இந்நீர்மை எஞ்ஞான்றும் ஒத்திருக்கின்றதில்லை.

## சிலேடையணி

" செறுவே, விடுமலர் சுமந்து பூநீர் நிறைதலிற்
படுக ணிமிழ்கொளை பயின்றன ராடுங்
களிநா ளரங்கி னணிநலம் புரையும்" (16.11-13)

ஈண்டு, விடுமலர் சுமந்து பூநீர் நிறைதல் என்பது வயலொடு இயையும்போது, அவிழ்ந்த மலர்களைச்

சுமந்து பொலிந்த நீர் நிறைதல் எனவும், அரங்கொடு இயையும்போது, கமலவர்த்தனைக்கண் தூவிய மலர்களைச் சுமந்து பூதர் அருச்சனைப் பூவும் நீரும் நிறைதல் எனவும் பொருளாம்.

"மணிவரை யூர்ந்த மங்குன் ஞாயிற்
றணிவனப் பமைந்த பூந்துகில் புனைமுடி" (13.1-2)

ஈண்டு, மணிவரை யூர்ந்த என்பது துகிலோடு இயையும்போது, நீலவரைக்கட் பரந்த எனவும், முடியோடு இயையும்போது, நீலவரையை யூர்ந்த எனவும் பொருளாம்.

## முறை நிரனிறையணி

"ஆட லறியா வரிவை போலவும்
ஊட லறியா வுவகையள் போலவும்
வேண்டுவழி நடந்து தாங்குதடை பொருது"
(7.17-19)

"வேலாற்று மொய்ம்பனின் விரைமல ரம்பினோன்
போலாற்று முன்பிற் புனைகழன் மைந்தரொடு
தாரணி மைந்தர்" (22.26-28)

முதலியன. இவற்றுள் உவமையணியு மமைந்திருத்தல் காண்க.

## உலக வழக்கு நவிற்சியணி

"எதிர் குதிராகின்று" (8.21)

'எதிர் குதிரென்பது ஒருலகவழக்கு'

"ஏறுமா றேற்குமிக் குன்று" (18.6)

'ஏறுமாறு என்பது பகைத்தற்கு ஒருலகவழக்கு'

## விரைவுயர்வு நவிற்சியணி

" வரையார்க்கும் புயல்கரை
திரையார்க்குமித் தீம்புனல் " (16.48-49)

மேகம் வரைக்கண்ணே ஆரா நிற்கும் அவ்வளவில் இவ்வகைத்தாகிய தீம்புனலுள் திரை கரைக்கண்ணே ஆராநிற்கும் என்பது பொருளாம்.

## உரைநுட்பம்

பரிமேலழகர் அறிவாற்றலைத் திருக்குறள் உரை படித்தார் யாவரும் நன்குணர்வர். இந்நூலிலிருந்துஞ் சில உரைப்பகுதிகளைக் கூறுகின்றேன்.

அருஞ் சொற்களுக்குப் பொருத்தமாகப் பொருள் காண்டலில் இவர் மிக வல்லுநர்.

" தருமனு மடங்கலும் " (3.8) தருமன் — யமன். மடங்கல்—அவன் ஏவல் செய்யுங்கூற்றம்.

" கூற்றமு ஞமனும் " (3.21) கூற்றம்—மேற் சொல்லியமடங்கல்.

" வல்லாரை வல்லார் செறுப்பவும் " (9.74) வல்லார்—வல்லுப்போர் வல்லார்.

எதிர்கழறும்—ஒக்கும் (2.37)
ஏ—இறுமாப்பு (7.55)
கையறவு—ஊடல் (10.33)
ஒய்வார்—ஒழுக்குவார் (10.102)
ஒய்ய—தப்ப (20.39)
தெவி—நிறைத்து (11.69)
கல்லகாரப்பூ—நீர்க் குளிரிப்பூ (11. 103)

புட்டகம்—புடைவை (12.17)
திணை—இல் (16.7)
முஞ்சம்—ஒரு தலையணி (16.8)
கூரம்—யாழ் (19.44)
குதுகுதுப்ப—ஆசைப்பட (20.13)

வாயடை—உணவு. வாயின்கண் அடுக்கப் படு தலின் அப்பெயர்த்தாயிற்று (2,69)

நொசிப்பு—சமாதி. மனத்தினை யொன்றாக்கி நுண்ணியதாகக் காண்டலாதலிற் சமாதி, நொசிப்பு எனப்பட்டது (5,37)

ஏணிப்படுகால்—மேகலை. இருகோவை முதல் முப்பத்திருகோவை யீறாக ஒன்றற்கொன்று வட மேறுதலால் மேகலையை ஏணிப்படுகால் என்றார் (10,11)

மூஉய்—பூப்பெட்டி. மூடுதலுடைமையாற் பூப் பெட்டியை மூஉய் என்றார் (10.13)

ஏஎ—சாமவேதம். உபசாரவழக்கால் ஏஎ என் னும் இசையுடையதனை ஏஎ என்றார் (3,62)

ஈதா—இதனைப்பார். ஈதா என்பது ஒரு மரூஉ முடிபு; அஃது இக்காலத்து இந்தாவென்று வழங்கப் படும்; சுட்டு நீண்டது (8,60)

உருவின, (3,32) பேணிய (7,63) என்பன உவமச் சொற்களாய் வந்துள்ளன.

நீயா நினைவ—அன்பாது விடாத நினைவின் கண்ணேய் (3,84)

ஒன்ரு உயர்கொடி ஒன்றின்று—ஒன்ருக உயர்ந்த கொடியை அக்கொடிகள் ஒன்றுதல் இன்று. ஒன்ருதல்—முதலாதல். ஒன்றுதல்—ஒத்தல் (4,41)

மாற்றேமாற்றலிலேயே — மாற்றுதற்ருழிலும் அதற்கு ஏமஞ் செய்தற்ருழிலும் உடையையல்லை (4,53) மாற்று ஏமம் ஆற்றல் இலை எனப்பிரிக்க வேண்டும்.

மங்குல் ஞாயிறு—இருளைக் கெடுக்கும் ஞாயிறு. இதனை நோய் மருந்து என்ருற் போலக் கொள்க. (13,1) ஈண்டு "மறத்திற்கு மஃதே துணை" (மறத்தை நீக்குதற்கும் அவ்வன்பே துணையாம்) (76) "துன்பத் திற் கியாரே துணையாவார்" (துன்பம் வந்துழி அது நீக்குதற்கு வேறு துணையாவார் ஒருவருமில்லை) (1299) என்னுந் திருக்குறட் பகுதிகள் காணத்தக்கன.

"மாலை யணிய விலைதந்தான்" (20,79) என்புழி மாலையணிதல் என்பதனை இடக்கரடக்கல் எனக் கண்டு, புணர்தல் என உரை கூறியது நய முடைத்து.

"நீ யன்பன் எற்கன்பன்" (20,81) இது பரத்தை தலைவியை நோக்கிக் கூறியதாம். 'நீ சால அன்பு பூண்டவன் என் மாட்டு அன்புடையான்' என்பது உரை. தலைவி அவனிடம் அன்பு பூண்டாள் என அவளுக்குக் குறை தோன்றுமாறும், தலைவன் தன்னிடம் அன்பு பூண்டானெனத் தனக்கு உயர்வு தோன்றுமாறுங் கூறியமை கண்டு மகிழத் தக்கது.

" வடுவில் கொள்கையி னுயர்ந்தோ ராய்ந்த
கெடுவில் கேள்வியு ணடுவா குதலு
மிந்நிலைத் தெரிபொரு டேரி னின்னிலை
நின்னிலைத் தோன்றுநின் தொன்னிலைச்
சிறப்பே" (2.24-27)

'தவறில்லாத விரதங்களையுடைய ஞானிகள் ஆராய்ந்த வேதத்தால், தெரிந்துணரின் உயிர்தொறும் உயிர் தொறும் அந்தரியாமியாய் நிற்றலுமாகிய இந்நிலைமை களும் நின்கட்டோன்றும் நின் தொன்னிலைமை போல நினக்கேயுள்ள விசேடம். நின்னிலைத் தோன் றும் என்புழி நிலை என்பது இடப்பொருட்டாய் நின் றது' என்பதுரை. வடுவில்கொள்கையின் உயர்ந்தோ ராய்ந்த கெடுவில் கேள்வியுள் தேரின் தெரிபொருள் நடுவாகுதலும் இந்நிலை நின்னிலைத் தோன்றுநின் தொன்னிலை நின்னிலைச்சிறப்பு எனக்கொண்டு கூட்டவேண்டும்.

பரிபாடற் புத்தகத்தில், இந்நிலைத்தெரி பொரு டேரி னின்னிலை என்புழி, இறுதிச்சீர் நீந்நிலை எனக் காணப் படுகின்றது. அங்ஙனமிருப்பின் அதனை நிந் நிலைச்சிறப்பு எனச் சிறப்பென்பதனோடு கூட்டி நினக்கேயுள்ள விசேடம் எனப்பொருள் கோடலிய லாது. ஆதலால் அதனை நின்னிலை எனத்திருத்த வேண் டும். அவ்வாறே பாடபேதமும் இருத்தலால் அதுவே கொள்ளத்தக்கதாம்.

ஈண்டுத் தெரிபொருள் என்பதற்கு உயிர் எனப் பொருள் கண்டு 'தெரிபொருள் என்னும் வினைத்

தொகை தெரியும் பொருளென நிகழ்காலத்தான் விரிக்கப்படும்; உயிர்ப்பொருட்கு உணர்தற்பண்பு இயற்கை யாதலின்' என விளக்கப்பட்டிருத்தல் காணத்தக்கதாம்.

"பாழெனக் காலெனப் பாகென வொன்றென
இரண்டென மூன்றென நான்கென வைந்தென
ஆறென ஏழென எட்டெனத் தொண்டென"
(3.77-79)

என்புழிப் பாழ் புருடதத்துவம். கால் - ஐம்பூதம், பாகு - கன்மேந்திரியம் ஐந்து; ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து என்பன முறையே ஓசை ஊறு ஒளி சுவை நாற்றமாம். ஆறு - ஞானேந்திரிய மைந்தும், மனமும். ஏழு-அகங்காரம். எட்டு - மான். தொண்டு - மூலப்பகுதி. தத்துவம் இருபத்தைந்தும் இவ்விடத்துக் கூறப்பட்டன.

"மூரிதவிர முடுக்கு முதுசாடி' (20,54) சாடி - சால். சாலென்னும் பெயருடைமையாற் சாடி எனப்பட்டது" இங்கே, சாடி என்பதற்கு உழுசால் என்னும் பொருளின்மையும் சால் என்னும் பெய ருண்மையும் நினைந்து, பெயரிருத்தலாகிய இயைபு பற்றி உழுசால் எனப்பொருள்கண்ட நுண்ணறிவு நோக்கத்தக்கது. "கூந்தல், எரிசினங் கொன்றோய்' (3,31-32) கூந்தல் - கேசி; கேசி - குதிரையாய் வந்து பொருதாேனாரசுரன். இப்பெயர் கேசமென்னும் வடமொழி முதனிலையாக முடிந்தமையின் அதன் பொருண்மைபற்றிக் கூந்தல் என்றார்" என்பதுங் காண்க.

## விசேடவுரை

'நகையச் சாக நல்லமிர்து கலந்த' (3,33) அமிர் துண்டலை மறப்பித்த காமமகிழ்ச்சி பின் இறத்தற்குக் காரணமாயினமையின் 'நகையச்சாக' என்றார்.

'திரைபா டவிந்த முந்நீர்' (4,6) திரைகிளர்ந்த வழி வெண்மை யுடைமையின் 'திரைபாடவிந்த' என்றார்.

'பொன்னிற் றேன்றிய புனைமறு மார்ப' (4,59) திருமகள் ஆதலாற் 'புனைமறு' என்றார்.

'மலையாற்றுப் படுத்த மூவிரு கயந்தலை (5,10) குழவிப்பருவத்து இவ்வீரமெல்லாஞ் செய்தாய் என் னுங் கருத்தாற் 'கயந்தலை' என்றார்.

'அளிப்ப துனிப்ப வாங்காங் காடுப' (6,104) துனிப்ப எனப் பன்மையாற் கூறிற்று, உணர்ப்பு வயின்வாரா வூடலை நோக்கி.

'யார்பிரிய யார்வர யார்வினவ யார்செப்பு' (8,72) என்றது, இருதலைப் புள்ளி னோருயிரேனுதலாற் பிரிவும் வரவும் வினவும் செப்பும் நம்மிடை உளவாகா வென்றவாறு.

'மாந்தீந் தளிரொடு வாழையிலை மயக்கி' (10,6) என்பது, புனல், கரையிற் சோலைகளுள் மாச்சினை களைத் தோய்ந்து செல்கின்றமை தோன்ற நின்றது.

'மையாட லாடன் மழபுலவர்' (11,88) கல்வி தொடங்கின அளவாதலின் மழபுலவரென்றார்.

'பிடிமே லன்னப் பெரும்பெடை யனையோர்' (12,27) பிடியை நடையால் வென்று எறிஞரென்பது போதர அன்னப் பெடையனையோ ரென்றார்.

'துளவஞ் சூடிய வறிதுயி லோனும்' (13,29) யோக உறக்கமாதலால் அறிதுயிலெனப்பட்டது.

'கேள்வியு மறிவு மறத்தொடு நுண்ணியை' (13,55) அன்பர் தம் குறை தம்முள்ளே கூறியும் அறிதலாற் கேள்வி நுண்ணியை என்றார்.

'விரகியர் வினவ விஞைவிறுப் போரும்' (19, 49) விரகியர் என்றதனல் வினவுகின்ற மகளிர் பிரியாமைக் குறிப்பினராதலும் அவ் விஞைவிற்கு இறை சொல்லுவார் கணவராதலும் பெற்றாம்.

'படையும் பவழக் கொடிநிறங் கொள்ளும்' (19, 98) குருதி தோய்ந்துழியல்லது அந்நிறம் இயல் பன்மையிற் 'கொள்ளும்' என்றார்.

'குருதிக்கோட் டழிகறை தெளிபெறக் கழீஇயின்று' (20, 5) மழைத்துகளது விசை கூறுவார் கறை கழுவிற்றென்றார்.

'வாய்மொழி யோடை மலர்ந்த, தாமரைப் பூவினுட் பிறந்தோனுந் தாதையும்' (3, 12-13) தாமரைப்பூப் படைப்பிற்கு முதலாக வந்து மலருமென்பதற்கு வேதம் ஞாபகவேது வாதலின் அதற்கு அதனை ஓடையாக உபசரித்துக் கூறினர்.

பதினென்காம் பாடலீற்றில் 'வாரு மென்பவர் சொற்போன்றன' (9) என்றதனானும், 'எழீஇப்

பாடும் பாட்டமர்ந் தோய்' (24) என்றதனும், இப் பருவத்தே தலைமகன் வரும் என்பது பட்டவாறு கண்டுகொள்க, என இப் பாடலின் துறையை அமைத்துக் காட்டியிருப்பது கண்டு இன்புறத் தக்கது.

இருவேரி-வெட்டிவேர் (12, 16) வெங்கார் நாற்றம்-முதல் மழையால் மண்ணிற்றோன்றும் ஆவியின் மணம் (20, 10) வேசனை நாற்றம்-சூரியனுடைய வெம்மையால் குளம் முதலியவற்றின் நீரினின் றெழும் நாற்றம் (20, 13) என்பன முதலாக உரையின் விளக்கமாக அறிய வேண்டுவனவும் பலவுள

இவருரையால் இவர், இசை நூலும் சோதிட நூலும் வல்லுநரென்பது தெற்றெனப் புலனும்.

இங்ஙனம் பல்லாற்றானுஞ் சிறந்த வுரைவரைந்த இவரை,

"சிற்றறி வினர்க்குந் தெற்றெனத் தோன்ற
மதியின் றகைப்பு விதியுளி யகற்றி
எல்லையில் சிறப்பிற் றொல்லோர் பாடிய
அணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளைச்
சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டினன்"

எனப் பெரியார் பாராட்டியது மிகப் பொருத்தமே.

## ஒழிபு

இத்தலைப்பின்கீழ் மேற் சொல்லாத சிலவற்றைக் கூறுவேன்.

கட்குடி, நீராட்டு, புலவி இம் மூன்றுனும் கண் சிவக்குமென்பது,

> " கள்ளே புனலே புலவியிம் மூன்றினு
> மொள்ளொளி சேய்தா வொளிகிளருண்
> கட்கெண்டை" (16.39-40)

என்னும் பகுதியாற் புலனும்.

ஒரு பரத்தையியல்பு, காமத்தைப் பொய்யொடுங் கூட்டி விற்பாள்; பெண்மையது பொதுமையால் ஒருவராற் பேணப்படாதாள்; ஐம்புலத்தையும் நுகரும் காமுகர்களாகிய பன்றிகள் நுகரும் தொட்டியாவாள்; பலர்க்கும் இன்பளித்தலில் துறைபோலப் பொதுவாயுள்ளாள் என அழகுறக் கூறப்பட்டுள்ளது.

பரத்தை மாட்டுச் சென்று வந்த தலைவன்பால் மனைவி நடக்குமாற்றை, "பரத்தைபாற் செல்வானைச் செல்லாமற் காத்தலும், சென்றான் என்று நீக்கி ஒழுகலும் மனையாளாற் கூடுமோ? கூடா; தகவுடை மங்கையர், தம்மைக் கணவர் இகழினும் தாம் அவரை ஏத்துவார். பரத்தைபாற் சென்று வந்த கணவரைக் கூடேமென்று இருத்தல் மங்கையர்க்கு முடிவு போவதன்று; சினவாதே; காமம் தக்கவிடத்தில் நிற்குமோ?" என்று கூறிய பகுதி சிறந்த அறிவுரையாக விளங்குகின்றது.

" ஆமா மதுவொக்கும் " (6.71)

என்பதைப் படிக்கும்போது, உலக வழக்கில் ஆமா என வழங்கப்படுவது ஆம் ஆம் என்பதன் திரிபே என்பதும்,

"கட்டிய கயிலணி காழ்" (12.18)

என்பதற் கெழுதப்பட்ட 'கட்டிய கொக்குவாய் அழகு செய்த வடங்கள்' என்னும் உரையைப் படிக்கும்போது, உலக வழக்கில் கொக்கி என வழங்கப் படுவது கொக்குவாய் என்பதன் திரிபே என்பதும் நினைவிற்கு வருகின்றன. கொக்கின்வாய் போலுதலாற் கொக்குவாய் எனப்பட்டதுபோலும்.

"தளிரறிந் தாய்தா மிவை"

'நீ அறிந்திலை இத்தளிர்கள் அத்தன்மையவல்ல என்னுங் குறிப்பிற்று' (6,62)

"அரியளோ வாவ தறிந்திலேன்"

'அறிந்திலேன் என்பது குறிப்பு மொழி' (8,60)

"ஒருவர்க்கும் பொய்யாநின் வாயில்சூழ்
வெளவல்"

'ஒருவர்க்கும் பொய்யா நின் என்றது குறிப்பு மொழி.' (8,84)

என்னும் பகுதிகள் இன்பளிக்கின்றன.

"வந்திக்கவாரென" (20.70)

என்புழி வார் என்பதற்கு வா என்பது பொருளாம். வார் என்பது வா என்பதன் விகாரமாயினும் வாரார் என்பதுபோல வருமன்றி வார் என நிற்றல் அருமையே. ஈண்டு "வாரடா வுனக்கு" என்னும் பாரத அடி நினைக்கத்தக்கதாம்.

"மையாடலாடன் மழபுலவர்" (11.88)

என்பதனால் இளமைந்தர் மையோலை பிடித்துப் படிக்கும் வழக்கம் முற்காலத்துண்மை புலனாம். மையோலை—கரி பூசப்பெற்ற வோலை.

"ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்க" (11.76-78)

என்பதனால் திருவாதிரை நாளில் அதன் தெய்வமாகிய சிவபெருமானுக்குத் திருவிழாச் செய்யும் வழக்கம் முற்காலத்தும் உண்மை புலனாம்.

## முடிவுரை

இத்துணையும் கூறியவற்றாற் பரிபாடலின் சிறப்பியல்பும், செவ்வேள், திருமால், பலதேவன் இவர்கள் பெருமையும், திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலைமலை, வையை, கூடல் இவற்றின் மேம்பாடும், களவொழுக்கம் தமிழுக்கே உரியதென்பதும், உவமை முதலிய அணிகள் அமைந்திருக்குமாறும், பரிமேலழகர் உரை நுட்பமும், பிறவும் புலனாம்.

இதன்கட் குறைகாணிற் பொறுத்தருளுமாறு அறிஞர்களை வேண்டி விரிவஞ்சி இவ்வளவில் நிறுத்துகின்றேன்.

## ௯. குறுந்தொகை—மருதம் *

**அன்பார்ந்த பெரியோர்களே!**

நந் தமிழ்த் தாயின் அணியாக விளங்குந் தொகை நூல்களுள் ஒன்றாயதும், "நல்ல குறுந்தொகை" யென்று பாராட்டப்பெறுவது மாகிய குறுந்தொகையில் மருதத் திணையைப்பற்றிக் கூறத் தொடங்குகின்றேன்.

மருதம் என்பது, மருதமரம் அந்நிலத்திற் சிறந்திருத்தல்பற்றி வந்த பெயரென்பாரும், அதனை மறுத்து ஊடியுங் கூடியும் போக நுகர்தல்பற்றி வந்த பெயரென்பாரும் என இருதிறத்தாராசிரியர். இனி, மருதம் என்பதற்கு வயல் என்ற பொருள் பிங்கலத்திற் காணப்படுதலின், அதுபற்றி வந்த பெயரெனக் கூறின் அஃதும் ஆராய்தற்குரியதேயாம். வயல்பற்றி வந்த பெயரெனின், முதற்பொருள்பற்றி வந்த பெயரெனவும், மருதமர முடைமை பற்றி வந்த பெயரெனிற், கருப்பொருள்பற்றி வந்த பெயரெனவும், ஊடியுங் கூடியும் போக நுகர்தல்பற்றி வந்த பெயரெனின், உரிப்பொருள்பற்றி வந்த பெயரெனவுங் கொள்ளத் தகும்.

வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலம் எனப்படும். இந்நிலத்திற்குப் பெரும்பொழுது ஆறும் உரியன. விடியல் என்னுஞ் சிறுபொழுது ஒன்றே உரியது என்பாரும், வைகறை விடியல் என்னுஞ்

---

* 1940 நவம்பர் 30-ஆம் நாளிற், சென்னையிற் கூடிய, குறுந்தொகை மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு.

சிறுபொழுது இரண்டும் உரியன என்பாரும் என இருதிறத்தாராசிரியர். இந் நிலத்திற்குத் தெய்வம் இந்திரனாவான். இதனை, "ஊடலுங் கூடலுமாகிய காமச் சிறப்பு நிகழ்தற்கு மருத நிலத்திற்குத் தெய்வமாக 'ஆடலும் பாடலும் ஊடலும் உணர்தலும்' உள்ளிட்ட இன்ப விளையாட்டு இனிது நுகரும் இமையோர்க்கும் இன்குர லெழிலிக்கும் இறைவனாகிய இந்திரனை ஆண்டையோர் விழவு செய்து அழைத்தலின் அவன் வெளிப்படுமென்றார்" (தொல். பொரு. சூ. 5 நச்) என்பதனால் நன்கறியலாம். இந் நிலமக்கள் உழவராவர். பிற கருப் பொருள்களைக் களவியலுரை, தொல்காப்பிய உரை, அகப்பொருள் விளக்கம் முதலியவற்றிற் காணலாம். இந்நிலத்து உரிப்பொருள், ஊடலும் ஊடல் நிமித்தமுமாம். "பரத்தைவாயி னால்வர்க்கு முரித்தே, நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்" (தொல். பொரு. சூ. 224 நச்.) என்னுஞ் சூத்திரவுரையும், "மருதஞ் சான்ற மருதம்" என்ற சிறுபாணாற்றுப்படையடிக்கு (186) எழுதப்பட்ட 'ஊடியுங் கூடியும் போகநுகருந் தன்மையமைந்த மருத நிலம்' என்னும் உரையும் ஈண்டு நோக்கற்பாலன.

ஊடல் என்பது, தலைவனுந் தலைவியும், வரைவு நிகழ்ந்த பின்றை இல்லற நடாத்தும் கற்புக் காலத்தே, தலைவன் பரத்தையிற்பிரிதல் காரணமாகவும், தலைவன்பால் நிகழாத தவற்றை நிகழ்ந்ததாகக் கற்பித்துக் கூறுதல் காரணமாகவும் தலைவிக்கு நிகழும் சிறுகாலமாகும். தலைவன், இவ்வூடலைப் பாணன் முதலிய வாயில்களானுந், தன் கூற்றானுந் தீர்த்துத் தலைவி

யைக் கூடுவான். அவ்வமயம் உண்டாகும் இன்பம் மிகச் சிறந்ததாகும். இதனை "ஊடலிற் றோற்றவர் வென்ற ரதுமன் னுங், கூடலிற் காணப் படும்" (குறள். 1327.) என் னுந் தலைவன் கூற்றாலறியலாம். இங்ஙனம் இன்பஞ் சிறத்தல்பற்றி, இவ் வூடலை, ஊடல் நீங்கக் கூடிய தலைவனுந் தலைவியும் மீண்டும் விரும்புவர். இதனைத் "தலைவி இன் னும் ஊடுவாளாக, யான் அவள்பால் ஊடனீங்கவேண்டுவேனாக, இதற்கேற்ப இராக்காலம் நீட்டிப்பதாக." (ஊடுக மன்னோ வொளி யிழை யாமிரப்ப, நீடுக மன்னோ விரா. 1329) என்று தலைவன் கூறுவதாகவும், "ஊடல் போல இன்பந் தருவதொரு தேவருலகமுண்டோ" ("புலத்தலிற் புத்தேணாடுண்டோ" 1323) என்று தலைவி ஊடலைப் பாராட்டிக் கூறுவதாகவும் வரும் திருக்குறட் பகுதி களா லுணரலாம். இவ் வூடல் காமத்திற் கின்றி யமையாததொன்றென்பதும், இஃதின்றேற் காமஞ் சிறவாதென்பதும் "உப்பமைந் தற்றாற் புலவி" (குறள், 1302) "ஊடி யுயங்காக்கா லுப்பின்றாங் காமம்" (நாலடி. 391) என் னும் ஆன்றோர் வாக்குக் களான் நன்கு புலனாம். குறுந்தொகையில் வரும் "புலவியஃ தெவனோ வன்பிலங் கடையே" (93) என்ப தனாலும் அன்புள்ள வழிப், புலத்தல் பயன்படுமென் பது பெறப்படுதல் காண்க. இஃதிங்ஙனஞ் சிறத்தல் பற்றியே,

**"போக்கெல்லாம் பாலை புணர்த னறுங்குறிஞ்சி**
**ஆக்கஞ்சே ரூட லணிமருதம்—நோக்குங்கால்**
**இல்லிருத்தன் முல்லை இரங்க னறுநெய்தல்**
**சொல்விரிந்த நூலின் றொகை"**

என்னும் பாடலுள் "ஆக்கஞ்சே ரூடல்" என்று பாராட்டப் பட்டது.

இனிப், பல்லாற்ருன் வேண்டித் தெளிவித்த வழியும் தலைவியின் ஊடல் நீங்காவிடினும், களவின்கண் அல்லகுறிப்பட்ட வழியும் தலைவனும் ஊடுதலுண்டு. இதனை,

"உணர்ப்புவரை யிறப்பினுஞ் செயற்குறி பிழைப்பினும்
புலத்தலு மூடலுங் கிழவோற் குரிய" (156)

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானறிக. எனவே ஊடல் பெரும்பான்மை கற்பிற்குஞ் சிறுபான்மை களவிற்கும் உரித்தென்பது தெளிவாம்.

இத்தகைய மருதத்தைப் பற்றிய பாடல்கள் குறுந்தொகையில் நாற்பதுக் குட்பட்டவையே காணப்படுகின்றன. இவற்றைப் பாடிய புலவரும் இருபத்தைவருக்குட்பட்டவரேயாவர். இவர்களுட் பெண்பாற் புலவர், ஔவையாரும், அள்ளூர் நன் முல்லையாரும், ஒக்கூர் மாசாத்தியாரும் என மூவர் ஆவர். இவருள் ஔவையார், புறத்திற் பாடுதலன்றி, அகத்தைப் பற்றிய இந்நூற்கண்ணும் அன்பு கெழுமிய அஞ்சியின் கொடையையும், வீரத்தையும் மறந்தாரில்லை. மருதம் பாடிய புலவர்களுள் ஒருவர், கழியிலுள்ள நெய்தற்பூ, வெள்ளம் கழிக்கு வருங்கால் மூழ்குந் தோற்றம், குளத்தின்கண் மூழ்கும் மகளிர் கண் போன்றுளது என்று கூறினமையால் **கயமனுர்** எனவும், (9) மற்றொருவர், பரத்தையுந் தலைவனுங் கூடியதற்கு வில்லைப்பற்றிய விரல்களை உவமித்தமையால் **வில்லக விரலினுர்** எனவும், (370)

வேறொருவர், கள்ளுண்ணும் விருப்பமைந்த சிலரு டைய செலவைக் கள்ளிற்கேளிராத்திரை என்றமை யாற் கள்ளிலாத்திரையனர் (293) எனவும் சிறப்புப் பெயர் பெற்றனர் எனக் கருதப்படுகின்றனர்.

குறுந்தொகையிற் காணப்படும் மருதநிலம், கம்ழ்பூ மென்சினைக்காஞ்சி, செவ்வீமருது, தேமா, நாறுவெண்பூக் கரும்பு, வரிப்புற விளைகனிப் பிரம்பு, தாமரை, ஆம்பல், நெல், பொய்கை, யாறு, வயல், கெண்டை, அயிரை, கணைக்கோட்டுவாளை, நீர்நாய், குருவி, குருகு, வெருகு, மனைக்கோழி முதலியவற் றாற் கவினுற்று விளங்குகின்றது.

"காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி" (45)
"கொண்டனை சென்மோ மகிழ்நநின் சூளே" (238)
"பழன வாளை கதூஉ மூரன்" (8)

முதலிய பகுதிகள் மருதத்திற்குச் சிறுபொழுது காலை யென்பதற்கும், மருதநிலத் தலைவனுக்கு மகிழ்நன், ஊரன் என்னும் பெயர்களுண்மைக்குஞ் சான்றா கின்றன.

மருதத்திலுள்ள மகளிர் இயல்புகளாக, ஆம்ப லின் முழுப்பூவைக் கூந்தலிற் சூடுதல், மனைப்படப் பையிலுள்ள மரத்தில் முல்லைக்கொடியைப் படரச் செய்து போற்றி அதன் நறுமலர்களைத் தங் கூந்தலிற் புனைதல், தோளிற் கரும்பெழுதுதல், பாசவலிடித்த உலக்கையை நெற்கதிர் பொற்புறுங் கழனி வரம்பிற் படுக்கவைத்து வண்டலயர்தல் முதலியனவும், அஃ றிணைப் பொருள்களின் இயல்புகளாகப், பிரம்புக் கனியைக் குளத்திலுள்ள கெண்டைமீன் கவ்வுதல்,

கெண்டைமீனைக் குருகு உண்ணுதல், வாளைமீன் தேமாங்கனியைக் கவ்வுதல், வாளைமீனை நீர்நாய் உண்ணுதல், குருவிச் சேவல் தன்பெடை பொறையுயிர்க்கும் இடமமைத்தற் பொருட்டுக் கரும்பின் பூவைக் கோதியெடுத்தல், குருகின் வாயினின்றுந் தப்பிய கெண்டை, அயலிலுள்ள வெண்டாமரை முகையை அக் குருகெனக் கருதி அஞ்சுதல், மனையிலுறைகின்ற கோழிப்பெடை மாலையில் வெருகினத்தைக்கண்டு அஞ்சித் தன் பிள்ளைகளை யழைத்தல் முதலியனவுங் கூறப்பட்டுள்ளன.

பொறையன், எவ்வி, அஞ்சி, பாரி, சேந்தன் தந்தை அழிசி, அருமன் என்னுந் தலைவர் பெயர்களும், மேலைக் கடற்கரைத் தொண்டி, ஆர்க்காடு, குன்றூர் என்னும் ஊர்ப் பெயர்களும், இவ்வூர்கள் முறையே பொறையன், அழிசி, வேளிர் என்னுந் தலைவர்கட்குரியன வென்பதும் புலனாகின்றன. இவற்றுள் தொண்டியும், ஆர்க்காடும் மகளிர் நலத்திற்கு உவமையாகக் கூறப்படுகின்றன. *

இனி, மருதத்திணையில் வரும் தலைவி கூற்று, தோழி கூற்று, பரத்தை கூற்று, தலைவன் கூற்றுக்களையும், பழமொழிகளையும், உவமைகளையும் நோக்குவாம். கூற்றுக்களின் வாயிலாகப், புலவர் பெருமக்கள் காட்டிய, மக்களின் பல்வகை மனநிலை புலனும். குறுந்தொகைச் செய்யுட்களைத் தம் உரைக்கண்

* ஆதியருமன் மூதூர் (293) எனச் சிறப்பிக்கப்பட்டிருக்கும் ஊர், சிறுகுடி என்பது "மூதி லருமன் பேரிசைச் சிறுகுடி" (367) என்னும் நற்றிணைப் பகுதியாற் புலனும்.

மேற்கோள் காட்டிய உரையாசிரியர்கள், பலவாறு துறை கூறினும், யான் குறுந்தொகையிற் காணப் படுவனவற்றைப் பின்பற்றியே ஈண்டுக் கூறப்புகு கின்றேன்.

## தலைவி கூற்று

இது, தலைவன், தன் கூற்றாகவும், பாணன் தோழி முதலியோர் வாயிலாகவும் தலைவியை ஊடல் தீர வேண்டுங்கால் தலைவி, அவன் அன்பின்மை கூறி மறுப்பதாகவும், குற்றத்தை மறந்து அறங்கருதி உடன்படுவதாகவும் பாடப்படும். தலைவி, தன்னெஞ்சையும், தோழியையும், தலைவனையும் முன்னிலையாக்கிக் கூறுவாள்.

பரத்தையிற் பிரிந்த தலைவன் தலைவிபாற் புக்குத் தன் கூட்டத்திற்கு அவள் உடன்பாட்டை வேண்டினன்; அப்பொழுது தலைவி, அவன்பாற் செல்லுந் தன்னெஞ்சை நோக்கி, 'நீ இப்பொழுது அவன்பாலிரங்கி உடன்பட்டால் அவன் பின்னும் பரத்தைமையுடையனவா னதலால் துயிலுநாள் சிலவாய்ப் பெருந் துயருழப்பாய்' என்று கூறி மறுத்தாள். (91)

தலைவனுக்கு வாயிலாகப் புக்க தோழியிடந் தலைவி, 'பரத்தை தலைவனைத் தேடிவந்து அழைத்துச் சென்று விடுவாள்; யான் அளியேன்' என்று கூறி மறுத்தாள். (293)

தலைவனுக்கு வாயிலாக வந்த தோழியை நோக்கித் தலைவி, தான் அவனுக்கு உரியளானமையின் அவனை ஏற்றுக் கோடல் அறமாம் என்னுங் குறிப்புத்

தோன்றத், 'தலைவனைத் தெளிந்து மணந்த காலம் ஒரு நாளே; அது பலநாள் நலம் வெளவும் நோயாகின்றது' என்றாள். ஈண்டுத் தலைவன் "அருவி யன்ன பருவுறை சிதறி, யாறுநிறை பகரும் நாடன்" என்று சிறப்பிக்கப்பட்டுள்ளான். இதன்கண், 'யாறு அருவிபோன்ற பெருந் துளிகளைச் சிதறிப் புறத்தே யுள்ள பொருள்களுக்குப் பயன்பட்டாற் போலத் தலைவன் புறத்தேயுள்ள பரத்தையர்க்குப் பயன்படுவான்' என்னுங் குறிப்புத் தோன்றுகின்றது. (271)

தலைவன் பரத்தை மாட்டுப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள், அவன் வரக்கண்டு ஆற்றாமை நீங்கிப், பள்ளியிடத்தே அவனை நோக்கி, 'இம்மை மாறி மறுமை யாயினும் என் கணவன் நீயே யாகுக, யானே நின் நெஞ்சுகலந் தொழுகுபவள் ஆகுக' என்று கூறினாள். ஈண்டு மனைவி துணைவி முதலிய சொற்களாற் கூறாது 'நெஞ்சு நேர்பவள்' எனக் கூறியது நயமுடைத்து. (49)

தலைவன் வரவு நீட்டிப்பத் தோழி, தலைவன் நம் பால் அன்பிலன் எனப் பழித்தாள்; அப்பொழுது தலைவன் வந்தனன்; அவன் வரவை யுணர்ந்த தலைவி, "நாடன், இனியனுகலி னினத்தி னியன்ற, இன்னுமையினு மினிதோ, இனிதெனப் படூஉம் புத்தேளுடே" என்றாள். தலைவன் பரத்தையிற் பிரிந்தானாயினும் நம்மாட்டு இனிமையை உடையனாதலின், உறவுடையாராற் செய்யப்படும் இன்னாமையைக் காட்டிலும் இனியதென்று சிறப்பிக்கப்படும் தேவருலகம் இனிமையையுடையதோ? என்பதாம். தலைவன் செய்த இன்னாமை, இன்பம் மிகுதற்குக் காரண

மாதலின், எஞ்ஞான்றும் ஒரு படித்தாய இன்பமுடைய புத்தேணாட்டினுஞ் சிறந்ததாகக் கூறினாள். (288)

## தோழி கூற்று

இது, தலைவன் மாட்டும், வாயிலாக வந்த பாணன் முதலியோரிடத்தும் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் நிகழும்.

தலைவனால் வாயிலாக விடுக்கப்பட்ட பாணன், தலைவன் மிக்க அன்புடையன் என்று பாராட்டிய பொழுது தோழி, 'யாரினு மினியன் பேரன்பினனே......யாணரூரன் பாணன் வாயே" என்று கூறி மறுத்தாள். இதனால், பாணன் சொல்லளவிற்றலைவன் அன்பினனே யன்றி, உண்மையில் அன்பினனல்லன் என்பதும், முன்னிற்கும் பாணனைப் படர்க்கையான்போலக் கூறினமையால் அவள் சின மிகுதியும் புலனும். இக்காலத்துஞ் சொல்லிய வண்ணஞ் செய்யாது சொல்லளவில் ஒழிபவனை 'வாயாற் செய்பவன்" என்று கூறுதலை நாம் காணலாம். (85)

தலைவன் தலைவியின் ஊடல் தீர்த்து உதவி புரிய வேண்டுமென்று தோழியை வேண்டினன்; அப்பொழுது அவள், 'முன்னர் என் தோழி கைக்குமியல்புடைய வேப்பங்காய் தரினும் வெல்லக் கட்டியெனக் கொண்டீர்; இப்பொழுது பாரி வள்ளலின் பறம்புமலைச் சுனையிலுள்ள, தைத்திங்களில் மிகக் குளிர்ந்து தெளிந்த இன்னீரைத் தரினும் சுடுவதாய் உவர்ப்புச் சுவையைத் தருமென்று வெறுத்தீர்; நுமது அன்பு அத்தன்மையது.' என முன் அன்புண்

மையும், இப்பொழுது அன்பின்மையுங் காட்டி மறுக்குந் திறன் நம்மை இன்புறுத்துவதாகும். (196) இங்கே "வேம்பின் பைங்காயென் றோழி தரினே, தேம்பூங் கட்டி யென்றனிர்" என்றது,

"ஏனது சுவைப்பினு நீகை தொட்டது
வானோ ரமிழ்தம் புரையுமா லெமக்கென
அடிசிலும் பூவுந் தொடுதற் கண்ணும்"

(146)

என்னுந் தொல்காப்பியச் சூத்திரப் பகுதிக்கு மேற் கோளாதல் காண்க.

தலைவன் தோழி வாயிலாகத் தலைவியின் ஊடல் தீர்க்கக் கருதி, 'அவளிடம் நான் பரத்தைமை யுடையேனல்லேன்' என்று சூளுற, அதனை மறுக்குந் தோழி, 'உன்சூளினியல்பை நன்கறிவேம்; எம்பாற் சூளுற வேண்டா, நீ நுகர்ந்த எம் நலத்தைத் தந்து, நின் சூளை நீயே கொண்டு செல்க' என்றாள். (238) பரத்தையிற் பிரிந்த தலைவன் வந்த போழ்து, நம் நலந் தாவெனக் கேட்போம் எனத் தோழி தலைவியிடம் கூற, அதனைத் தலைவி மறுத்துக், கொடுத்ததைத் தாவென மீட்டுங் கேட்டலைக் காட்டிலும் இறத்தல் நன்று, என்று கூறுவதாகவும் ஒரு செய்யுள் காணப் படுகின்றது. (349) இங்ஙனமே உண்ட நலத்தைத் தாவெனத் தலைவனைக் கேட்பதாகப் பல பாடல்கள் சங்க நூல்களிற் காணப்படுகின்றன.

தலைவன் சூளுற, இவ்வாறே பரத்தையர்மாட்டுஞ் சூளுற்றிருப்பான் எனக் கருதிய தோழி, அவனை நோக்கி, 'நீ இவ்வாறே பரத்தையரிடமுஞ் சூளுற்று

அவர் நலம் நுகர்ந்து சூள் பிழைத்து, இங்கு வந்துஞ் சூளுறுகின்றாய்; இச் சூளும் அவர்பால் நிகழ்த்தியது போன்ற பொய்ச் சூளே யாகு மாதலால் ஏற்கத் தகுவதன்று' என நகையாடிக் கூறிய பாடல் சுவை தருகின்றது. (384)

"வாரலெஞ் சேரி தாரனின் றாரே, அலரா கின்றால்" (258) எனக் கூறித் தோழி மறுத்தலும் உண்டு.

தலைவி கற்புக் கடம் பூண்டா ளாதலாலும், உயர் குடிப் பிறந்தா ளாதலாலும் தலைவன் கொடுமையை மறைத்து அவனை ஏற்றுக்கோடலும் உண்டு. அதனை யறிந்த தோழி, "யாயா கியளே......தண்ணந் துறை வன் கொடுமை, நம்மு ணுணிக் கரப்பா டும்மே" (9) எனவும், "காஞ்சி யூரன் கொடுமை, கரந்தன ளாகலி னுணிய வருமே" (10) எனவும், "தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே" (45) எனவும் தலைவன் கொடு மையும், தலைவியின் துன்பமும் பெருந்தன்மையும் புலப்படக் கூறும் அழகு நோக்கத்தக்கது.

## பரத்தை கூற்று

பரத்தையர், தலைவிக்கு ஊட லுண்டாதற்கு நிமித்தமாவராதலால் அவர் கூற்று மருதத் திணையாகக் கொள்ளப்படும். பரத்தை கூற்று, தலைவியேனும் மற்றொரு பரத்தையேனும் தன்னை இகழ்ந்து கூறிய தாகக் கேள்வியுற்ற போழ்து நிகழ்கின்றது. பரத் தையிற் பிரிவு ஒப்புயர்வற்ற குண நலங்களாற் சிறந்த தலைவன் பெருமைக்கு இழுக்காகவே

தோன்றுகின்றது; இதனைத், தலைவியின் ஒழுக்கந் தவருத கற்புத்திறனைப் புலப்படுத்தல் கருதியும், அவள் ஊடற்குக் காரணமாய் இன்ப மிகுத்தல் கருதியும் நாடக வழக்குப் பற்றிப் புலவர்கள் கட்டிய வழக்கென்னலாம். தலைவனுக்கு இழுக்கைத் தருதல் கருதியே அகப்பொருணூ லுரையாசிரியர்கள் இதனை யமைத்தற்குப் பலவாறு காரணங் கூறுவாராயினர்.

தலைவி தன்னை இகழ்ந்து கூறியதாகக் கேட்ட ஒரு காதற் பரத்தை, தலைவிக்குப் பாங்காயினேர் கேட்பத் 'தலைவி செருக்குற்று என்னை இகழ்ந்ததற்குக் காரணம் தலைவன் அவள் வயப்பட்டமையே' யென்கின்ருள். (8) அங்ஙனம் கூறியதாகக் கேட்ட மற்ருெரு பரத்தை, 'நானுந் தலைவனும் புதுப் புனலாடப் புகுகின்றேம்; அவள் வல்லளாயின் தலைவனை என்னிடமிருந்து மீட்டுக் கொள்வாளாக' என்கின்ருள். (80)

'என் கணவனை வலிதின் நயப்பித்துக்கொண்டு புறம் போகாவாறு செய்தாள்' என்று தலைவி பழி கூறியதாக அறிந்த காதற்பரத்தை, தலைவிக்குப் பாங்காயினேர் கேட்பத், தன் தோழியை நோக்கி, 'அவன் என்பால் வலிய வந்தானே யன்றி யான் நயப்பிக்க வந்தானல்லன்; அவ்வாறு யான் செய்திருப்பிற் கடல் என்னை வருத்துவதாக' என்கின்ருள். இப்பாடலிற் "கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூன் மடநாகு, துணர்த்தேக் கொக்கின் தீம்பழங் கதூஉம்" செய்தி கூறப்பட்டுள்ளது; இதனல் வாளைமீன் தானிருந்த விடத்திலிருந்தே முயற்சியின்றித் தேமாங்

கனியைப் பெற்றதுபோல யான் முயலாமலே தலைவனைப் பெற்றேன் என்னுங் குறிப்புப் புலனாகின்றது. (164) மற்றொரு பரத்தை தலைவிக்குப் பாங்காயினார் கேட்பத், 'தலைவன் ஈண்டு எம்மொடு கூடாது வாளாவிருப்பின் இரண்டுடலை யுடையேமாயும், கூடின் ஒருடலையுடையேமாயும் உள்ளேம்; ஆதலின் அவன் கருத்திற் கேற்ப வொழுகுதலன்றி யாம் வலிந்து அவனைக் கொண்டிலம்' என்று கூறினள். இங்கே "பொய்கை யாம்ப லணிநிறக் கொழுமுகை, வண்டுவாய் திறக்குஞ்" செய்தி கூறப்பட்டுள்ளது; இதனால் ஆம்பல் முகை வண்டு திறக்குங்கால் மலர்ந்து அதற்குத் தேனளித்து மகிழ்விப்பதுபோலத் தலைவன் கூடுங்காற் கூடி அவனுக்கு இன்பளிப்பேம்' என்பது புலனாகின்றது. (370)

மற்றொரு பரத்தை தன்னைப் புறங் கூறினாள் எனக் கேட்ட இற் பரத்தை, அப் பரத்தைக்குப் பாங்காயினார் கேட்ப, 'மகளிர் துணங்கைக் கூத்தும், மள்ளர் சேரிப் போரும் நிகழும் விழாக் காலமும் வந்தது; வீரர் தம் அன்புடை மகளிரொடு ஒன்றுபட்டு விளையாடும் அக் காலத்தில் தலைவன் என்பால் அன்புடையனாதலை யாவரும் தெளிவாக அறிவர்' எனத், தான் வலிந்து அவனைப் பற்றாமையைப் புலப்படுத்தினாள். (364)

### தலைவன் கூற்று

இஃது, உணர்ப்புவயின் வாரா ஊடற் கண்ணும், அல்ல குறிப்பட்டு மீளும்போதும் நிகழும்.

தலைவன் தெளியச் செய்யவுந் தெளியாத ஊடல், உணர்ப்புவயின் வாரா ஊடல் எனப்படும்.

இரவிலே தலைவனுந் தலைவியுங் கூடுதற்கு ஓரிடந் தலைவியானுதல், தோழியானுதல் குறிக்கப்படும்; அவ்விடத்திற்குத் தலைவன் வந்து ஆண்டுள்ள பறவைகளை யெழுப்புதல் முதலிய குறிகளால் தன் வரவை அறிவிப்பான்; அதனை அறிந்த தோழி தலைவியை யழைத்து வந்து ஆண்டு நிறுத்துவள்; இவ்வாறு இரவுக்குறி நிகழுங்கால் ஒருநாள் தலைவன் வருதற்கு முன்னரே பிற காரணங்களாற் பறவை யெழுதல் முதலியன நிகழ்ந்தன; அவற்றைத் தலைவன் செய்தனவாகக் கருதித் தோழியுந் தலைவியுங் குறியிடத்துப் போந்து தலைவனைக் காணுமல் மீண்டனர்; பின்னர்த் தலைவன் வந்து அக் குறிகளை நிகழ்த்த முன்னர்ப் பிழைத்தமையால் அவர்கள் வாரா தொழிந்தனர்; தலைவனும் வருந்தி மீண்டனன். அப்பொழுது தலைவன் தன்னெஞ்சை நோக்கிக் கூறுங் கூற்றே அல்லகுறிப்பட்டு மீளும்போது கூறுங் கூற்று எனப்படும். இவற்றிற் குதாரணமாகப் பரணர், கபிலர் பாடல்கள் காணப்படுகின்றன.

தலைவன் தன்பால் தவறின்மை கூறித் தெளிவிக்கவும் தலைவி ஊடல் நீங்காளாகத், தன்னெஞ்சை நோக்கித், 'தலைவி நமக்கு அயலாள்போலக் காணப்படுகின்முள்; ஆதலால் நீ இனி எவ்வி யென்னும் வள்ளலை யிழந்த யாழ்ப்பாணர் தலை பொற்பூவின்றிப் பொலிவழிந் திருத்தல் போலப் பொலிவழிந்து வருந்துக' என்று கூறுகின்முன். (19)

“ குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
யயிரை யாரிரைக் கணவந் தாங்குச்
சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே ” (128)

என்னும் பாடல், தலைவன் தன் உள்ளத்தை நோக்கி, உணர்ப்புவயின் வாரா ஊடற்கட் கூறியதாகவும், அல்ல குறிப்புட்டு மீளும்போது கூறியதாகவுந் துறை வகுத்தாராற் கொள்ளப் பெற்றுளது.

உணர்ப்புவயின் வாரா ஊடற்கட் கூறியதாகக் கொள்ளுங்கால், ‘ கிழக்குக் கடற்கண் ணுள்ளதாகிய முதுமையாற் சிறையிழந்த நாரை, சேரனது மேற்குத் திசையிலமைந்த தொண்டிப் பட்டினத்தின் கடற்றுறையி லுள்ள அயிரை மீனாகிய பெறுதற்கரிய உணவை முன்னுண்ட பழக்கத்தாற் பெறுதற்குத் தலையை மேலே தூக்கினாலும், அயிரை சேய்மைக்கணிருத்தலாலும், தான் பறந்து சென்று பெறுதற்குக் கருவியான சிறையை யிழந்தமையாலும் அது பெறுதற்கரிதாயவாறு போல, நீ தலைவியை முன்னுகர்ந்த பழக்கத்தாற் பெறவிரும்பினும், அவள் நெஞ்சாற் சேயளா யிருத்தலாலும், ஊடல் தீர்க்கும் வலி உனக்கு இன்மையாலும் பெறற்கரியளாவாள் ’ என்பதாம். அயிரை சேய்மைக்கணிருத்தல் போலத் தலைவி நெஞ்சாற் சேயளாயினள் எனவும், நாரை பறந்து சென்று பெறுதற்கேற்ற சிறையிழந்தது போல, உள்ளம் ஊடல் தீர்க்கும் வலியிழந்த தெனவுங் கொள்க.

அல்லகுறிப்பட்டு மீளுந் தலைவன் கூற்றாகக் கொள்ளுங்கால், 'நாரை சேய்மைக்கணுள்ள பெறு தற் கரிய அயிரையைப் பெறத் தலையெடுத்தாற் போல, நீ, சேயளாய்ப் பெறுதற் கரியளான தலைவி யைப் பெற நினைத்தாய்' எனக் கொள்ள வேண்டும். ஈண்டுச் சேய்மை-இடத்தாற் சேய்மை. அருமை-காவலுண்மையாற் பெறுதற் கருமை. இரவுக்குறி இல்வரையிகவாதே நிகழுமாயினும், தன்னுலடைதல் இயலாமையால் தலைவனுக்குத் தலைவி யிருக்குமிடம் சேய்மையது போலத் தோன்றுதலாற் சேயள் என்ருன். நாரை பறந்து சென்றடைதற்குக் கருவியான சிறையை யிழந்தது போலத், தலைவன் இருண்மிகுதி யாலும் முன் சென்ற பழக்க மின்மையாலும் தலைவி யிருக்கும் இடத்திற்குச் செல்லும் வலியிலனயினன் என்க. அயிரை தெய்வத்தாற் காக்கப் படுதலாற் பெறுதற் கரிதாயவாறு போலத், தலைவி, செவிலி முதலியோராற் காக்கப்படுதலாற் பெறுதற்கரிய ளாயினள் என்க. 'திண்டேர்ப் பொறையன் றெண்டி முன்றுறை, யயிரை' என்றதனல், தலைவி யுடைய தந்தையின் உயர்வும் புலனும்.

தொல்காப்பியத்து "உணர்ப்புவரை யிறப் பினும்" (156) என்னுஞ் சூத்திர வுரையில், ஆசிரி யர் நச்சினர்க்கினியர், அல்லகுறிப்பட்ட தலைவன் ஊடற்கு மேற்கோளாக இப்பாடலைக் காட்டி "நாரை தெய்வங் காக்கும் அயிரை இரையை வேட் டாற் போல் நமக்கு அரியளாயினளை நீ வேட்டா யென்பதனற் குறி பிழைத்துழி ஊடினமை கூறிற்று' என எழுதி யிருத்தலாலும், இறையனரகப்பொரு

ளுரையாசிரியரும், அகப்பொருள்விளக்க முடை யாரும் இப் பாடலையே இத்துறைக்கு மேற்கோளாகக் காட்டியிருத்தலாலும் அம் மூவருக்கும் இப் பாடல் அல்லகுறிப்பட்டு மீளுந் தலைவன் கூற்றென்பதே கருத்தாதல் புலனும். அவர்கள் இப்பாடலிற் சேயள் என்பதற்கு நெஞ்சாற் சேயள் என்னும் பொருள், இடத்தாற் சேயள் என்பது போல எளிதிற் போதராமையும், பிற இயைபுகளும் நோக்கி அவ்வாறு கொண்டனர் போலும். அவர்களுள் நச்சினார்க்கினியரும், அகப்பொருள் விளக்க முடையாரும் உணர்ப்புவயின் வாரா ஊடற்கு மேற்கோளாக "எவ்வி யிழந்த" என்னும் பாடலைக் காட்டியிருத்தலுங் காண்க.

இனி, இங்ஙனமே அகநானூற்றில் நக்கீரராற் பாடப்பட்டதாக வுள்ள "நின்வாய் செத்து" (126) என்னும் பாடலும் இவ் விரு துறைக்கும் ஏற்றதாயுள்ளது. அப் பாடலில் "திதியனொடு பொருத வன்னி போல, விளிகுவை.......மின்னேர் மருங்குற் குறுமகள், பின்னிலை விடாஅ மடங்கெழு நெஞ்சே" என்னு மடிகள் உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைவன் தன்னெஞ்சை நோக்கி, அவள் ஊடல் தீராளாகவும் நீ அவள் பின்னிற்றலை விடுகின்றாயில்லை என்று கூறியதாகக் கோடற்கும், அல்லகுறிப்பட்டு மீளும்போது தன்னெஞ்சை நோக்கி, அவள் வெறுத்துக் குறிக்கண்வாரா தொழியவும் நீ அவளை நினைத்துப் பின்னிற்றலை விடுகின்றாயில்லை என்று கூறியதாகக் கோடற்கும் ஏற்றதாதலறிக. இப்பாடல் இவ்விரு துறைக்கே யன்றித்

தோழியைப் பின்னின்ற தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியதாகக் கோடற்கும் ஏற்றதெனக் கூறப் பட்டுள்ளது.

## பழமொழிகள்

பழமொழிகள் எனப்படுவன, தொன்று தொட்டுப் பரவை வழக்கினுள் வழங்கப்பெற்றுவரும் மூதுரைகளேயாம்; இவை நன்னெறி காட்டும் பொருட் செறிவுடையன; இவற்றுள் நானூறு பழமொழிகளை யமைத்துப் பாடப்பட்ட நூலே பதினெண் கீழ்க்கணக்குள் ஒன்றாய பழமொழியாம்; இவை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன; இவற்றுட் சில இந்நூற்கண் அமைந்திருக்குமாற்றைக் காண்பாம்.

தலைவன் தலைவியிடத்துப் பாணனைத் தூதாக விட்டுத் தான் பின்னிற்றலைக் கண்ட தோழி, தலைவனை நோக்கி,

**" குருகுகொளக் குளித்த கெண்டை யயல**
**துருகெழு தாமரை வான்முகை வெரூஉங்**
**கழனியம் படப்பைக் காஞ்சி யூர**
**ஒருநின் பாணன் பொய்ய னாக**
**உள்ள பாண ரெல்லாங்**
**கள்வர் போல்வர்நீ யகன்றிசி னோர்க்கே "** (127)

என நகைச்சுவை தோன்றக் கூறுகின்றாள். இதன் கண், முன் தலைவனால் விடுக்கப்பட்ட பாணனொருவன் பொய் கூறினன் என்பதும், அதனால் இப்பொழுது முன்னிற்கும், தலைவனுடைய பாணனும்

பொய்யன்போலக் காணப்படுகின்றான் என்பதும் புலனும். இக்கருத்துக்கேற்பக், குருகாற் கௌவப் பட்டுத் தப்பி நீருட் குளித்த கெண்டை, தனக்கு அயலிலுள்ள வெண்டாமரை முகையை, அந்நாரை யென்று கருதி அஞ்சும் வயலூரன் எனத் தலைவன் சிறப்பிக்கப் பட்டிருத்தலுங் காண்க. ஒரு பாணன் பொய்யனானமையால் பொய்யனல்லாத பாணனும் பொய்யனாகக் காணப்பட்டது போல, நாரை தீய தானமையால், தீயதல்லாத (நாரைபோற் றோற்ற முடைய) வெண்டாமரை முகையும் தீயதாய் வெரு வற்குக் காரணமாயிற்று என்பதாம். இங்கு "அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்ற பழமொழி நினைக்கத் தக்கதாம். ஈண்டுப் பாணனைப் பொய்யனெனத் தோழி கூறியதாகப் பாடிய ஓரம் போகியார் ஐங்குறு நூற்றில் தாம் பாடிய "அஞ்சி லோதி" (49) என்னும் பாடலில் தலைவி கூற்றாக "யாண ரூரநின் பாண்மகன், யார்நலஞ் சிதையப் பொய்க்குமோ வினியே" என நகைச் சுவைபடக் கூறியிருத்தலும் அறிக.

பரத்தைபாற் சென்று வந்த தலைவன் தோழியை வாயில் வேண்ட, அவள் அவனை நோக்கி, 'நீ பரத் தையரொடு கூடி நீர்விழா ஆடியதற்கேற்ற அடை யாளங்களொடு வருகின்றாய், இவ்வூரார், 'ஒரு பசு வால் வரும் ஊதியத்தைப் பெற்று உயிர்வாழுஞ் சீரில்லாத இவன் வாழ்க்கை இவ் விளவழகி வந்த தனால் இப்பொழுது விழாவை யுடையதாயிற்று,' என்று கூறுவர்; இங்ஙனம் நினக்கு மகிழ்வும் பெரு மையும் அளித்த தலைவியைப் புறக்கணித்தாய்' என்று

7

கூறி மறுத்தாள். (295) இங்கே "ஏர்பிடித்தவன் என்ன செய்வான் பானைபிடித்தவள் பாக்கியம்" என்னும் பழமொழியும், இதனை நினைத்துப் பிற்காலப் புலவர் ஒருவர் பாடிய "பானை பிடித்த முகூர்த்தத்தி னல்வந்த பாக்கியமே" என்ற அடியும் நினைவிற்கு வருகின்றன. இங்கு "ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை" யென்ற கருத்து,

"சிறப்புஞ் சீரு மின்றிச் சீறூர்
நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை
ஓரா யாத்த ஒருதூண் முன்றில்
ஏதில் வறுமனை" (369)

என அகநானூற்றிலும் வருதல் காண்க. தலைவி வந்த பின்பே தலைவனுக்குச் செல்வம் உண்டாயிற்றென்பதை "விழவுமுத லாட்டி" (10) என்று தலைவியை ஓரம்போகியார் கூறுதலாலும் அறிக.

வாயில் வேண்டிய தலைவனுக்குத் தோழி மறுத்ததாக வரும் மற்றொரு பாடலில், 'நீர் நீடாடிற் கண்ணுஞ் சிவக்கும்; தேனும் பன்முறை யுண்டார் வாயிற் புளிக்கும்; அவைபோல, நெடுங்காலம் பழகினமையால், முன் உனக்கு இனிய எம்பால் இப்பொழுது வெறுப்புளதாமாயின் எம்மை எம் தந்தை இல்லத்துக்கு அழைத்துச் சென்று விடுவாயாக' என்கின்றாள். (354) இவ்வாறு சொல்லாமல், தந்தையில்லத்துக்குத் தாமே சென்று விடுதலை இன்றுங் காணலாம். ஈண்டுப் "பழகப் பழகப் பாலும் புளிக்கும்", "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம்" என்னும் பழமொழிகள் நினைவு கூரத்தக்கன.

## உவமைகள்

உவமை கூறுவார்க்கு இன்றியமையாததாகிய உற்றுநோக்கும் பெற்றியிற் றலைசிறந்த புலவர் பெருமக்கள், சில அடிகளாலாகிய செய்யுட்களை யுடைய இந்நூற்கண்ணுஞ் சிறந்த பல உவமைகள் கூறியுள்ளனர். அவற்றுட் சிலவற்றைக் கூறுகின் றேன்.

தலைவன், தலைவி விரும்பியவாறு ஒழுகினன் என் றுரைக்குங் காதற் பரத்தை, தலைவனுக்கு ஆடிப் பாவையை உவமித்தாள்; கண்ணாடியிற் றோன்றும் உருவம், முன்னின்றார் தம் கை கால்களைத் தூக்கினால் தானும் தூக்குவதுபோலத், தலைவன் தலைவிக்கு அடங்கி அவள் மனம்போலொழுகினன் என்பதாம். (8)

தலைவியின் மெலிவுக்குத் தோழி, நல்ல மூட்டு வாயை யுடைய செப்பில் அடைத்துவைப்பத் தனித்த பூவை உவமை கூறினள். (9)

பரத்தையிற் பிரிந்த தலைவனுக்குத் தூதாக வந்த பாணர் முதலியோரை நோக்கித் தோழி மறுத் துக் கூறுவதாக வரும்

"தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅ ராயினுங் கையின்
ஈர்த்தின் புறூஉ மிளையோர் போல
உற்றின் புறேஎ மாயினு நற்றேர்ப்
பொய்கை யூரன் கேண்மை
செய்தின் புற்றனெஞ் செறிந்தன வளையே" (61)

என்னுஞ் செய்யுளிற் காணப்படும் உவமையின் நயமும் நுண்மையும் உற்றுணர்ந்து மகிழத்தக்கன. சிறுவர், பெரியர் ஊருந்தேரை ஊர்ந்து இன்புறுவிடினும் சிறுதேரை ஈர்த்துத் தாமும் அப்பெருந் தேரூர்வார் அடையும் மகிழ்வை அடைவதுபோல, யாம், தலைவனைக் கூடிப் பரத்தையர் பெறும் மெய்யுறு புணர்ச்சியைப் பெற்று இன்புறேமாயினும் அவன் நட்பைப் பெருக்குதலால் அப் பரத்தையர் பெற்ற இன்பத்தையே பெற்றேம்; அதனால் எம் வளைகள் கழன்றில என்பதாம். சிறுவர் பெருந் தேரை நினைத்து மகிழ்வது போல, யாம் தலைவனை நினைத்து மகிழ்கின்றேம்; நினைவளவில் மகிழ்ச்சியல்லது எமக்குக், கூடுதலாலுண்டாம் மகிழ்ச்சியை அவன் தந்திலன் என்பதைப் புலப்படுத்தி உடன்பாடின்மையைத் தெரிவித்தாள்.

தலைவி வல்லளாயின் யான் கைக்கொண்ட தலைவன் மார்பை என்னிடமிருந்து மீட்டுக்கொள்வாளாக என்று கூறும் பரத்தை, அதற்குவமையாக, எழினி தன் நிரையைக், கைக்கொண்ட பகைவரிடமிருந்து மீட்டுக் காத்தலைக் கூறினள். (80)

தலைவன் தலைநாளன்ன அன்பினன் என்று கூறி வந்த தூதை ஏற்றுக்கொள்ளுந் தலைவி, அதனைத் தோழியிடம் புலப்படுத்துங்கால், "நெய்பெய் தீயின் எதிர்கொண்டு" என்றாள். நெய் பெய்யப்பட்ட தீயைப்போல, விரைந்தெழுந்து அத் தூதை ஏற்றுக் கொள்வோம் என்பதாம். (106)

பரத்தைபாற் சென்று, வாயில் வேண்டி வந்த தலைவற்கு, நீ இங்கு வந்தாற் பரத்தையர் பழி

TAMIL SANGAM

கூறுவர் ; ஆதலின் வாரற்க என மறுக்குந் தோழி, தலைவனைத் தலைவி கவர்ந்து தன்பால் இருத்திக்கொள் வாளோ என்னும் அச்சத்தாற் பரத்தையர் பழி கூறுவர் என்பதற்கு உவமையாக, மனையிலுறையும் கோழிப் பேடை வெருகினந் தன் பிள்ளையைக் கவருமோவென அஞ்சி அழைத்ததைக் கூறினள். (139)

தலைவன் தன்பாற் பரத்தைமை இன்மை கூறித் தெளிவிக்கவுந் தெளியாது வேறுபட்ட தலைவி கூற்றாக வரும்

"சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டிற்
றெற்றென விறீஇயரோ வைய மற்றியாம்
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர், பசுமீன் சொரிந்த மண்டை போல
எமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே" (169)

என்னும் பாடலில், தலைவனை நோக்கி நும்மொடு நகைத்த எயிறுகள் விரைவில் முறிக என்றுரைக்குந் தலைவி அதற்குவமையாக, யானையின், மலையைக் குத்திய கொம்பு முறிதலையும், தன் இன்னுயிர் தனக்கு இன்பந் தாராமையால் அவ்வுயிரிடத்துத் தனக்கு வெறுப்புண்டாதற்கு உவமையாகப், பாண ருடைய பசுமீன் சொரிந்த மண்டை (பாத்திரம்) புலால் நாற்ற முடைமையால், அம் மண்டையிடத்து அப் பாணர்க்கே வெறுப்புண்டாதலையுங் கூறுதல் கண்டுணர்க. இப்பாடல் தலைவியின் கடுஞ்சினத் தைக் காட்டுகின்றது.

வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைவி "நெருஞ்சிக், கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்கு, இனிய செய்தநங் காதலர், இன்னு செய்த னேமென் னெஞ்சே" (202) என்கின்றுள்; இதன்கண், தலைவன் முன் இனியனுயிருந்து இப்பொழுது இன்னுதவனுக இருக்கின்றுன் என்பதைப் புலப்படுத்த, நெருஞ்சி மலர் கட்கினிதாயிருந்து பின் ஊற்றிற்கு இன்னுதை முள்ளைத் தருதலை உவமை கூறியிருத்தல் கண்டு இன்புறத் தக்கது.

தலைவனுக்குத் தூதாகப் புக்க தோழி, தலைவியிடம் 'நீ முன் தலைவன்பாற் பேரன்புடையையாயிருந்தாய் அதற்கு மாருக இப்பொழுது புலத்தல் தகாது; இனியும் அவ்வாறே யன்புடையையாயொழுகல் வேண்டும்' என்றுள். அதற்குத் தலைவி, 'முற்காலத்து (களவுக் காலத்து) வேற்றிடத்திலிருந்து வரவேண்டியவரா யிருந்தாராதலின் அப் பிரிவு புலக்கத் தக்கதன்று; இப்பொழுது கற்புக்காலத்து) வேற்று நாட்டினருமல்லர், வேற்றூரினரு மல்லர்; அண்மையிலே ஓரில்லத்திருக்குமியல்புடையார், என்னை நீங்கிப் பரத்தைமை உடையரா யிருக்கின்றனர்; ஆதலால் இப்பொழுது அவருக்காகப் பரியேன்' என்கின்றுள். ஈண்டுத் தலைவன் தன்னை நீங்கி யொழுகுதற்கு உவமையாகக் "கடவு ணண்ணிய பாலோரை" (203)க் கூறுகின்றுள். முனிவரை அணுகினர் தம் தூய்தன்மை காரணமாக அஞ்சி விலகி யொழுகுதல் போலத், தலைவன் என்னை விலகி யொழுகுகின்றுன் என்பதாம். இவ்வுவமையால் தலைவனது பரத்தைமை

யாகிய தாய்தன்மையும் தலைவியின் தூய்மையுங் குறிப்பாற் புலனாகின்றன. இனிக் "கடவு ணண்ணிய பாலோர் போல, ஒரீஇ யொழுகு மென்னை" என்பதற்கு முனிவரை அணுகினர் அவர்களுடைய நன் மொழியாற் பற்றற்றவராய் மகளிரை அணுகாது விலகுதல் போல என்னை விலகி ஒழுகுகின்றான் எனப் பொருள் கூறினும் பொருத்தமுடையதே. இது தலைவன் பரத்தைமை யுடையனாதலை நினைந்து நகையாடியதாம். ஈண்டு ஐங்குறுநூற்றில் வரும் (19) "ஊர னாகலிற் கலங்கி, மாரி மலரிற் கண்பனி யுகுமே" என்னும் பகுதியும் இப் பாடற் றலைப்பில் "எதிர்ப்பாடின்றி ஒரூர்க்கண்ணே உறைகையினாலே ஆற்றேனாகின்றேன்" என எழுதப்பட்டிருத்தலும் நினைக்கத் தக்கன.

தலைவனுக்கு வாயிலாகப் புக்க தோழிபால் தலைவி, தலைவர் இங்கு வரினும் 'என்னோடு அளவளாவாமற் செல்வர்; அவருக்கு என்பால் அன்பிலதாயிற்று' என்று கூறுகின்றாள்; அப்பொழுது, தலைவன், தன்னைக் கண்டும் அயலாள் போல வெறுத்து ஒதுக்குதற்கு உவமையாக, ஏதிலாளர் சுடலையையும், அவன் வெறுத்தொதுக்குதலால் தன் காமம் அழிதலின் விரைவிற்கு உவமையாக, வில்லுமிழ் கணையின் விரைவையுங் கூறுகின்றாள். (231)

தலைவனுக்குத் தோழி வாயில் நேருங்கால் அவனை நோக்கி, நீ எமக்கு இன்னாதன பல செய்யினும் யாம் நின்னை யின்றியமையும் வன்மையில்லேம் என்றுரைக்கின்றாள்; அதற்கு உவமையாக, உழவர்

நெற்பயிருக்குக் களையாயிருந்த நெய்தலைப் பறித்து வாடுமாறு வரம்பிற் போகட்டாலும், அந்நெய்தல் வேற்றிடஞ் செல்லாது மீண்டும் அச் செறுவிலே பூத்தலைக் கூறியிருத்தல் உற்று நோக்கத்தக்கது. (309)

காஞ்சிப்பூங் கொத்துக்குப் பயற்றுக் கொத்து உவமை. (10)

முள்ளிச் செடியின் முள்ளுக்கு அணிற் பல்லும், நீருக்கு மணியின் நிறமும் உவமை. (49)

ஞாழற் பூவிற்கு வெண்சிறு கடுகு உவமை; (50) மற்றோரிடத்தில் (397) ஞாழற் பூவிற்கு (ஆரல் மீன்) முட்டை உவமிக்கப்பட்டிருத்தலும் ஈண்டு அறிதற்பாலது.

மலையிற் படர்ந்துள்ள இற்றிமரத்தினது வெள்ளிய வேருக்கு மலையிலிருந்து விழும் அருவி உவமை. (106)

மருதக் கருப்பொருளல்லாதன மருதத்திற் கூறப்படுதற்கும், அகநானூறு, நற்றிணை முதலியவற்றில் மருதம் என்ற தலைப்பிற் களவிற் குரிய சில துறைகள் காணப்படுதற்கும் அமைதி **தொல்காப்பியத்திற்** கண்டுகொள்க.

## முடிவுரை

இதுகாறுங் கூறியவாற்றால், மருதத் திணையின் முதல் கரு உரிப்பொருள்களிவையென்பதும், உரிப்பொருளாய ஊடலின் சிறப்பும், குறுந்தொகைப்

பாடல்களிற் காணப்படும் மருத நிலத்தின் இயல்பும், தலைவர் பெயர்களும், ஊர்ப் பெயர்களும், தலைவி கூற்று, தோழி கூற்று, பரத்தை கூற்று, தலைவன் கூற்றுக்கள் இன்னின்னவாறு நிகழ்கின்றன வென்பதும், பழமொழிகளும், உவமைகளும், பிறவும் ஒருவாறு புலனும்.

இன்னும் நுணுகி ஆராயின் ஆழமுடைத்தாதலின், அறிஞர்கள் இந்நூலை ஆராய்ந்துணர்ந்து தமக்கும் பிறர்க்கும் பயன்படுத்துவாராக.

# ௪. பண்டைத் தமிழரசரும் புலவரும் *

இத்தண்டமிழ் நாட்டைப் பன்னெடுங்காலம் ஆண்ட பழந்தமிழ்க்குடி மக்களாகிய சேரபாண்டிய சோழர்களே, பண்டைத் தமிழரசராவர்; இதனை ''மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர், முரசு முழங்கு தானை மூவர்'' [புறம் 35] என்னும் வெள்ளைக் குடி நாகனார் பாடலான் உணரலாம். அவ்வரசர் காலத்திலிருந்த நல்லிசைப் புலவர்களே ஈண்டுப் புலவ ரெனப் பட்டவராவர். ஈண்டுக் குறிக்கப் பெற்ற காலம் சங்ககாலமாகும். அவ்வரசர்களின் கலை வன்மை, செங்கோன்மாண்பு, வீரத்திறன், வள் ளன்மை முதலிய சிறப்பியல்புகளையும், புலவர் பெரு மக்களது உயர்ந்த பண்புகளையும், புலவர்மாட்டு அரசர் வைத்த நன்மதிப்பினையும், நட்பையும் சில எடுத்துக்காட்டுகளின் மூலம் விளக்குதலே இக் கட்டுரையின் நோக்கமாகும். இவற்றை உணர்தற் குப் புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய சங்க நூல் கள் துணையாவனவாம்.

இவற்றுள், அவ்வரசர்தங் கலைவன்மையைப் பற்றிக் கூறுங்கால், அதனைப் பிறர் புகழ்வதாகக் கூறும் எடுத்துக் காட்டைவிட, அவர்தம் பாடல்களே தக்க சான்றாகும் ஆதலின், சேரருள், பாலைபாடிய பெருங்கடுங்கோ, சேரமான் கணைக்கால் இரும் பொறை முதலியோரும், பாண்டியருள், ஒல்லையூர்

* 'அன்பளிப்பி'ல் வெளிவந்தது.

தந்த பூதப்பாண்டியன், பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் முதலி யோரும், சோழருள், சோழன் நலங்கிள்ளி, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் முதலி யோரும் பாடியவை சங்க நூல்களிற் காணப் படுதல் கொண்டு உணரலாம். பூதப்பாண்டியன் தேவி பெருங் கோப் பெண்டு பாடிய பாடல் புறநானூற்றிற் காணப்படுதலால் அவ்வரசர் மகளிரும் நன்கு கற்றுப் பாடலியற்றும் பெற்றி வாய்ந்திருந்தனர் என்பது புலனும். அவர்தஞ் செங்கோன்மாண்பை "நீதி மன்றங்களில் அறநெறி தவறிய ஒருவனை வைத்துக் கொடுங்கோல் செய்தேனாகுக" என ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனும், "என் நிழலில் வாழும் குடிகள் தாம் சென்றடையும் நிழலைக்காணாது எம்மிறைவன் கொடியன் எனக் கண்ணீர்விட்டுப் பழிதூற்றுங் கொடுங்கோலேனாகுக" எனப் பாண்டியன் தலை யாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் வஞ்சினங் கூறுதலானும், குடிமக்களை இறைவேண்டி இரக்கும் ஆண்மையில்லாத சிறியோன் அரசுரிமை யைப் பெற்றால் அது அவனுக்குத் தாங்கமுடியாத கனமுடையதாகும்" எனச் சோழன் நலங்கிள்ளி கூறுதலானும், "நின்னிழல் வாழ்வோர் சூரியனது வெம்மை யல்லது வேறு வெம்மையை அறியார்" எனச் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும் பொறையைக் குறுங் கோழியூர் கிழார் பாடுத லானும், பிறவற்றானும் உணரலாம்.

அவர்தம் வீரத்திறனை "யமன் கோபித்துவரி னும் அதனையும் மாற்றும் வலியுடையை" என ஒரு

சேரனிடம் ஒரு புலவரும், "கருக் கொண்ட மகளிர் விரும்பி யுண்டாலல்லது பகைவரால் உண்ணப்படாத மண்ணையுடையை" என மற்றொரு சேரனிடம் மற்றொரு புலவரும் கூறுதலாலும், "தேர்மொட்டுப் பொலிவுபெற நின்றவன் யாவனோ? அவன் கண்ணிவாழ்க; ஐம்படைத்தாலிகழித்தது மிலன்; பாலுண்டலை ஒழித்து உணவும் இன்றுதான் உண்டான்; தன்மேல் வெகுண்டு வந்த வீரரை மதித்ததும் அவமதித்ததும் இலன்; அவரைத் தான் கொன்றதற்கு மகிழ்ந்ததும் இவ்வாறு செய்தோம் என்று தன்னை மேம்பட நினைத்ததுமிலன்" என ஒரு பாண்டியனை ஒரு புலவர் பாராட்டுதலாலும், "சோழனோடு மாறுபட்டோர் வாழக்கண்டது மில்லை; அவன் அடியடைந்தோர் வருந்தக்காணுதல் அதனினும் இல்லை" என ஒரு சோழனை ஒரு புலவர் புகழ்தலாலும், அவர் தம் வெற்றியுணர்த்தும் பிற வரலாறுகளாலும் நன்கு தெளியலாம். அவர் தம் வள்ளன்மையை "இந்திரர் அமிழ்தம் இயையினும் தனித்துண்ணார்; யாரிடத்தும் வெறுப்பிலர்; புகழ் கிடைக்கின் தம்முயிரையுங் கொடுப்பார்; பழிவருமாயின் அதனால் உலகமுழுதும், பெறினும் கொள்ளார்; தமக்கென முயலாத வலிய முயற்சியையுடைய பிறர்க்கென முயலும் அத்தகையார் உண்மையால் இவ்வுலகம் உளது" எனக் கடலுண்மாய்ந்த இளம்பெரு வழுதி கூறுதலானும், "ஈயென இரப்பாராயின் என் அரசாட்சியைக் கொடுத்தல் எளியது என் இனிய உயிரையுங் கொடுப்பேன்" எனச் சோழன் நலங்கிள்ளி கூறுதலானும், "நின்னைப்

பாடிய செந்நா, பிறர்புகழைச் சொல்லா வண்ணம் நினக்கென ஒன்றையும் பாதுகாவாமற் கொடுக்கும் எங்கோவே'' என ஒரு சேரனிடம் ஒரு புலவர் கூறுதலானும் அறியலாம். சேரர்தங் கொடைப் பெருமையைப் பதிற்றுப்பத்தில், ஒரு சேரன் ஒரு புலவர்க்கு நாற்பது நூறுயிரம் பொன் கொடுத்துத் தான் ஆள்வதிற் பாகம் கொடுத்தான் என்பதும், மற்றொரு சேரன் மற்றொரு புலவர்க்கு நூறுயிரங் காணங் கொடுத்து ஓர் மலையிலேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெலாம் கொடுத்தானென்பதும், பிறவும் காணப்படுதல் கொண்டும் நன்கறியலாம்.

இவ்வாறே ஒவ்வொரு பண்பையும் விரித்துக் கூறிற் பெருகுமாதலின் இன்றியமையாத சில கூறிய இவ்வளவில் நிறுத்திப் புலவர்தம் சிறப் பியல்புகளைக் கூறுவேன்.

**'' பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்**
**செய்யா கூறிக் கிளத்தல்**
**எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே'' (புறம் 148)**

என ஒரு புலவரும்,

**'' வையக வரைப்பிற் றமிழகங் கேட்பப்**
**பொய்யாச் செந்நா நெளிய வேத்திப்**
**பாடுப வென்ப பரிசிலர்'' (புறம் 168)**

என ஒரு புலவரும் பாடுதலால் இல்லாதவற்றைச் சொல்லாத பொய்யா நாவினர் என்பதும்,

**'' இன்றும், பரணன் பாடினன் மற்கொல்'' (புறம் 99)**

எனப் பரணரை ஒளவையாரும்,

*“ பொய்யா நாவிற் கபிலன் பாடிய*
*மையணி நெடுவரை ” (புறம் 174)*

எனக் கபிலரை நப்பசலையாரும் புகழ்ந்திருத்தலால் பொருண்மையின்றிச் சிறந்தாரை உயர்த்துக் கூறும் நல்லியல்பினர் என்பதும், பெருஞ்சித்திரனார் அதிய மானெடுமானஞ்சியுழைச் சென்றபோது அவன் தம்மை நேரிற் காணாது இதுகொண்டு செல்க என்று பிறர் மூலம் பரிசில் கொடுப்பக் கொள்ளாது,

*“ காணா தீத்த இப்பொருட் கியானோர்*
*வாணிகப் பரிசில னல்லேன் பேணித்*
*தினையனைத் தாயினும் இனிதவர்*
*துணையள வறிந்து நல்கினர் விடினே ”*
*(புறம் 208)*

எனக் கூறுதலானும், வெளிமான் தம்பி சிறிது பரிசில் கொடுப்ப அவர் கொள்ளாது சென்றமையாலும், சேரமான் குடக்கோச் சேரலிரும்பொறை பரிசில் கொடுப்பதற்குக் காலந்தாழ்க்க அவனை எதிர் பாராது பெருங்குன்றூர்கிழார் சென்றமையாலும், பிறவற்றாலும் தம்மை மதியாரிடத்தும், சிறிது கொடுத்தாரிடத்தும், கொடுப்பதற்குக் காலந் தாழ்த் தாரிடத்தும் பரிசில் பெறாத பெருந்தன்மையுடையர் என்பதும், இளங்கண்டீரக்கோவும் இளவிச்சிக் கோவும் ஒருங்கிருந்தவழிச் சென்ற பெருந்தலைச் சாத்தனார் கண்டீரக்கோவைத் தழுவி விச்சிக் கோவைத் தழுவாராக, அவன் என்னை ஏன் தழுவ வில்லை எனக் கேட்டபோது, புலவர், உன் முன்னோர் பாடுநர்க்கு அடைத்த கதவுடையராதலின் உன்னைத்

தழுவவில்லை; கண்டீரக்கோ, மகளிரும் ஆடவரும் கொடையிற் சிறந்து விளங்கும் நற்குடிப் பிறந்தவ ணாதலின் அவனைத் தழுவினேன் எனக் கூறியதனால் புலவரை மதியாதவரைத் தாமும் மதியார் என்பதும், "வேந்தே! வெண் கொற்றக்குடை வெயில் மறைத்தற்குக் கொள்ளப்பட்டதன்று, குடிகட்கு நிழல் செய்தற்பொருட்டுக் கொள்ளப்பட்டது" எனவும், "புலவர்மாட்டுப் பொதுநோக்கொழிக" எனவும் பிறவுங் கூறுதலால் அரசர்க்கு உறுதியை அஞ்சாமற் கூறும் நெஞ்சினர் என்பதும், சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் சந்துசெய்தற்குக் கோவூர்கிழாரும், மக்கண்மேற்சென்ற கோப்பெருஞ் சோழனைச் சந்துசெய்யு நோக்கத்தாற் புல்லாற்றூர் எயிற்றியனாரும், வையாவிக்கோப் பெரும்பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியை அவனோடு சேர்த்தற்குப் புலவர் பலரும் பாடி யிருத்தலால் மாறுபட்டாரைச் சேர்க்கும் ஆற்றலும் நற்குணமும் வாய்ந்தவரென்பதும், பிறவும் புலவர் பெருமக்களிடத்தமைந்த சிறப்பியல்புகளாம்.

இனிப், புலவரிடத்து அரசர் வைத்திருந்த மதிப்பு எத்தகையதென்பதை உற்று நோக்கின் அது மிகவும் வியப்பைத் தருவதாகும். புலவர்மாட்டுச் சேரர் நன்மதிப்பு வைத்திருந்தனர் என்பதற்குச் சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின் வரலாறு ஒன்றே தக்க சான்றாகும்; அஃதியாதெனின் - முற்காலத்து, அரசர், முரசில் தெய்வமிருப்பதாகக் கருதி அதை நீராட்டி அலங்கரித்துச் சிறந்த

கட்டிலில் வைத்துப் பூசை செய்வதும், அக்கட்டிலில் யாரேனும் ஏறினல் அவர்களைக் கொல்வதும் வழக்கம்; சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறைபாலும் அவ்வியல்பிருந்தது ; ஒருநாள் வழக்கப்படி முரசு நீராட்ட எடுத்துச் செல்லப் பெற்றிருந்தது ; அவ்வமயம் நெடுந்தூரமிருந்து அவண் வந்த மோசிகீரனுர் எனும் புலவர் களைப்பு மிகுதியால் முரசு வைக்கும் கட்டில் என்பதறியாது அதில் ஏறித்துயின்றனர் ; அஃதறிந்த அரசன் புலவராதலின் அவரைக் கொல்லாததோ டமையாது அவர் நன்கு துயிலும் வண்ணம் கவரிகொண்டு வீசினன் ; பின்னர் அதுகண்ட புலவர் அவனைப் பெரிதும் பாராட்டினர். என்பதாம். அன்றியும் " தன் வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்து பாடுதற்கு இன்று கபிலரில்லையே " என்று சேரன் மாந்தரஞ் சேரலிரும்பொறை வருந்தியதாகப் பொருந்தி லிளங்கீரனுர் கூறுவதும் அதனை வலியுறுத்துவதாம்.

" ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் தலைவ ஞக, உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற், புலவர் பாடாது வரைகவென் னிலவரை " (புறம் 72) எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடுவதனல் பாண்டியர் புலவர்மாட்டும் அவர் பாடலிடத்தும் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தனர் என்பது புலனும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக், கோவூர் கிழார், கொல்லலாகாதென அவனைப் பாட, அவன்

கொல்லாது விட்டமையாலும், சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும், தாமப்பல் கண்ணன் என்னும் புலவரும் வட்டாடும்போது புலவர் கைகரப்பச் சோழன் வட்டுக்கொண்டெறிந்தான்; அவனைப் புலவர் வெகுண்டு நீ சோழன் மகனல்லை என வைதனர்; அதுகேட்ட சோழன் புலவரைச் சினவாது நாணியிருந்தனன். என்னும் வரலாற்றானும் சோழர்க்குப் புலவர்பாலிருந்த பெருமதிப்பு விளங்குவதாம்.

இனிக், கோப்பெருஞ்சோழனுக்காகப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் உயிர்துறந்த வரலாறொன்றே புலவர்க்கும் அரசர்க்கும் இருந்த ஒப்புயர்வற்ற நண்பின் மாண்பை விளக்குவதாம். இவ்வரலாறு பலருமறிந்ததாகலின் விரிக்கப்படவில்லை.

இங்ஙனம் பெருஞ் செல்வராய பண்டைத் தமிழரச ரெல்லாம் செல்வத்தால் வரும் இன்பமொன்றையே கருதிச் செருக்கில் மூழ்காது, கல்வியின் அருமை யுணர்ந்து நன்கு கற்றுக், கல்வியிடத்தும், கற்றார் மாட்டும் பெரிதும் மதிப்பு வைத்திருந்தது போல, இக்காலத்துச் செல்வர்களும் கல்வியிடத்தும், கற்றாரிடத்தும் மதிப்பு வைத்துப் போற்றுவாராயின் அதுவே இக்கட்டுரையின் பயனாகும்.

---

# ரு. ஓரருஞ் செய்யுள்*

அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் பெருமானுடைய பாடல்கள் ஆயுந்தொறும் ஆழமுடையன என்பது அறிஞ ரனைவர்க்கும் ஒப்பமுடிந்ததே. அவரவர் அறிவிற்கேற்ப நயங்கண்டு எழுதுதலையும் சொற்பொழிவாற்றுதலையும் அறிந்து மகிழ்கின்றேம். அப் பாடல்களுள் ஒன்றன் நயத்தையும் அதற்கின்றியமையாத வரலாற்றுப் பகுதியையும் ஈண்டுத் தருகின்றேன்.

திருவாரூரில் மனுவேந்தன் கோல் கோடாது அரசுபுரிந்து வருங்காலத்து, ஒருநாள் அவன் புதல்வன் அரசுலாந் தெருவிற் படைசூழத் தேரிற் சென்றபோழ்து, ஓர் இளைய ஆன்கன்று துள்ளி அவன் தேர்க்காலிற் புகுந்து இறந்தது ; அதனைக் கண்ட தாய்ப்பசு அலறி ஓடி அரண்மனை வாயிலில் தூங்கிய மணியைத் தன் கொம்பினால் அடித்தது. இம்மணி, குறையுடையார், தங்குறையை அரசனுக்கு அறிவித்தற்பொருட்டு அடித்தற்காக அரண்மனை வாயிலிற் கட்டப்படுவது ; இது கட்டப்படுகிற வழக்கம் உண்டென்பதும், இஃது அடிக்கப்படாமல் எக்குறையுமின்றி அரசாண்ட பேரரசர் இருந்தனரென்பதும்,

* 1941 ஏப்பிரல், 'இந்திரா'வில் வெளிவந்தது.

"மறைநா வோசை யல்ல தியாவது
மணிநா வோசை கேட்டது மிலனே"

'ஆடுங் கடைமணி நாவசையாம லகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்தபிரான்"

"ஆருமனதில் விசாரத்தா
லாராய்ச்சி மணியைத் தொடாமலே"

என்னும் பகுதிகளால் அறியலாம். நம் சேக்கிழாரும் "தூங்கிய மணி" என, இதுவரை உறங்கியதெனக்கொள்ளுமாறு கூறிய நயங்கண்டு இன்புறத்தக்கது. மணியோசை கேட்ட மன்னன் வாயிலில் வந்து மந்திரிகளை நோக்கி, ஆவுக்கு நேர்ந்தது யாது என்று வினவ, ஓரமைச்சன் நிகழ்ந்தவற்றைத் தெரிவித்தனன்; கேட்ட வேந்தன் பெருந்துயருழந்து, ஆவுற்ற துயரை யானடைவதே செய்யத் தக்கதெனத் துணிந்து, ஓரமைச்சனை நோக்கித் தன் மைந்தனைத் தேர்க்காலில் வைத்துக் கொல்லுமாறு கட்டளையிட்டான்; அவ்வமைச்சன் இளவரசைக் கொல்ல மனம் இயையாமையாலும், அரசன் கட்டளையைக் கடக்க இயலாமையாலும் தன்னுயிரைத் துறந்தனன்; இஃதறிந்த அரசன், தானே தன் மகனைத் தேர்க்காலில் வைத்துக் கொன்றான். தனக்கென வாழாப் பிறர்க் குரியாளனாகிய வேந்தன் முன்னே, கண்ணுதற் பெருமான் உமையொடுங் காட்சி கொடுத்தருளினர்; அவர் திருவருளால் அப்பொழுதே ஆன்கன்றும், அமைச்சனும், அரசிளங் குமரனும் உயிர்பெற்றெழுந்தனர். இவ்வமயத்துள்ள மகிழ்ச்சியைச் சேக்கிழார்,

"அடிபணிந்த திருமகனை ஆகமுற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயர நீங்கினா னிலவேந்தன்
மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரனீங் கியதன்றே" (48)

என்னும் அருமைத் திருப்பாடலாற் புலப்படுத்து கின்றார். 'புதல்வன் அடியிற் பணிந்தான்; அவனைத் தந்தை மார்போடணைத்து மகிழ்ந்தான். பசு, தன் கன்று உண்டு எஞ்சி, நிலத்தை நனைக்குமாறு பால் பொழிந்து இன்புற்றது' என்பது இப்பாடற் கருத்தாம். இதன்கண் 'அடிபணிந்த' என்றதனால் புதல்வன், ஆன்கன்றின் இறப்புக்குத் தான் காரணமானமை பற்றி வந்த பாவத்தைத் துடைத்த பேரருளும், நீதிநெறி வழுவாதொழுகிய அருமையும் நினைந்து அடிபணிந்தான் என்பது புலனாகின்றது. "தன் மைந்தன்" "தன்னுடைய குலமகன்" என்று முன்னர்க் கூறியவர் ஈண்டும் 'அடிபணிந்த தன் மகனை' என்னாது 'திருமகனை' எனக் கூறியது, அரசன் மைந்தனும் நிலையிற் கொல்லப்பட்டான்; இப்பொழுது இறைவன் திருவருட் புதல்வனாய்த் திகழ்கின்றான் என்பதை அறிவிக்கின்றது. நெடிது மகிழ்ந்து அருந்துயரம் நீங்கினான் என இருப்பினும் அருந்துயரம் நீங்கி நெடிது மகிழ்ந்தான் என்பதே கருத்தாம். ஆன்கன்று, பிறரால் அறியாமற் கொல்லப்பட்டது; அரசிளங் குமரன் பெற்ற தந்தையால் அறிந்து கொல்லப்பட்டான்; ஆதலால் ஆவின் துயரத்தைக் காட்டிலும் தன் ஒரு மைந்தனை இழந்த அரசன் துயரம் பெரிதாய்ப் பொறுத்தற்கரியதாயிற்று என்பது அருந்துயரம் என்றதனால் விளங்கு

கின்றது. அருந்துயரம் என்றதற்கேற்ப நெடிது மகிழ்ந்தான் என்றது சிறப்புடைத்து. மாநிலங் காவலனுவான், பிறவுயிர்கட்குத் தன்னுலும், தன்பரிசனத்தாலும், பகைவராலும், கள்வராலும், பிறவுயிர்களாலும் வரும் ஐவகை அச்சங்களையும் தீர்ப்பவனே என்று முன்னர்க் கூறியதற்கேற்ப, மனுவேந்தன், தன் மைந்தனுல் ஆவுக்கு வந்த துயரத்தையும் அச்சத்தையும் தீர்த்து நிலவேந்தன் என்று சொல்லுதற்கு அமைந்து திகழ்கின்முனென்பது, வேந்தன் என்றமையாது நிலவேந்தன் என்று கூறியதனுல் தெரிகின்றது. மக்களுடைய மகிழ்ச்சியை அறியுமாறுபோல விலங்குகளுடைய மகிழ்ச்சியைத் தெற்றெனை அறிதல் அரிதாகலான், ஆவின் மகிழ்ச்சியையும் அன்பையும், கன்று உண்டு எஞ்சி நிலத்தை நனைக்குமாறு பால் பொழிந்தது என்று கூறுமுகத்தான் அறிவித்தார். இளங்கன்று துள்ளி விளையாடி மகிழ்தல் இயல்பாகலான் ஆவின் மகிழ்ச்சியை அறிதலினும் அதன் கன்றின் மகிழ்ச்சியை அறிதல் எளிதென்னும் கருத்தால் 'மகிழ்ந்துண்டு' என ஆன்கன்றுக்கு மகிழ்ச்சி கூறினர். இறக்குங்கால் துன்பத்துடன் இறந்தமையால் உயிர் பெற்றவுடன் கன்று மகிழ்ந்ததென்பதும் இதனுலறியத்தக்கதாம். அரசிளங் குமரன் இறக்குங்கால் யான் குற்றத்துக்காகக் கொல்லப்படுகின்றேன் என்று கருதித் துன்பின்றி இறந்தானுதலால் அவன் உயிர்பெற்றவுடன் மகிழ்ந்து அடி பணிந்தான் எனக் கூருமையும் அறிக.

"படி நனைய வரும் பசுவும்" என்புழி வரும் பசு எனப் பிரித்து வருகின்ற பசு எனப் பொருள்

கோடலினும் அரும்பசு எனப்பிரித்துப் பிறிதொன் றற்கில்லாத சிறப்பியல்புடைய பசு எனக்கோடல் நயமுடைத்தாம். உணர்ச்சியுடன் மணியைப் புடைத்து, மனுநீதியும் இறைவனும் வெளிப்படு தற்குக் காரணமாயினமையின் அரும்பசுவாயிற்று. இக்கருத்து, மந்திரிகளை நோக்கி மன்னன் உரைப்ப தாக முன்னர் வந்துள்ள,

> " எவ்வுலகில் எப்பெற்றம்
> இப்பெற்றித் தாமிடரால்
> வெவ்வுயிர்த்துக் கதறிமணி
> யெறிந்துவிழுந் ததுவிளம்பீர் "

என்னும் பாடற் பகுதியாலும் நன்கு புலனாகும். இவ்வியல்பு பிறிதொன்றின்கட் காண்ட லருமை கருதி அரும்பசு எனவும், துயரம் பிறராற் பொறுத் தற்கருமை கருதி அருந்துயரம் எனவும் அருமை யுணர்ந்து பாடிய அழகு கண்டு மகிழத் தக்கதாம்.

இவ்விடத்துப்போலவே வேறு சில இடங்களி லும் உடம்படுமெய் நீக்கிப் பிரிக்கப்படாமல் வேறு பட உரை கூறப்படுகின்றன. உதாரணமாகத், தடுத் தாட்கொண்ட புராணத்தில் வரும்,

> " வாழிய மாமறைப் புற்றிடங்கொண்
> மன்னவ னரரு ளாலோர்வாக்குத்
> தோழமை யாக வுனக்குநம்மைத்
> தந்தன நாமுன்பு தொண்டுகொண்ட
> வேள்வியி லன்றுநீ கொண்டகோல
> மென்றும் புனைந்துநின் வேட்கைதீர
> வாழிமண் மேல்விளை யாடுவாயென்
> றரூரர் கேட்க வெழுந்ததன்றே " (127)

என்னும் பாடலின் ஈற்றடியை வாழியெனப் பிரித்து வாழ்வாயாக எனப் பொருள் கூறுகின்றனர். அங்ஙனம் பிரித்தால் மோனை நயம் இன்மையானும் ஆரூரரைக் கைலைக் கழைத்து ஆண்டிருந்து வாழுமாறு வாழ்த்தாது மண்ணிலிருந்து வாழுமாறு வாழ்த்தினர் எனலால் அத்துணைச் சிறப்பின்மையானும் அது பொருந்தாது. 'ஆழி மண்மேல்' எனப் பிரித்தால், கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் எனப் பொருள்பட்டு, மோனைச் சிறப்புமுடைத்தாய் விளங்குதல் காணலாம். பேரறிஞர்கள் தம் நுண்ணுணர்வான் ஆராயின், 'அடிபணிந்த' என்னும் இவ்வொரு பாடலிலே பல நுண்பொருள்கள் காணலாமென்பது என் துணிபாம்.

இம் மனுச்சோழன் வரலாறு, பழமொழியிற் சிறிது வேறுபாட்டுடன் காணப்படுகின்றது.

---

இப்புத்தகம் கிடைக்குமிடங்கள் :—

1. நூலாசிரியர்
2. சக்தி காரியாலயம், செஞ்சை, காரைக்குடி
3. சக்தி காரியாலயம், வடக்கு வெளி வீதி, மதுரை